Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 தை 21 ஞாயிற்றுக்கிழமை (03.02.2013) பக்கங்கள் 20 ஓசை – 126

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
T.P - 0212225969
E.Mail - info@cityhoteljaffna.com
Web - www.Cityhoteljaffna.com

நிதி மோசடி




மனதை அள்ளும்




ஆர்வமூட்டும்




அவசர சட்டம்




பெருமிதம்




## சர்வதேச சட்ட வல்லுநர் குழு இலங்கை வர அனுமதி மறுப்பு

இலங்கைக்கான விஜயத்தில் ஈடுபடுவதற்காக வழங்கப்பட்டிருந்த அனுமதியை இலங்கை அரசாங்கம் இறுதி நேரத்தில் நிராகரித்தமையினால் தமது பிரதிநிதிகள் குழுவின் விஜயத்தை இரத்துச் செய்வதற்கு அழுத்தம் விடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச சட்ட வல்லுநர்கள் சங்கத்தின் மனித உரிமைகளுக்கான அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் சட்டவாதிக்கம் சீர்குலைவு மற்றும் நீதிமன்ற சுயாதீனத் தன்மை ஆகிய விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக உயர்மட்டத்திலான சர்வதேச ஜூரர்கள் உள்ளிட்ட தூதுகுழுவினர் பெப்ரவரி முதலாம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை இலங்கைக்கான விஜயத்தில் ஈடுபடவிருந்ததாக பி.பி.சி. தெரிவித்தது.

இந்த தூதுக்குழுவின் பிரதிநிதி ஒருவருக்கு வழங்கப்படவிருந்த வீசா அனுமதி ஜனவரி மாதம் 29ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு அறிவித்துள்ளதாகவும் பி.பி.சி. குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் அந்த தூதுக்குழுவின் ஏனைய பிரதிநிதிக

(19) ஆம் பக்கம் பார்க்க

## பயணத்திற்கான தகைமை இல்லை விசா அனுமதி மறுப்பிற்கு விளக்கம்

(கொழும்பு)

இலங்கைக்கு தற்போது வருவதற்கான தகைமைகள் இல்லை என்ற காரணத்தினாலேயே சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமைகள் நிறுவனப் பிரதிநிதிகளுக்கு விசா மறுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு வருவதற்கு முன்னதாக இணையத்தளம் மூலம் விசாவுக்கான முன்-அனுமதி பெற்றவர்கள் நாட்டுக்குள் வருவதற்கான தகைமையைக் கொண்டிருக்கிறார்களா என்று ஆராய்ந்து பார்க்கின்ற வழக்கத்தின் படியே சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு வீசா மறுக்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையின் தலைமைக் கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

சர்வதே சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதிக

(19) ஆம் பக்கம் பார்க்க

# மக்கள் செல்வாக்கை அறிய தேர்தல்களை நடத்த திட்டம்?

(கொழும்பு)

மக்கள் மத்தியில் அரசாங்கத்திற்கு உள்ள செல்வாக்கை அறியும் வகையில் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றப்பிரேரணை மற்றும் அண்மைய அமைச்சரவை மாற்றத்திற்குப் பின்னரான அரசாங்கம் தொடர்பாக மக்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டைப் பரிசோதனை செய்யும் வகையிலேயே முதற் கட்டமாக மத்திய மற்றும் வடமேல் ஆகிய இரண்டு மாகாணசபைகளுக்கான தேர்தலை மே மாதம் நடுப்பகுதியில் நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குறித்த இரண்டு மாகாண சபைகளுக்குமான பதவிக் காலம் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நிறைவடையவுள்ள நிலையிலேயே 7 மாதங்களுக்கு முன்னர் இரு மாகாண சபைகளையும் கலைத்து தேர்தல் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனைத் தொடர்ந்து ஓகஸ்ட் மாதம் மேல் மற்றும் வட மாகாண சபைத்தேர்தல்களையும் 2014 ஆம் ஆண்டு ஊவா மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலும் அதற்கு பின்னர் நாடாளுமன்ற தேர்தலை

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.வருகிறார் ஜனாதிபதி

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொள்ளும் ஜனாதிபதி பல நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ்.போதனா வைத்திய சாலையின் ஐந்து மாடி புதிய கட்டடத் தொகுதியைத் திற

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவா களத்தில் அமைச்சர்கள் அவுட்?

ஜெனிவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள மனித உரிமை பேரவை அமர்வின் போது இலங்கை சார்பான இராஜதந்திர முயற்சிகளில் அமைச்சர்களுக்கு முக்கிய பாத்திரம் வழங்குவதை அரசாங்கம் தவிர்க்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் மனித உரிமை பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தத் தீர்மானத்தில் இலங்கையின் கற்றறிந்த பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டும் எனவும் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் சர்வதேச மனிதாபிமான சட்டம் மீறப்பட்டதாக கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் எனவும் கூறப்பட்டது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஆதரவளிக்கும் பிரிட்டன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அதற்கு ஆதரவளிக்கப்படும் என பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் அலிஸ்டர் பர்ட் தெரிவித்துள்ளார். கொழும்பில் லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் நேற்று முன்தினம் நிகழ்த்திய உரையிலேயே, அவர் இவ்வாறு கூறியுள்ளார்

யுத்தத்தின் பின்னர் நாட்டில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், பல்வேறு விடயங்களில் இன்னமும் அபிவிருத்தி ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பணி நீக்கம் செய்யப்பட்டமை உள்ளிட்ட சில .பிரச்சினைகள் குறித்து அதிருப்தி அடைவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும

(19) ஆம் பக்கம் பார்க்க

## பரிந்துரைகள் அமுல் இலங்கைக்கே கரிசனை

### என்கிறார் அமைச்சர் பீரிஸ்

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பில் இலங்கைக்கே அதிகளவு கரிசனை காணப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். உலகின் ஏனைய நாடுகளை விடவும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின்

(19) ஆம் பக்கம் பார்க்க

## உயர்தரத்தில் அதிகூடிய சித்தி வடக்கு மாணவர்கள் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியாகிய க.பொ.த. உயர்தரப்பெறுபேறுகளில் வடமாகாணத்தில் மாவட்ட ரீதியில் முன்னிலைப் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை பழைய பூங்காவில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஷ், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் சத்தியசீலன் உட்பட மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வடமாகாணத்தைச் சேர்ந்த 24 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதோடு, 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பணப்பரிசும், மாவட்ட ரீதியில் முன்னிலையில் உள்ள மாணவர்களுக்கு மவுண்டன் சைக்கிள்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

சில அரசியல்வாதிகளின்

(19) ஆம் பக்கம் பார்க்க

# உடைந்துவிழுந்த ஆஞ்சநேயரின் கை

(சுன்னாகம்)

சுன்னாகம் - மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் மிகக்குறுகிய காலத்தில் 1 கோடியே 25 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட 72 அடி உயரமான ஆஞ்சநேயர் சிலையின் வலதுகை உடைந்து விழுந்துள்ளது.

இச்சம்பவம் கடந்த தைப்பூச திருநாளாகிய 27 ஆம் திகதி இரவுவேளை இடம்பெற்றுள்ளது. 72 அடி உயரத்திலிருந்து ஆஞ்சநேயரின் வலதுகை தோள்மூட்டுடன் முழுவதுமாக உடைந்து விழுந்துள்ளது.

இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சிற்பிகளால் அமைக்கப்பட்டு வந்த இச்சிலையே உடைந்து விழுந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனவரி மாதம் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் திட்டமிட்டவாறு கும்பாபிஷேகத்தினை மேற்கொள்வதற்காக அவசரமாக இச்சிலை அமைக்கப்பட்டதன் காரணமாக ஆஞ்சநேயரின் கை உடைந்து விழுந்துள்ளது என சிற்பவேலை செய்துகொண்டிருக்கும் சிற்பிகள் தெரிவிக்கின்றனர்.

ஆஞ்சநேயரின் கும்பாபிஷேகத்திற்குப் பின்னர் அவரது வலதுகை உடைந்து விழுந்ததையிட்டு ஆலயக்குருக்களும், நிர்வாகத்தினரும், வழிபடுவோரும் பெரும் கவலை கொண்டுள்ளனர். (06)

# நாட்டிலுள்ள மின்விநியோக முறையே வட பகுதியிலும் அமுல்படுத்தப்படும்

– மின்சாரசபை பிரதிப்பொது முகாமையாளர் தெரிவிப்பு



நாடு முழுவதும் உள்ள மின் விநியோக நடைமுறையே வட பகுதியிலும் அமுல்படுத்தப்படும். என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனான சந்திப்பில் மின்சார சபை பிரதிப்பொது முகாமையாளர் உறுதியளித்தார்.

வடபகுதி மின்சார விநியோகம் மற்றும் மின் சேவைகள் தொடர்பான சந்திப்பொன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். பணிமனையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் குணதிலக, யாழ்.பிராந்திய மின் அத்தியட்சகர் அருள்நாதன், யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, யாழ்ப்பாண வணிகர் சம்மேளனத் தலைவர் பூரணச்சந்திரன், சிரேஸ்ட பொறியியலாளரும் ஆலோசகருமான எஸ்.சூரியசேகரம், பொறியியலாளர் இராமதாஸ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா, அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் தயானந்தா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மின்சார விநியோகம் தொடர்பில் வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் இக்கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் குணதிலக அவர்கள் மின்சார விநியோக நடைமுறை தொடர்பாக நாடு முழுவதும் ஒரே கொள்கையே பின்பற்றப்படும். இதில் வடபகுதி தென்பகுதி என எவ்விதபாகுபாடும் காட்டப்படமாட்டாது. இதுவே ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் கொள்கை எனத்தெரிவித்தார்.

மேலும் வடபகுதிக்கு கொண்டுவரப்பட்ட தேசிய மின் வழங்கலானது யாழ். குடாநாட்டிலும் இணைக்கப்பட்டுள்ளதுடன் வடமராட்சி மற்றும் தென்மராட்சி உள்ளிட்ட பிரதேசங்களில் செயற்பட ஆரம்பித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடு முழுவதற்கும் ஒரே நடைமுறை என்ற ஜனாதிபதியின் கொள்கைக்கமையவே இலங்கை மின்சார சபையும் தனது செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

யாழ். குடாநாட்டில் தற்போது 24 மணிநேர மின்விநியோகம் வழங்கப்படுகின்றது. எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி இம்மின் விநியோக நடவடிக்கைகளை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைப்பார். எனத் தெரிவித்தார்.

மேலும் வடபகுதி அபிவிருத்தி தொடர்பில் வீதி அகலமாக்கல், புனர்நிர்மாணம், புனரமைப்பு, புதிய இணைப்புக்கள் வழங்கல் போன்ற அவசியமான நிலைமைகளில் மட்டுமே மின்தடை ஏற்படும் என்றும் மின்தடை ஏற்படுவதற்கு வேறு எந்தக்காரணமும் தற்சமயம் இல்லை என மின்சார சபையினர் திட்டவட்டமாக அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் அங்கு தெரிவித்தார்.



யாழ். 2 ஆம் குறுக்குத்தெருவிலுள்ள பாலம் திருத்த வேலைகள் செய்யப்படுவதற்காக தோண்டப்பட்டுள்ளது.

ஆனால் இப்பாதையினூடான போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளமைக்கான எந்த அறிவித்தலும் ஆஸ்பத்திரி வீதிப்பக்கமோ, வேம்படி வீதிப்பக்கமோ வைக்கப்படவில்லை. மக்கள் போக்குவரத்திற்காக இரண்டாம் குறுக்குத்தெருவுக்கு சென்றால் பாலம் வரை சென்று திரும்பிவரவேண்டிய நிலை காணப்படுகிறது.

எனவே இவ்வீதி திருத்தப்பணியை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரர்களின் அசமந்தப்போக்கால் பாதசாரிகளும், இவ்வீதியூடான போக்குவரத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக முறையிட்டுள்ளனர். (இ)

# ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கு உபகரணங்கள் கையளிப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு சிலிண்டர் மற்றும் வெள்ளிரும்பு ஒட்டும் இயந்திரம் மோடிவேசன் நிறுவனத்தினால் நேற்று கையளிக்கப்பட்டது.

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தில் நேற்று மாலை 3.00 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வில், மோடிவேசன் நிறுவனத்தின் முகாமையாளர் எல்.எல். துஷ்யந்தன் சுமார் 1 இலட்சம் பெறுமதியான சிலிண்டர் மற்றும் வெள்ளிரும்பு ஒட்டும் இயந்திரத்தினை யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் தலைவி வைத்தியர் எஸ்.கணேசமூர்த்தியிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில், இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி பீலிக்ஸ் மற்றும் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் செயலாளர் வைத்தியர் தெய்வேந்திரம், நிர்வாக உத்தியோகத்தர், திட்ட இணைப்பாளர், வலுவிழந்தோர் நடமாடும் உபகரணங்கள் தொழில்நுட்ப வியலாளர்கள், மற்றும் உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொண்டனர். (25)

# திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு கட்டுப்படுத்த மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் கல்வி வளர்ச்சி சம்பந்தமாக குறைகள் சமூக அபிவிருத்திக்கான இணையம் (வேர்கன் - ஒஸ்லோ நோர்வே) அமைப்பு பிரதிநிதி ஒருவர் ஆலோசனைக் கூட்டத்திற்கு கடந்த 30 ஆம் திகதி சென்ற சமயம் இவரின் துவிச்சக்கர வண்டி களவாடப்பட்டுள்ளது.

இப்பாடசாலை அமைந்துள்ள ஆலயச் சுற்றாடலில் துவிச்சக்கரவண்டிகளின் களவு இதுவரை பதினைந்து தடவை நடைபெற்றுள்ளது.

இதனை அண்டிய பகுதிகளில் வேலைக்குச் சென்று திரும்பும் போது பற்றிக்ஸ் வீதியில் இரண்டு பவுண் தங்கச்சங்கிலியும், பாடசாலையில் இருந்து பிள்ளையை அழைத்துவரச்சென்ற தாயார் ஒருவரின் பதின்மூன்று பவுண் நிறைகெண்ட தாலிக்கொடியும், கதீற்றல் வீதியில் அதிகாலை ஆலய வழிபாட்டுக்குச் சென்ற பெண் ஒருவரின் மூன்றுபவுண் தங்கச்சங்கிலியும், மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாதவர்களால் களவாடப்பட்டுள்ளன.

மேலும் பிரதான வீதியில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்தின் முன் அமைக்கப்பட்டுள்ள இரும்புபைப் இரும்புச்சங்கிலியும் இரவில் திருடப்பட்டுள்ளது. இப்படியான செயல்கள் இனியும் நடைபெறாமல் இருக்க துரித கதியில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (27)

# மெய்வல்லுநர் போட்டி

(மல்லாகம்)

மல்லாகம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணியவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ந.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இல்ல விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், சிறப்புவிருந்தினராக தெல்லிப்பளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சண்முககுலகுமரன், கௌரவ விருந்தினராக இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற வடபிராந்திய முகாமையாளர் சி.விக்னராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (06)

# கொடுப்பனவு வழங்கவில்லை; மதிப்பீட்டாளர்கள் விசனம்

2012 ஆம் ஆண்டு நடைபெற்றிருந்த க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப்பணிகள் செப்ரெம்பர் மாதம் நடைபெற்று முடிந்து இந்த மாதம் பரீட்சைப் பெறுபேறுகளும் வெளியாகியுள்ளநிலையில் மதிப்பீட்டுப் பணிக்கான கொடுப்பனவு இதுவரை அனுப்பிவைக்கப்படாததையிட்டு மதிப்பீட்டுப்பணியில் ஈடுபட்டவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வழமையாக பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னராகவே மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்டவர்களது கொடுப்பனவுகள் அனுப்பிவைக்கப்படுவதுண்டு.

ஆனால் கடந்த ஒருசில வருடங்களாக மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் கொடுப்பனவுகளை உரிய நேரத்தில் அனுப்பிவைப்பதில் பரீட்சைத் திணைக்களம் அசிரத்தை காட்டி வருவதாக தெரிவயருகிறது.

இது தொடர்பில் பரீட்சை உதவி ஆணையாளர்கள் நடத்தும் பரீட்சை மதிப்பீட்டாளர்கள் கூட்டத்தில் தெரியப்படுத்தினால் இனிவரும் காலங்களில் அவ்வாறு நடைபெறாது என அறிவிக்கின்றனர். எனினும் அந்த வாக்குறுதி நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை என மதிப்பீட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (06)



# கல்வியில் முன்னேற்றம் காணும் கிளிநொச்சி மாவட்டம்





(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி நிலைமைகளில் தற்போது நம்பிக்கைதரக்கூடிய முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது. இதற்கு தற்போது வெளியாகியிருக்கும் க.பொ.த உயர்தரப் பெறுபேறுகள் சான்றுபகிர்கின்றன என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி மத்தியகல்லூரியில் சுமார் ஒன்பது மில்லின் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மாணவர் சங்கத்தினை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி நிலைமைகளில் தற்போது நம்பிக்கை தரக்கூடிய முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது. இதற்கு தற்போது வெளியாகியிருக்கும் க.பொ.த. உயர்தரப் பெறுபேறுகள் சான்றுபகிர்கின்றன. அதனடிப்படையில் இவ்வருடம் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து சுமார் 250 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெறக்கூடிய பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். அதிலும் கிளிநொச்சி மத்திய கல்லூரியிலிருந்து நான்குபேர் மருத்துவப் பிரிவுக்குத் தெரிவாகக்கூடிய பெறுபேற்றையும், பொறியியல் பீடத்திற்கான அனுமதியை பெறக்கூடிய பெறுபேறுகளை மேலும் சிலரும் பெற்றுள்ளனர். இந்நிலைமை தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டும். அத்தோடு மாவட்டத்தின் இவ் வெற்றிக்காக அர்ப்பணத்துடன் உழைத்த ஆசிரியர்களை நாம் பாராட்டுகின்றோம். இவர்களைப் போன்ற ஆசிரியர் சமூகத்தையே இம் மாவட்டம் எதிர்பார்த்து நிற்கின்றது. எனவே இவ் ஆசிரியர்களின் செயற்பாட்டை ஏனைய ஆசிரியர்களும் முன்னுதாரணமாகக் கொண்டு செயற்பட வேண்டும் என்றார்.

கல்லூரியின் அதிபர் இரவீந்திரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் முருகவேல், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள்எழுச்சித்திட்டம் மற்றும் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கிளிநொச்சி மாவட்டப் பிரதித்திட்டப்பணிப்பாளர் விஜயகிருஸ்ணன், ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், கிளிநொச்சி கோட்டக்கல்வி அதிகாரி தருமலிங்கம், கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுத்தலைவர் பத்மநாதன், கிளிநொச்சி சந்தை வர்த்தகச்சங்கத்தலைவர் இரத்தினமணி ஆகியோரும் மற்றும் அயற்பாடசாலைகளின் அதிபர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.




**சென்.ஜோன்ஸ் கல்லூரியின் 190ஆவது ஆண்டு நிறைவையொட்டி பாதிக்கப்பட்ட மாணவரின் கல்வி மேம்பாட்டு நிதிக்காக பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "பொப்பிசை கானங்கள்" இசை நிகழ்ச்சி நாளை மாலை 5.30இற்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. யாழ். மண்ணின் புகழ்பெற்ற பாடகரும் பொப்பிசைச் சக்கரவர்த்தியும் தென்னிந்திய திரைப்பட நடிகரும் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவனுமாகிய ஏ.ஈ.மனோகரன் நேற்றுமுன்தினம் மாலை பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது...**

**(படம்:ஆர்.ராஜகுமார்)**

# யாழ்.கோட்டை அருகில் கைக்குண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டைப் பகுதிக்கு அண்மையிலுள்ள பண்ணை சுற்றுவட்டப் பகுதியிலிருந்து வெடிக்காத நிலையில் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.யாழ். பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் நேற்றுமுன்தினம் நண்பகல் மீட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் சுத்திகரிப்பு கடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் வெடிகுண்டை கண்டுள்ளனர். இதனையடுத்து யாழ். பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

இதனையடுத்து அப்பகுதிக்கு விரைந்த பொலிஸரும் விசேட அதிரடிப்படையினரும் வெடிக்காத நிலையிலிருந்த (எஸ் எஸ் ஜி 87) என்ற இலக்கத்தை உடைய கைக்குண்டை மீட்டுள்ளனர்.

(25)

# இருவருக்கு டெங்கு

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் இருவர் டெங்கு நோய்த்தொற்றிற்கு இலக்காகிய நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவ் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாநகர சபைப்பகுதியில் இருந்தே இந்த இருவரும் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

இந்த வருடம் இதுவரை டெங்கு நோய்த்தாக்கத்திற்கு இலக்காகி யாழ்.போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 61 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவ்வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

# தனியார் துறையில் பணியாற்றுவதற்கு மாணவர்கள் தயாராக வேண்டும்

## – சிகரம் நிறுவனப் பணிப்பாளர் –

(கொழும்பு)

இனிவருங்காலங்களிலும் தனியார் துறையிலேயே வேலை வாய்ப்பு. எனவே தனியார் துறையில் பணியாற்றுவதற்கு மாணவர்கள் தம்மை தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என சிகரம் நிறுவனப் பணிப்பாளரும், பத்திரிகை ஆய்வாளருமான கோ.றுஷாங்கன் தெரிவித்தார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு தற்போது காணப்படும் கல்வி மற்றும் தொழில்வாய்ப்புக்கள் தொடர்பில் கருத்துத் தெரிவுக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் ஒரு அரசாங்க வேலையைப் பெற்றுக் கொள்வதே பெரும்பாலான மாணவர்கள் மற்றும் பெற்றோரது எதிர்பார்ப்பாகவும், கனவாகவும் இருக்கின்றது.

ஆனால், இனிமேல் அரசாங்க வேலை என்பது சாத்தியமில்லை. 12 வீதமான வேலை வாய்ப்புகளே அரசாங்கத் துறையில் காணப்படுகின்றன. 88 வீதமான வேலை வாய்ப்புகள் தனியார் துறையிலேயே காணப் படுகின்றன.

என்ன வேலையாக இருந்தாலும் அது அரசாங்க வேலையாக இருக்கவேண்டும் என தற்போதும் நினைத்தால் நாட்டில் வேலைவாயப்பற்றோர் வீதம் அதிகரிக்குமே தவிர, வேலை வாய்ப்பொன்றைப் பெற்றுக் கொள்ள முடியாது.

தனியார் துறையில் 88வீதமான வேலைவாய்ப்புக்கள் காணப்படுகின்றபோதும், தனியார் துறைபற்றி போதிய விளக்கமின்மை, தனியார் துறையில் பணியாற்றுவதற்கான போதிய தொழில்சார் திறமைகள் இல்லாமையினாலேயே தனியார் துறையில் பணியாற்றுவதற்கான தகுதிகளை இழக்கின்றனர். தனியார் துறையைப் பொறுத்தவரையில் வெறுமனே பட்டத்துக்காக வேலைவாய்ப்பு வழங்கப்படுவதில்லை. நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு தேவையான தொழில்சார் திறன்களே அங்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

எனவே, மாணவர்கள் புத்தகப் படிப்போடு மட்டும் நின்றுவிடாது, எதிர்காலத்தில் விரும்பிய தொழில் வாய்ப்பை பெறுவதற்கும், அந்த தொழில்வாய்ப்பைப் பெறுவதற்கு அவசியமாக தகைமைகளை ஆரம்பத்திலிருந்தே வளர்த்துக்கொள்வதற்கும் தம்மை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு பெற்றோர், ஆசிரியர்கள் வழிகாட்டவேண்டும்.

வடக்கில் தனியார் துறையை மேலும் வளர்ப்பதற்கும், பலப்படுத்துவதற்கும் செல்வந்தர்களும், புலம் பெயர் மக்களும் முதலீடுகளை மேற்கொள்ள முன்வரவேண்டும். முதலீடு செய்யத் தயாராக உள்ளவர்களுக்கு எந்தெந்தத்துறையில் பணத்தை முதலிட்டால் அதிக இலாபம் பெறமுடியும் என்பன தொடர்பில் முதலீட்டுச் சபை மற்றும் வர்த்தக கைத்தொழில் சம்மேளனம் என்பன வழிகாட்டல்களை வழங்கத் தயாராக இருக்கின்றன.

மேலும், பணவசதி குறைந்தவர்கள் கூட யாழ்ப்பாணத்தில் பல்வேறு துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ள முடியும். இவர்களுக்கு பல்வேறு வகையான கடன்திட்டங்களை வழங்க பல வங்கிகள் ஆர்வத்துடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சமாதான நீதவானாக பதவிப்பிரமாணம்



பருத்தித்துறை புலோலி வடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் கார்த்திகேசு அமரசிங்கம் தமிழ், ஆங்கில அரசமொழி பெயர்ப்பாளராகவும், யாழ்ப்பாண நீதி நிர்வாகப் பிரிவுக்கான சமாதான நீதவானாகவும் நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அரசாங்கசேவையில் 1964 ஆம் ஆண்டு இணைந்து கொண்ட இவர், 1973ஆம் ஆண்டு தட்டெழுத்தாளராகப் பதவியுயர்த்தப்பட்டு கொழும்பு, மன்னார் மாவட்டங்களில் கடமையாற்றி பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு அங்கிருந்து சேவையிலிருந்து இளைப்பாறினார்.

தலை சிறந்த விளையாட்டு வீரரான இவர் தாமோதரம்பிள்ளை நாடகமன்றத்தின் இயக்குநராகவும் இருந்து நாடகத்துறையில் சாதனை நிலை நாட்டி, பல்வேறு பரிசில்களையும் பெற்றுள்ளதோடு, வடமராட்சி வடக்கு பிரதேச செயலக கலாசார பேரவையின் "கலைப்பரிதி" விருதினையும் பெற்றவர். தென்புலோலி சித்தி விநாயகராலய பஜனைக் குழு உறுப்பினராகவும் புலோலி முதலியார் வாசிகசாலைச் செயலாளராகவும் சேவையாற்றி வருகின்றார். இவர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (01)

ஒருவனுக்கு அறிவு இருந்தும் ஆற்றல் இல்லையெனில் அவன் வாழ்வு சிறக்காது. - *ஷாம்பர்ட்*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
**Online : www.thinamurasu.net**

## வாய்பார்த்தலை விட்டால் வாழ்வு!

விடுதலைப்புலிகளை வேறு யாரும் அழிக்கவில்லை; அவர்கள் தங்களது கெடுமதியால் தாங்களாகவேதான் அழிந்து கொண்டார்கள் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறி வருகிறார். பாராளுமன்ற உரையிலும் அதனை முழங்கினார்; வீரகேசரி நாளிதழுக்கு வழங்கிய செவ்வியிலும் அதனை அழுத்திச் சொல்லியிருந்ததைக் காணமுடிந்தது.

இதை புலிகளின் முடிவு தெரிந்த அந்த நாளிலிருந்தே மெல்ல மெல்ல இவர்கள் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். அழிவுக்கு வரும்வரை அவர்கள் பின்னால் இருந்து உசுப்பேற்றிக்கொண்டிருந்துவிட்டு, கடைசிநேரம் தங்களது போன்களை எல்லாம் மூடி வைத்துவிட்டுக் காணாமல் போனவர்களல்லவா! இன்றும் ஐந்தாம் கட்டப் போருக்குப் பரணி பாடிக்கொண்டிருக்கும் ஒரு தமிழரசுக் கட்சி எம்.பி., கடைசிவரைக்கும் பள்ளிக்கூடச் சிறுவர்களையெல்லாம் பிடித்துப் போர்க்களத்திற்குச் சாக அனுப்பிவிட்டு, தான் செஞ்சிலுவைச்சங்க வாகனத்தில் ஏறித் தப்பியோடி வந்தவரல்லவா!

கடந்த வருடம் ஜனவரி மாதம் “தி ஐலண்ட்” பத்திரிகைக்கு தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் அளித்த செவ்வியிலும், இயக்கப் பெடியளைப் பற்றிக் கூறும்போது, “வேலைவெட்டியற்ற, மடமைக் கோபம் கொண்ட, நிதான புத்தியற்ற...” என்ற அடைமொழிகளையே பயன்படுத்தி அவர்களை இழிவுபடுத்தியிருந்ததை யாரும் மறந்திருக்க முடியாது.

விடுதலைப்புலிகளால் தாங்கள் நொந்துபட்ட வலிகளை இப்போது சொல்லி ஆற்றிக்கொள்கிறார்கள் என்று இதையெல்லாம் விட்டுவிடலாம்தான். ஆனால், அவர்கள் இருந்த வரையில், இந்தப் பதவிகளுக்காக அவர்களது வாசலில் இருந்த வாங்குகளில் காவல் இருந்ததும், அவர்களையே ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு சர்வதேசத்திற்கு அறிவித்ததும், அவர்களையும் மக்களையும் அழிவுக்குத் தெரிந்தே தள்ளிவிட்டதையும் எப்படிப் பார்ப்பது?

இவர்களது அறுபது வருடகால பச்சையான சந்தர்ப்பவாத அரசியலின் தொடர்ச்சியல்லவா இது! புலிகள் மக்களை அழிவுக்குக் கொண்டுபோகிறார்கள் என்று தெரிந்துகொண்டும், மக்கள் மீதான எந்த அக்கறையோ பொறுப்புணர்வோ அற்று, அவர்கள் மூலம் பதவிகளைப் பிடிக்கும் அரசியலைத்தானே இவர்கள் செய்தார்கள்?

இன்றும் பெரும்பான்மையாக உள்ள அடிமட்ட தமிழ் மக்களின் வாழ்வு குறித்து எந்த அக்கறையுமற்ற, “தீர்வு வரட்டும் பாப்பம்” அரசியலைத்தானே செய்து பதவிகளைத் தக்கவைத்துக்கொள்கிறார்கள்! தனியே இவர்களிடம் பேசிப்பார்த்தால் தெரியும், “தீர் வெங்கை வாறது? சிங்கள அரசாங்கம் ஒண்டையும் தராது” என்றுதானே சொல்லிக்கொள்கிறார்கள்! இது சந்தர்ப்பவாத அரசியல் மட்டும்தானா? நயவஞ்சகத்தன அரசியல் இல்லையா?

அதிகம் ஏன்? “சர்வதேசம் நெருக்குதல் கொடுக்கும், ஜெனீவா மாநாட்டில் இலங்கையரசை மடக்குகிறோம்” என்றெல்லாம் கடந்த வருட மாநாட்டிற்கு முன்னரும் ‘பிலிம்’ காட்டிவிட்டு, கடைசியில் என்ன சொன்னார்கள்? ஜெனீவா மாநாட்டிற்கு கூட்டமைப்பினர் செல்கிறீர்களா என்று கேட்டபோது, அதை ஆவேசமான முறையில் மறுத்துரைத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர். எவ்வாறான அழுத்தங்கள் தரப்பட்டாலும், நாட்டைக் காட்டிக்கொடுக்கும் நடவடிக்கைகளைக் கூட்டமைப்பு மேற்கொள்ளப்போவதில்லை என்று கர்ஜித்துவிட்டு பம்மி விட்டார்கள்.

அவர்களுக்குத் தெரியும், சர்வதேசத்தினாலோ இந்த மாநாடுகளாலோ எல்லாம் தமிழ் மக்களுக்கான தீர்வு வரப்போவதில்லையென்று. எனவே அங்கெல்லாம் போய் தங்களை “கமிட்” பண்ணிக்கொள்வதில்லை. சும்மா வெளிநாட்டு “டூர்” போய் வந்தோமா, தேர்தல் மேடையில் “உங்கள் வாக்குப்பலத்தைக் காட்டுங்கள்; சர்வதேசம் வந்திறங்கும்” என்று உதார் விட்டு வாக்குகளை அள்ளினோமா என்று மேட்டுக்குடித் தளுக்கு அரசியலைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

நம் மக்கள், இவர்களை வாய்பார்த்துக் காத்திருப்பதை விட்டால்தான் இனியிங்கு வாழ்வு!

- ஆசிரியர்

# ஷிராணி விவகாரத்தில் அரசின் போக்கு;
# சர்வதேச யூரிகள் பேரவை பாராட்டு

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி மீதான குற்றப்பிரேரணை அரசியலமைப்பிற்கு அமைவானது. அரசியலமைப்பிற்கு அமைவான செயன்முறைகளைப் பின்பற்றி அந்த விவகாரம் மேற்கொள்ளப்பட்டதனால் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதம நீதியரசருக்கு தங்களுடைய ஆதரவைத் தொடர்ந்து வழங்குவதாக சர்வதேச யூரிகள் பேரவை தெரிவித்துள்ளது.

சர்வதேச யூரிகள் பேரவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.குற்றப்பிரேரணையானது இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் தேவையான சகலதும் நிறைவேற்றப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையாலும் பூரணப்படுத்தப்பட்டுள்ளது. எனவே குற்றப்பிரேரணை தொடர்பில் அரசியலமைப்பில் விதிக்கப்பட்ட செயன்முறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

பிழையான, பக்கச்சார்பான முறையினை குற்றப்பிரேரணை இலங்கையில் கடைப்பிடிப்பதாக கூறி இலங்கைக்கு அபகீர்த்தியை உண்டாக்க சில அமைப்புகள் முயலுகின்றன. அந்த செயற்பாடுகளை தாம் வன்மையாக கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இலங்கையின் சட்டங்கள் 'தெரியாதவர்கள் பிரதம நீதியரசர் பதவியிறக்கப்பட்டதை கண்டிப்பதையிட்டு நாம் கவலையடைந்துள்ளோம். என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கையின் பிரதம நீதியரசருக்கு பூரண ஆதரவை தாம் வழங்குவோம் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பரீட்சையில் தோற்றிய 61 வீத மாணவர்கள்
# பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டத்தின் கீழ் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்த 128,809 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குச் செல்லத் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களில் 8544 பேர் மூன்று பாடங்களிலும் ‘ஏ’ சித்தி பெற்றிருப்பதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைக்குத் தோற்றிய 207,910 பேரில் 61.35 வீதமானவர்கள் பல்கலைக்கழகம் செல்லத் தகுதி பெற்றுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 16,538 பேர் அனைத்துப் பாடங்களிலும் குறைந்த மதிப்பீட்டைப் பெற்று சித்தியடையத் . தவறியுள்ளனர்.

அதேநேரம், பழைய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்றிய 25,724 மாணவர்களில் 15,936 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 513 பேர் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்தியைப் பெற்றுள்ளனர்.

இவர்களில் 1947 பேர் அனைத்துப் பாடங்களிலும் குறைந்த புள்ளிகளை பெற்று சித்தியடையத் தவறியுள்ளனர்.

2012 ஆம் ஆண்டு க. பொ. த உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் உயிரியல் விஞ்ஞானத் துறையில் 313 பேர் மூன்று பாங்களிலும் ‘ஏ’ சித்திகளைப் பெற்றிருப்பதுடன். பௌதீக விஞ்ஞானத்தில் 443 பேரும், வர்த்தகத் துறையில் 6471 பேரும், கலைத்துறையில் 1313 பேருமாக 8544 பேர் அனைத்து மூன்று பாடங்களிலும் ‘ஏ’ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

பழைய பாடத்தின் கீழ் உயிரியல் விஞ்ஞானத்துறையில் 72 பேரும், பௌதிக விஞ்ஞானத்துறையில் 47 பேரும், வர்த்தகத்துறையில் 234 பேரும், கலைத்துறையில் 160 பேரும் மூன்று பாடங்களிலும் ‘ஏ’ சித்திகளைப் பெற்றிருப்பதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

# ஜப்பானிய நிதி உதவியுடன்
# வடக்கில் வாழ்வாதார உதவிகள்

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண மக்களுக்கு ஜப்பான் உதவிகளை வழங்கியுள்ளது. யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள் குடியேறிய வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. சுமார் 90 மில்லியன் ரூபா உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஜென் எனும் ஜப்பானிய தன்னார்வத் தொண்டு நிறுவனமே இந்த உதவிகளை வழங்கியுள்ளது.

நீர்ப் பம்கள், விதைகள், கன்றுகள் போன்றவற்றை கொள்வனவு செய்து விவசாயத்தை மேம்படுத்த இந்த உதவிகள் பயன்படுத்திக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதேச மக்களின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் விசேட திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன.இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்த உதவிகளை ஜப்பான் வழங்கியுள்ளது.

# “அலங்கார வளைவு” அரைகுறையில்;
# ஆபத்து காத்திருக்கிறது செம்மணியில்

(யாழ்ப்பாணம்)

யாழ். செம்மணிச்சந்தியில் அமைந்துள்ள “யாழ்ப்பாணம் உங்களை வரவேற்கின்றது” எனும் அலங்காரவளைவின் மீள் புனர்நிமாண வேலைகள் •பாதியிலே விடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, பொதுமக்கள், அவ்வீதியால் பயணிப்போர் பலரும் தங்கள் விசனத்தையும் அதிருப்தியையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

குறிப்பிட்ட மேற்படி அலங்காரவளைவானது ஏ.9 வீதியின் அகலிப்பு வேலைகளுக்காக இடிக்கப்பட்டு, மீண்டும் அதே அலங்கார வடிவத்துடன் அமைக்கும் பொருட்டு வீதியின் இருமருங்கிலும் தூண்கள் நிறுவப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

இவ்வாறு தூண்கள் நிறுவப்பட்ட நிலையில், இதன் அடுத்த கட்டப்பணிகள் மேற்கொண்டு எதுவும் நடைபெறாது இருப்பதன் நிமித்தம், குறிப்பிட்ட இடத்தினூடாக வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் பயணிப்பது அசௌகரியத்தையும் மிகுந்த அச்சத்தையும் ஏற்படுத்துவதாக சமூக நலன்சார்ந்ததோரால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை குறிப்பிட்ட இவ்விடத்திற்கு அருகில் வாகனங்கள் செல்வதற்கு மாற்றுப் பாதை நிறுவப்பட்ட நிலையில். இக்கட்டடவேலையோடு சம்பந்தப்பட்டவர்கள் துரிதகதியில் இப்பணியை முடிப்பதன் மூலம். போக்கு வரத்துக்கள் இலகுபடுத்தப்படுவதோடு, பல விபத்துக்களையும் தவிர்க்கக் கூடியதாக அமையும் எனப் பொதுமக்கள் மற்றும் வாகன சாரதிகள் பலரும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துவருகின்றனர். (138)

# ரணிலுடன் பேச்சு நடாத்த
# உலமாசபை விரும்பவில்லை

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்ரமசிங்கவுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பிரதிநிதிகள் பங்கேற்கவில்லை.முஸ்லிம்களுக்கு எதிராக அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டுவரும் தீவிர பிரசாரங்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்த சந்திப்பில் முஸ்லிம் கவுன்சில் பிரதிநிதிகள் மட்டுமே பங்கேற்றனர். அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பிரதிநிதிகள் பங்கேற்கவில்லை எனத் தெரியவருகிறது.

முஸ்லிம்களுக்கு எதிராக அண்மைக் காலமாக மேற்கொள்ளப்பட்டுவரும் பிரசாரங்கள் குறித்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்சிலும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவும் அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு மட்டத்தை சேர்ந்தவர்களுடனும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றன.

அதன் அடுத்தக்கட்டமாகவே எதிர்க்கட்சித் தலைவருடன் சந்திப்பு இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

# வறுமை ஒழிப்புக்கு எதிரானதே வாழ்வின் எழுச்சி எதிர்ப்பு

சங்கர சிவன்

தமிழ் மக்கள் மத்தியில் வசதி படைத்தவர்களும் வசதிகள் மறுக்கப்பட்டு வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் அடிமட்ட மக்களுமாக இரண்டு பிரதான பிரிவுகளை இனங்காணலாம். தேசிய இனப்பிரச்சினை இரு பிரிவினருக்கும் பொதுவான பிரச்சினையாக இருக்கின்ற அதேவேளை, சமூக, பொருளாதார மட்டத்தில் இவ்விரு பிரிவினருக்குமிடையே முரண்பாட்டு நிலையே காணப்படுகின்றது.

அடிமட்ட மக்களுக்குப் போதுமான வருமானம் இல்லை. தொழில் பாதுகாப்பும் இல்லை. பெரும்பாலானவர்களுக்கு நிரந்தரத் தொழில் கிடையாது. சொந்தமாகக் காணியோ வீடோ இல்லை. இவர்கள் பெரும்பாலும் வசதி படைத்தவர்களில் தங்கி வாழ்பவர்களாக இருக்கின்றனர். அடிமட்ட மக்களின் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு வசதி படைத்தவர்கள் காரணமாக இருப்பதோடு, இவர்களின் பிரச்சினைகள் தீர்வதையும் அவர்கள் விரும்புவதில்லை. இம்மக்களின் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்தால் இவர்களைத் தங்கள் இஷ்டம் போல ஆட்டுவிப்பது சாத்தியப்படாது என்பதால் இவர்களுடைய பிரச்சினைகளின் தீர்வுக்குத் தடையாகவே மேல்மட்ட உடைமையாளர்கள் செயற்படுகின்றார்கள். அரசியல் தலைவர்களும் இதற்கு ஒத்தாசையாக இருக்கின்றனர்.

அறுபது வருடங்களுக்கு மேலாகத் தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமை தாங்கும் கட்சிகள் சமூக, பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழும் அடிமட்டத் தமிழ் மக்களின் பிரச்சினைகளில் எந்தக் காலத்திலும் கவனம் செலுத்தவில்லை. இத்தலைவர்களின் செயற்பாடு இம்மக்களைப் புறக்கணிப்பது போலவே உள்ளது. இனப் பிரச்சினையின் தீர்வுக்குப் பின் மற்றைய பிரச்சினைகளைப் பார்க்கலாம் என்ற இவர்களின் வாதம் நடைமுறையில் மேட்டுக்குடி உடைமையாளர் ளின் ஒடுக்குமுறைக்கு அங்கீகாரம் அளிக்கின்றது.

இந்தப் பின்னணியிலேயே வாழ்வின் எழுச்சிச் சட்டத்தைப் பார்க்க வேண்டும். வறுமைக்கோட்டுக்குக் கீழே நெருக்கடிகளுக்கும், பிரச்சினைகளுக்கும் மத்தியில் வாழ்கின்ற மக்களுக்கு வாழ்வின் எழுச்சி கைகொடுக்கின்றது. இம்மக்களை வறுமை நிலையிலிருந்து மீட்டு வசதியான வாழ்க்கையை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் வாழ்வின் எழுச்சிச் சட்டத்தில் உள்ளன. சுருக்கமாகக் கூறுவதானால், வறிய மக்களுக்கு வாழ்வின் எழுச்சி ஒரு வரப்பிரசாதம்.

வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகளை வறுமை நிலையில் வாழும் தமிழ் மக்களும் அனுபவிப்பதற்குத் தடையான வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் செயற்படுகின்றார்கள். அறுபது வருடங்களுக்கு மேலாக வறுமையில் வாடும் அடிமட்டத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் எவ்வித அக்கறையும் இல்லாமல் அம்மக்களைப் புறக்கணித்து வந்த பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவே இப்போது வாழ்வின் எழுச்சியை எதிர்க்கின்றார்கள்.

**வறுமையில் வாடும் அடிமட்டத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் எவ்வித அக்கறையும் இல்லாமல் அம்மக்களைப் புறக்கணித்து வந்த பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவே இப்போது வாழ்வின் எழுச்சியை எதிர்க்கின்றார்கள்.**

அடிமட்ட நிலையிலுள்ள தமிழ் மக்களின் வீடில்லாப் பிரச்சினை, காணி இல்லாப் பிரச்சினைகள், வேலையில்லாப் பிரச்சினை போன்றவற்றில் இந்தத் தமிழ் தலைவர்கள் எந்தக் காலத்திலும் கவனம் செலுத்தவில்லை. இப்பிரச்சினைகளை அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்த சந்தர்ப்பங்களில் இனப்பிரச்சினையின் தீர்வே முதலில் கவனிக்க வேண்டியது என்று கூறித் தட்டிக்கழித்து வந்தார்கள். இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் வரை வறுமை நிலையிலுள்ள மக்களின் துயரங்களும் வேதனையும் தொடர வேண்டும் என்ற இந்த நிலைப்பாடுமேட்டுக்குடியினரின் மேலாதிக்கத்துக்கும், ஒடுக்குமுறைக்கும் அங்கீகாரம் அளிப்பதாகும். இதே நோக்கத்துக்காகவே இப்போது வாழ்வின் எழுச்சியை எதிர்க்கின்றார்கள் போலும்.

வாழ்வின் எழுச்சிக்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபடும் தமிழ்த் தலைவர்கள் முன்வைக்கும் தர்க்கங்கள் அடிப்படையற்றவை.

மாகாண சபைக்குரிய அதிகாரங்களை வாழ்வின் எழுச்சி பறிக்கின்றது என்ற இவர்களின் பிரசாரம் பொய்யானது என்பதை விளக்குவதற்கு முன், மாகாண சபையில் இவர்கள் காட்டுகின்ற அக்கறை போலியானது என்பதை முதலில் கூறவேண்டும். மாகாண சபை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டம் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கவில்லை. மாகாண சபையினால் தமிழ் மக்களுக்கு எவ்வித பிரயோசனமும் இல்லை என்று தொடர்ச்சியாகக் கூறி வருகின்றார்கள். மாகாண சபையை முற்றுமுழுதாக நிராகரிக்கின்ற அதே வேளை, அதற்குரிய விடயங்கள் வாழ்வின் எழுச்சிச் சட்டத்தில் உள்ளடக்கப்படுவது தமிழ் மக்களுக்குப் பாதக மான செயல் எனக் கூறுவதைப் போலிப் பிரசாரம் என்றுதானே சொல்லவேண்டும். வாழ்வின் எழுச்சிச் சட்டத்தில் அவ்விடயங்கள் சேர்க்கப்பட்டிருப்பதன் மூலம் வறுமை நிலையிலுள்ள தமிழ் மக்கள் நன்மையடையக் கூடியதாக இருக்கையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதை அம்மக்களுக்கு எதிரான செயற்பாடாகவே கருத வேண்டும்.

**மாகாண சபையை இவர்கள் நிராகரிக்கின்றார்கள். அப்படியானவர்கள் மாகாண சபையின் விடயங்கள் பறிபோகின்றன என்று ஒப்பாரி வைப்பது சுயலாப அரசியல் பிரசாரமேயொழிய வேறொன்றுமில்லை.**



மாகாண சபையில் பல குறைபாடுகள் இருக்கின்றன. தமிழ் மக்களுக்குப் பாதகமான முறையில் மாகாண சபைக்குரிய விடயங்கள் பறிபோகின்றன என்ற பிரசாரத்தில் ஈடுபடுவதன் மூலம் மாகாண சபையில் தங்களுக்கு அக்கறை இருப்பதாக வெளியுலகுக்குக் காட்ட முற்படுகின்ற தலைவர்கள், மாகாண சபையின் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கும் முயற்சி எடுக்க வேண்டும். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்றி அதற்கான முயற்சியை மேற்கொள்வதற்கு இவர்கள் தயாராக இல்லை. அந்த அளவுக்கு மாகாண சபையை இவர்கள் நிராகரிக்கின்றார்கள். அப்படியானவர்கள் மாகாண சபையின் விடயங்கள் பறிபோகின்றன என்று ஒப்பாரி வைப்பது சுயலாப அரசியல் பிரசாரமேயொழிய வேறொன்றுமில்லை.

மாகாண சபைக்குரிய விடயங்களை வாழ்வின் எழுச்சி பறிக்கின்றது என்பது பொய்ப் பிரசாரம். பறிப்பது என்பதற்கு அர்த்தம் தெரியாத பிரசாரம். மாகாண சபைக்குரிய விடயங்களை வாழ்வின் எழுச்சி பறிக்கின்றது என்றால் மாகாண சபைக்கு அவ்விடயங்கள் இல்லாமற் போகின்றன என்பதே அர்த்தம். இங்கே அப்படி எதுவும் நடக்கவில்லை. எந்த விடயங்கள் பறிக்கப்பட்டுவிட்டன என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கூறுகின்றார்களோ அதே விடயங்கள் மாகாண சபைக்குரிய பட்டியலில் தொடர்ந்தும் இருக்கின்றன. அப்பட்டியலிலிருந்து அவை நீக்கப்படவில்லை. மாகாண சபைக்குரிய சில விடயங்கள் வாழ்வின் எழுச்சிச் சட்டத்துக்குரிய விடயப் பட்டியலிலும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. அவ்விடயங்களை மாகாண சபையும் கையாளலாம். மத்திய அரசாங்கமும் வாழ்வின் எழுச்சிக்கூடாகக் கையாளலாம். இதுதான் உண்மையான நிலை. ஒரே விடயத்தை மாகாண சபையும் மத்திய அரசாங்கமும் கையாள்வதொன்றும் புதிய விடயமல்ல. ஏற்கனவே பல விடயங்கள் இவ்வாறு கையாளப்படுகின்றன.

சட்டம் மக்களுக்குப் பயன்பட வேண்டுமேயொழிய அது கடதாசிக்குள் மட்டுப்பட்டிருப்பதால் எவ்வித பிரயோசனமும் இல்லை. இங்கு சம்பந்தப்பட்ட விடயங்கள் மாகாண சபைகளுக்குரிய பட்டியலில் நீண்ட காலமாக இருந்து வருகின்ற போதிலும், எந்த மாகாண சபையும் அந்த விடயங்களை இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை. அவ்விடயங்கள் வெறுமனே பட்டியலுக்குள் மட்டுப்பட்டிருப்பதை விட வாழ்வின் எழுச்சிக்கூடாக மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் நடைமுறைக்கு வருவது நல்லது தானே.

மாகாண சபைக்குரிய விடயங்கள் பறிக்கப்படுகின்றன என்று கூக்குரல் போடும் தமிழ்த் தலைவர்கள், மாகாண சபையை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பார்களா? நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கு பற்றி இக்கோரிக்கையை வலியுறுத்துவார்களா?

மாகாண சபைக்குரிய விடயங்களில் அக்கறை செலுத்துபவர்கள் மாகாண சபையிலும் அக்கறை செலுத்த வேண்டும். அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக மாகாண சபையை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து படிப்படியாகக் கூடுதலான அதிகாரங்களைப் பெற்று அரசியல் தீர்வை அடையும் அணுகுமுறையைப் பிற்பற்ற வேண்டும். அதற்குத் தயாராக இல்லையென்றால் வறுமை நிலையிலிருக்கும் தமிழ் மக்களின் வயிற்றிலடிக்கின்ற போலிப் பிரசாரத்தைக் கைவிட வேண்டும்.

**மாகாண சபைக்குரிய விடயங்கள் பறிக்கப்படுகின்றன என்று கூக்குரல் போடும் தமிழ்த் தலைவர்கள் மாகாண சபையை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பார்களா? நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றி இக்கோரிக்கையை வலியுறுத்துவார்களா?**

இனப்பிரச்சினைக்கான தீர்வை அடைவதற்கான நடைமுறையும் அடிமட்ட மக்களின் வறுமை நிலையைப் போக்கும் நடைமுறையும் பக்கம் பக்கமாக இடம்பெறவேண்டும். இனப்பிரச்சினையின் தீர்வுக்காக அடிமட்டத் தமிழ் மக்களையோ அம்மக்களுடைய பிரச்சினைகளின் தீர்வுக்காக இனப்பிரச்சினையையோ புறந்தள்ள முடியாது.

# சித்திரவதைக் கூடங்கள் இலங்கையில் இல்லை

## சுருதியை மாற்றுகிறது பிரித்தானியா

(கொழும்பு)

இலங்கை தமிழ் தஞ்சக் கோரிக்கையாளர்களை அவர்களது நாட்டுக்கு வழமையாக திருப்பி அனுப்புவதன் மூலம் அவர்களை ஆபத்துக்கு உள்ளாக்குவதாக கூறப்படும் குற்றச்சாட்டை பிரித்தானியா மறுத்துள்ளது.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள் குற்றஞ்சாட்டுவது போன்று, அப்படியாக திருப்பி அனுப்பப்படுபவர்கள் சில சந்தர்ப்பங்களில் இலங்கையில் சித்ரவதைக்கு உள்ளாகுகிறார்கள் என்பதற்கு எந்த விதமான ஆதாரமும் கிடையாது என்று தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் அலிஸ்டர் பர்ட் கொழும்பில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் பி.பி.சி செய்திச்சேவை வெளியிட்டுள்ள செயதியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்த பின்னரும்கூட, இன்றுவரை இலங்கையில் மனித உரிமைகள் குறித்த கவலைகள் பரவலாக காணப்படுகின்றன.

பிரிட்டனில் அரசியல் தஞ்சத்துக்கான கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் திருபபி அனுப்பப்படும் மக்களை, குறிப்பாக தமிழர்களை இலங்கை அரசாங்கம் சித்திரவதை செய்கிறது என்பதற்கு மருத்துவ ரீதியான ஆதாரம் இருக்கிறது என்று பிரிட்டனைத் தளமாகக் கொண்ட பிரீடம் ஃபுறம் டார்ச்சர் (சித்திரவதைகளில் இருந்து விடுதலை) மற்றும் அமெரிக்காவின் ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் ஆகிய அமைப்புக்கள் கூறியுள்ளன.

ஆனால், இது குறித்து ஒவ்வொரு விடயமாக ஆராயப்பட்டதாகவும், அச்சங்கள் இருக்கும் பட்சத்தில் அவை குறித்து நீதிமன்றங்களுக்கு அரசாங்கம் அறிவித்து வந்திருக்கிறது என்றும் பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் அலிஸ்டர் பர்ட் கூறியுள்ளார்.



தவறாக நடத்தப்படுவதற்கான சாத்தியம் இருப்பதாக காணப்பட்டால், அவர்கள் நீதிமன்றங்களால் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள். அப்படியான பிரச்சினை இல்லாத பட்சத்தில்தான் அவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள். இப்படியான விடயங்கள் குறித்து எங்களுக்கு நேரடியான ஆதாரம் எதுவும் கிடையாது.

அடுத்த நவம்பர் மாதத்தில் இலங்கையில் நடக்க திட்டமிடப்பட்டுள்ள பொதுநலவாய அரசாங்க தலைவர்களின் மாநாட்டில எந்த மட்டத்திலான பிரிட்டிஷ் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என்பது குறித்து இப்போதே முடிவுசெய்ய முடியாது என்றார்.

# துறைமுகத்தில் தீ விபத்து பின்னணி குறித்து விசாரணை



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த ரோலர் இயந்திரத்தில் நேற்றுமுன்தினம் தீப்பிடித்ததாக இலங்கை துறைமுகத்தின் தலைவர் கலாநிதி பியத் பந்துவிக்ரம தெரிவித்தார்.

இத்தீவிபத்தினால் உயிர் ஆபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் திடீர் தீ ஏற்பட்டமை குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தீயணைப்புப் படையினரால் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததாக துறைமுகத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

# நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு புதிய செயலாளர் நியமனம்

## பழிதீர்க்கும் படலம் ஆரம்பம்

(கொழும்பு)

ஷிராணி விவகாரம் முடிவுக்கு வந்தபோதிலும் இந்த விவகாரத்தில் சர்ச்சை கிளப்பிய நீதித்துறை அதிகாரிகள் பலர் மீது நடவடிக்கைகள் தொடர்கின்றன.

இதன் ஒரு கட்டமாக நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராக செயற்பட்ட மஞ்சுல திலகரட்ண ரத்தினபுரி மாவட்ட நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், நீதிச் சேவை ஆணைக்குழுவின் புதிய செயலாளராக சிசிர ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

# சட்டவிரோத கச்சேரி முற்றுகை மோசடிப் பேர்வழி கைது

(குருநாகல்)

குருநாகல் - மணிக்கூட்டு கோபுரச் சந்தியில் போலிக் கச்சேரி ஒன்றை நடத்தி வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சந்தேகநபர் போலி பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், திருமண பதிவுச் சான்றிதழ்கள் உள்ளிட்ட பல ஆவணங்களை சட்டவிரோதமான முறையில் வழங்கி வந்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 62 வயதுடைய ஒருவர் என தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யும் போது இவரிடமிருந்த அரச அதிகாரிகளின் இறப்பர் முத்திரைகள், அரச ஆவணங்கள் மற்றும் பிரதி எடுக்கும் இயந்திரம் ஒன்றும் குருநாகல் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் நேற்று குருநாகல் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

# ஆடம்பர கார் இறக்குமதியில் அரங்கேறியது நிதி மோசடி

## தோல் உரிக்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

ஆடம்பரகாரான "றோல்ஸ் றொய்ஸ் கோஸ்ட்" இறக்குமதி செய்யப்பட்ட விதம்பற்றி விசாரணை நடத்துமாறு ஐக்கிய தேசியக்கட்சி, அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.

குறிப்பிட்ட கார் தொடர்பில் றோல்ஸ் றொய்ஸ் நிறுவனத்தின் பட்டியலில் குறிப்பிடப்பட்ட விலைக்கும் சுங்க வெளிப்படுத்தலில் குறிப்பிடப்பட்ட விலைக்கும் இடையில் வித்தியாசம் இருப்பதனால் இதுபற்றி விசாரணை நட்த்தவேண்டியது அவசியமாகும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்த ஆடம்பர வாகனம் 175,000 அமெரிக் டொலர் பெறுமதியானது என வாகன இறகுமதியாளர் தனது வெளிப்படுத்தலில் கூறியிருப்பதன் அடிப்படையில் சுஙக வரியாக 61 மில்லியன் ரூபாவை மட்டும் அறவிட்டுக்கொணடு சுங்கத் திணைக்களம்



வாகனத்தை எடுத்துச் செல்வதற்கு அனுமதித் தது.

ஆனால், இந்தக் காரின் விலை 350000 அமெரிக்க டொலர் என்று இந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன் பிரகாரம் இரண்டு மடங்கு வரி அறவிடப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறு வரி அறவிடப்படவில்லை. அது தொடர்பில் ஒரு வெளிப்படையான விசாரணை நடத்தப்படல் வேண்டும் என்றார்.

# சட்டக்கல்லூரி அனுமதிக்கு மொழிவாரியாக வினாத்தாள்

## மோசடிக்கு அதிக வாய்ப்பு




(கொழும்பு)

கொழும்பு சட்டக் கல்லூரியினால் நடத்தப்படும் பிரவேச பரீட்சையின் போது, மூன்று மொழிகளிலும் தனித்தனியான வினாத்தாள்கள் தயாரிக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என தேசிய நிபுணத்துவ சபை தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப் பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்த சபையின் தலைவர் பந்துல சந்திரசேகர, இவ்வாறான தீர்மானங்களினால், உயர்தரப் பெறுபேற்றின் போது ஏற்பட்ட வெட்டுப்புள்ளி சர்ச்சை போன்று ஏற்படக்கூடும் எனச் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக கொழும்பு சட்டக் கல்லூரியின் அதிபர் டபிள்யூ. B. ரொட்ரிகோவுடன் தொடர்பு கொண்டு வினவியபோது,

அதற்குப் பதிலளித்த அவர், தற்சமயம் சட்ட பிரவேச பாட நெறிகளைச் சீர்திருத்த தீர்மானித்திருந்ததாக தெரிவித்தார்.

எனினும், பரீட்சை இடம் பெறும் போது, ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக பூரண இணக்கப்பாட்டிற்கு வருவது அசாதாரணமான செயல் என அவர் சுட்டிக்காட்டினார்.

# புதிய பிரதமர் நியமனம் இப்போதைக்கு சாத்தியமில்லை

(கொழும்பு),

பிரதமர் பதவியை ராஜினாமா செய்யும் நோக்கம் தனக்கு இல்லையெனினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேறு ஒருவரைப் பிரதமராக நியமித்தால், தான் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாக பிரதமர் டி.எம்.ஜயரத்ன குறிப்பிட்டார்.

பிரதமர் பதவி எனக்குச் சொந்தமானது அல்ல. பிரதமர் நியமனம் ஜனாதிபதியின் சிறப்புரிமை ஆகும். ஓர் அரசியல் நியமனம் ஒரு கோட் போன்றது.

இது எந்த நேரத்திலும் அகற்றப்படக்கூடியது.

அரசியல் வழியில் வந்த பதவியில் இருந்தாலும் இல்லாவிடினும் எனக்கு மக்களுக்கு சேவை செய்ய முடியும். நான் இளைப்பாறும் எண்ணத்தில் இல்லை. நான் எனது 60 வருட அரசியல் வாழ்வின்போது நாட்டுக்காக என்னால் இயன்றளவுக்கு சேவையாற்றியுள்ளேன்.

ஜனாதிபதி ராஜபக்ஷ, என்ன தீர்மானம் எடுத்தாலும் நாட்டின் நலனுக்காக அதை நான் ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளேன். ஜனாதிபதி எனக்கு மலை போன்ற உறுதியை வழங்கி சுகவீனமாக இருந்தபோது எனக்கு தேவையான சகலத்தையும் செய்தார் என தனது இல்லத்தில் சந்தித்த ஊடகவியலாளர்களுடன் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# சர்வதேச விசாரணைக்குழுவை அரசு தடுத்து நிறுத்தியதா?

## தெற்கில் கிளம்பும் புதிய சர்ச்சை

(கொழும்பு)

ஷிராணி விவகாரம் தொடர்பாக ஆராய்வதற்காக கொழும்புக்கு வருகை தரவிருந்த சர்வதேச விசாரணைக்குழுவின் விஜயத்துக்கு அரசு தடை விதித்ததா? என்ற புதிய சர்ச்சை தற்போது கிளம்பியுள்ளது.

இதன் காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை கொழும்புக்கு வருகைதரவிருந்த இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசர் ஜே.எஸ்.வர்மா தமது பயணத்தை இரத்துச்செய்துள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நிறைவேற்றப்பட்ட குற்றவியல் பிரேரணையின் சட்ட ஒழுக்கங்கள் தொடர்பில் ஆராயும் சர்வதேச விசாரணைக்குழுவுக்கு தலைமை தாங்கி வர்மா இலங்கைக்கு வரவிருந்தார்.

எனினும் தாம் தமது பயணத்தை இரத்துச்செய்து விட்டதாக வர்மா, த ஹிந்துவுக்கு குறிப்பிட்டுள்ளார்.



இலங்கைக்கான விசா இரத்துச் செய்யப்பட்டதாக வெளியான தகவல் குறித்து அவரிடம் ஹிநது கேட்டபோது, அவ்வாறான பிரச்சினை எதுவும் ஏற்படவில்லை என்று வர்மா குறிப்பிட்டுள்ளார். வர்மாவின் தலைமையிலான குழு, சர்வதேச சட்டத்தரணிகள் சம்மேளனத்தின் அனுசரணையின் கீழ் இலங்கைக்கு வரவிருந்தமை குறிப்பிடத்தககது.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 39 ஆயிரம் குடும்பங்கள் மீள்குடியமர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வருடத்தின் டிசம்பர் மாத இறுதிப்பகுதி வரையான காலப்பகுதி வரை 39 ஆயிரத்து 18 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு• மாவட்டச் செயலக புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடந்த யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் படிப்படியாக மீள்குடியமர்த்தப்பட்ட நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் 6 பிரதேச செயலர் பிரிவுகள் உள்ளடங்கலாக 39 ஆயிரத்து -18 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 24 ஆயிரத்து 642 பேர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளன.

இதன்படி கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் 12 ஆயிரத்து 281 குடும்பங்க ளைச் சேர்ந்த 38 ஆயிரத்து 928 பேரும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 11 ஆயிரத்து 552 குடும்பங்களைச் சேர்ந்த 36748 பேரும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 51 ஆயிரத்து 434 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 640 பேரும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 563 பேரும் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

மேலும் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 652 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 418 பேரும் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 536 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 789 பேரும் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.(04)

# கிளிநொச்சி மாவட்டத்தில் கலைப்பிரிவில் முதல்நிலை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் முதல் நிலை தகுதி பெற்று திருச்செல்வம் பிரசாந்தி என்ற மாணவி சாதனை படைத்துள்ளார்.

இவர் 2 ஏ, பி தர சித்தி பெற்று மாவட்ட ரீதியில் முதல் நிலையிலும், தேசிய ரீதியாக 102 ஆவது நிலையிலும் சித்தியடைந்துள்ளார்.

வன்னேரிக்குளம் - கிளிநொச்சியைச் சேர்ந்த இந்த மாணவி ஆரம்பக்கல்வியை வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்திலும், உயர்கல்வியை கிளிநொச்சி இந்துக் கல்லூரியிலும் கற்றவராவார்.

# மக்களுக்கு சிரமமின்றி வீதித்திருத்தம் இடம்பெறவேண்டும்

(மல்லாவி)

மாங்குளத்திலிருந்து துணுக்காய் செல்லும் மாங்குளம் வீதியில் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருவதால், அங்கு பேருந்துகள் சீரற்ற முறையில் நிறுத்தப்படுவதாகவும் இதனால் மக்கள் பயணங்களை மேற்கொள்வதற்கு அலைந்து திரியவேண்டியுள்ளதாகவும் பலர் தெரிவிக்கின்றனர்.

இதனால் பேருந்துகள் முன்பின்னாக பயணத்துக்காக எடுக்கும்போது பயணிகள் விபத்துக்களைச் சந்திக்க நேரிடுவதாகவும், அத்துடன் பயணத்திற்காக காத்திருக்கும் பயணிகளும் சிரமங்களுக் குள்ளாவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை இவ்வீதிப் பகுதி புனரமைப்புப் பணிகள் துரித கதியில் புனரமைக்கப்படவேண்டும் அல்லது பேருந்துகள் பிறிதொரு இடத்தில் நிறுத்தப்படவேண்டும். அப்பொழுது சிரமமின்றி செல்ல முடியும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (140)

# சட்டவிரோத மின்சாரம் பெற்ற மூவர் மீது வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் பிரிவில் சட்டவிரோத மின்சாரம் பெற்ற மூவர் யாழ்.பொலிஸாரால் பிடிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் மூவருக்கும் எதிராக தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 30 ஆயிரம் ரூபா யாழ். நீதிமன்றத்தினால் தண்டம் அறவிடப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் கடந்த மாதம் 27 ஆம் திகதி நடைபெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சட்டவிரோத சாராயம் வைத்திருந்த பல்வேறு சம்பவங்களில், பலர் இவவாறு ·யாழ். பொலிஸாரினால் பிடிக்கப்பட்டு அவர்களுக்கெதிராக நீதிமன்ற வழக்குகளும் பதிவு செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த 25 ஆம் 26 ஆம் திகதிகளில் யாழ். நகர்ப் பகுதியில் சட்டவிரோத மது பானம் வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்களில் ஒரு வருக்கு 5000 ரூபா தண்டமும் மற்றையவருக்கு 7000 ரூபா தண்டமும் யாழ். நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

## முரசின் இன்றைய பலன்

(03.02.2013 - ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் தை மாதம் 21 ஆம் திகதி.
நட்சத்திரம் சுவாதி சித்தம் பிற்பகல் 4.16 வரை. திதி ஸப்தமி காலை 6.35 வரை அட்டமி பின்னிரவு 04.29 வரை.
இராகுகாலம் 5.05 - 6.35 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மிகுந்த மதி நுட்பத்துடன் செயல்படுவீர்கள். சிறிய முயற்சிக்கும் அதிக நன்மை. தொழில் வளர்ச்சி. வெற்றிச் செய்தி வரும். நண்பருக்கு உதவி. கடன் தீரும். அறப்பணி ஈடுபாடு. |
| ரிஷபம் | உயர்ந்த செயல்புரிந்து சமூகத்தில் நற்பெயர். குடும்பத்தில் சுப நிகழ்வு. தொழில், அபிவிருத்தி. உபரி வருமானம். விருந்துண்டு மகிழ்வீர்கள். எதிர்பார்த்த சுப செய்தி வரும். |
| மிதுனம் | பணியில் மாற்றம் நேரிடலாம். கடனை தவிர்ப்பது நல்லது. தொழில், கடின உழைப்பு. சேமிப்பு செலவுக்கு பயன்படும். இல்லறத் துணை ஆறுதல். போக்குவரத்தில் கவனம். |
| கடகம் | செயலில் மிகுந்த நேர்த்தி. மனதில் நிம்மதியும், பெருமிதமும். தொழில், திட்டமிட்ட இலக்கு பூர்த்தி. அதிர்ஷ்டகர பணவரவு. வீட்டுப் பொருள் வாங்குவீர்கள். பிள்ளைகளால் நிமிர்வு. |
| சிம்மம் | மனதில் சாந்தகுணம். நண்பர் ஆலோசனையை மதிப்பீர்கள். தொழிலில், வாக்குறுதி நிறைவேற்றல். உபரி வருமானம். குடும்பத்தின் முக்கிய தேவை நிறைவேற்றம். மாணவர் தேர்ச்சி. |
| கன்னி | சிலரது பேச்சு, தர்மசங்கடம் உருவாக்கும். அவர்களிடம் இருந்து விலகுவீர்கள். வேலைச்சுமை. அளவான பணவரவு. பயணத்தில் தடங்கல். உடல்நலத்திற்கு உணவில் கவனம். |
| துலாம் | எதிர்பாரா உதவி ஒன்று, உறவினர் வழி வரும். மனதில் உற்சாகம். தொழில், வளர்ச்சி இலக்கு அடையும். ஆதாய வருமானம். வீட்டுப் பொருள் வாங்குவீர்கள். மாணவர்க்கு நன்மை. |
| விருச்சிகம் | சிந்தையில் அமைதி, செயலில் வசீகரம். தொழில், அனுகூல சூழ்நிலை உருவாகும். புதிய செலவு ஏற்படலாம். உடல் நலம் பலம் பெறும். எண்ணத்திலும் முடிவிலும் தெளிவு. |
| தனுசு | பொறுமை அவசியம். திட்டமிட்டுச் செயற்பட்டால் வெற்றி. தொழில், குறையை பிறரிடம் விவாதிக்க வேண்டாம். வரவை விட செலவு அதிகரிக்கும். அரசு தொடர்பான அனுகூலம். |
| மகரம் | பொறுப்புணர்வுடன் நடந்து பெருமையடைவீர்கள். தொழில், அனுபவசாலி ஆலோசனை உதவும். சேமிப்பு செலவுக்கு பயன்படும். இல்லறத்துணை அன்பு, பாசம். கலைஞர்க்கு உயர்வு. |
| கும்பம் | திறமைக்கு பாராட்டு கிடைக்கும். பரிவுடனிருப்பீர்கள். தொழில், கூடுதல் வளர்ச்சி. உபரி பணவரவு. உடல்நலம் பலம்பெறும். மாணவர்கள், படிப்பில் முன்னேற்றம். குடும்ப மகிழ்ச்சி. |
| மீனம் | செயல் திறமை பரிமளிக்கும். பணி எளிதாக நிறைவேறும். தொழில் செழிக்கும். பணவரவு திருப்தி. எதிரி தொல்லை விலகும். புது முயற்சிகள். எல்லோர்க்கும் உதவுவீர்கள். |

# உயர்தரப் பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

கொக்குவில் இந்துக் கல்லூரி

கணிதப்பிரிவு - ஆங்கில மொழிமூலம்

பி.கஜலக்ஷன் (3 ஏ - மாவட்ட நிலை - 6), ஆர். நிதர்ஷன் (2 ஏ, பி - மாவட்ட நிலை 44).

தமிழ்மொழி மூலம்

கே.மயூரன் (2 ஏ, பி), எஸ்சுவேதரன் (2 ஏ, பி), ஜெ.வியூகன் (2 ஏ, பி), எஸ்.சுகுமாரி (ஏ. 2பி), எஸ்.ஜனாதரன் (ஏ, 2 பி), ரி.சிதம்பரவானதி (ஏ,2பி), ஏ.அனிஷ்ரன் (ஏ,பி,சி), வி.மதுஷா (ஏ,பி,சி), எஸ்.ரேணுகா (ஏ,பி,சி), எஸ்.லனோஜன் (2 பி, சி), பி.சாரங்கன் (ஏ,பி,சி), எம்.தனிஸ்ரன் (பி,2சி), கே.கோபிகா (பி, 2 சி).

விஞ்ஞானப்பிரிவு

எம்.கீர்த்திகன் (3 பி), ரி.டினேஸ்குமார் (2பி,சி), எஸ்.சரவணன் (2பி, சி), ரி.கஜேந்திரன் (பி, 2சி), யூ.கோபிகா (பி, 2 சி), பி.பிரவீணா (பி, 2 சி), எஸ்.சுகன்ஜா (பி,2சி), எஸ்.சுமங்கலி (பி, 2 சி).

வர்த்தகப்பிரிவு

வி.நிரோஜன் (3 ஏ - மாவடட நிலை 2), எஸ்.சஞ்ஜீவன் (3 ஏ -மாவட்டநிலை -6), எஸ்.சிந்து (3 ஏ -மாவட்டநிலை 7), ஆர். டினேஸ (3ஏ - மாவட்டநிலை 11), ரி.தேனுஜன் (3ஏ), எஸ்.ருஷாந்தினி (3ஏ), ரி.நிஷாந் (3ஏ), எஸ்.ஆரணி (3ஏ), எஸ்.விமோசனன் (3ஏ), எஸ்.சர்ராஜன் (3ஏ), எஸ்.ஜெயந்தன் (3ஏ), எஸ்.சஞ்சிகா (3ஏ), எஸ்.சரத்ரொசான் (2ஏ,பி), கே.தர்ஷன் (2ஏ, பி), வி.பானுஜா (2ஏ, பி), ஏ.கௌசிகா (2ஏ, பி), பி.உமாசாயனன் (2ஏ,பி), பி.ருக்ஷாயினி (2ஏ,சி), சி.ரவீஷ் (2 ஏ, சி), எஸ்.அஜந்தன் (ஏ, 2பி), கே.பதீதா (ஏ, 2 பி), ரி.தயானந்தன் (ஏ,பி,சி), எஸ்.யசீதரா (ஏ,பி,சி), எம்.பங்கஜன் (ஏ,பி, சி), கே.ராகுலன் (ஏ,பி,சி), பி.திபாலினி (ஏ,பி,சி), எஸ்.லதுசிஜன் (3 பி), பி.உமாவதனி (3 பி), பி.வைஷ்ணவி (3பி), எஸ்.கிதுர்ஷன் (3பி).

கலைப்பிரிவு

ரி.ருசிகா (2ஏ,பி), ஜி.சன்ஜீவன் (2ஏ,பி), என்.சிவசங்கரி (2ஏ, பி), எஸ்.தர்ஷன் (2ஏ,பி), எஸ்.திவ்ஜா (2ஏ,பி), வி.ஜஷ்விகா (2ஏ,சி), கே.அமுதீஷன் (ஏ,2பி), ஆர்.கௌசிகன் (ஏ, 2 பி), எஸ்.கணபதி (ஏ,2பி), கே.சரண்ஜா (ஏ,2பி), பி.பவீஷன் (ஏ,பி, சி), ஜி.சித்தார்த்தன் (ஏ, பி, சி), பி.ஆர்த்தி (ஏ,பி,சி), ஆர். ஜீவதாரணி (ஏ,பி,சி), வை.பிருந்தா (3 பி), எஸ்.சுபானி (3 பி), பி.புவிஜா (ஏ, 2 சி). (தொடரும்.....)



ஆனைக்கோட்டை - காக்கைதீவில் கடந்த வாரம் இடம்பெற்ற மானிப்பாய் பொலிஸாரினால் நடமாடும் சேவையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கம் பேத் பொதுமக்கள் மத்தியில் உரையாற்றுவதையும் மாணவன் ஒருவருக்கு புத்தகப்பை வழங்குவதையும் காணலாம். (104)



இங்கிலாந்துக்கு எதிரான உலகக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் லீக் போட்டியில், கடைசிப் பந்தில் சிக்சர் அடித்து இலங்கை அணி திரில் வெற்றி பெற்றது. சர்வதேச ஒருநாள் போட்டியில் முதன்முறையாக இங்கிலாந்தை வீழ்த்தி சாதித்தது இலங்கை அணி. வெற்றிக் களிப்பை வீராங்கனைகள் வெளிப்படுத்துவதைக் காணலாம்.

# மீண்டு வருவேன்

(புதுடில்லி)

சாதிப்பதற்கான தாகம் என்னிடம் இன்னமும் உள்ளது. நான் மீண்டு வருவேன் என இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியில் நீண்ட காலமாக முதன்மைப் பந்து வீச்சாளராகக் காணப்பட்ட சகீர் கான், அண்மைக்காலத்தில் மோசமான பந்து வீச்சை வெளிப்படுத்தாததன் காரணமாக இங்கிலாந்திற்கெதிரான 4ஆவது டெஸ்ட் போட்டியிலிருந்து நீக்கப்பட்டார். இதன் காரணமாக அவரது எதிர்காலம் குறித்த கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

எனினும் இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள சகீர் கான், எனது கிரிக்கெட் வாழ்வு இன்னமும் முடிந்து விடவில்லை. இன்னமும் 3, 4 வருடங்கள் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற விரும்புகின்றேன்.

நான் மீண்டும் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற விரும்புகின்றேன். எனது பந்துவீச்சு, களத்தடுப்பு, உடற்தகுதி ஆகியன குறித்து முழுமையான தயார்படுத்தல்களுடன் உள்ளேன். அவுஸ்ரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் வாய்ப்புக் கிடைக்கும் என உறுதியுடன் எதையும் கூறிவிட முடியாது. இளம் வேகப்பந்து வீச்சாளர் புவனேஸ்வர் குமார் சிறப்பான முறையில் செயற்பட்டு வருவது மகிழ்ச்சி அளிக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



## வலியுறுத்தினால் விலகுவோம்

(டுபாய்)

இந்தியச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் போதோ அல்லது இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளும்போதோ நடுவர் தீர்ப்பு மேல்முறையீடு (டி.ஆர்.எஸ்) திட்டத்தை வலியுறுத்தினால் அந்தத் தொடரிலிருந்து விலகுவோம் என்று இந்திய கிரிக்கெட் சபை அச்சுறுத்தல் விடுத்துள்ளது.

டுபாயில் நேற்று முன்தினம் நடந்த ஐ.சி.சி. செயற்குழு கூட்டத்தில் டி.ஆர்.எஸ். குறித்த விவாதத்தில் இங்கிலாந்து தலைவர் ஜைல்ஸ் கிளார்க் தெரிவித்தாவது, எந்த ஒரு நாடு தொடரை நடத்துகிறதோ அந்த நாடு விரும்பினால் நடுவர் தீர்ப்பு மேல்முறையீடு வைக்கலாம் என்று புதிதாக ஒரு விதிமுறையைக் கொண்டுவர வேண்டும் என்றார்.

ஆனால் அவரது இந்தக் குரலுக்கு ஆதரவாக ஒருவரும் குரல் கொடுக்கவில்லை. இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ஸ்ரீனிவாசன், பயணம் மேற்கொள்ளும்போது கிரிக்கெட் தொடரை நடத்தும் நாடு ஏகமனதாக நடுவர் தீர்ப்பு மேல்முறையீட்டை அமுல் செய்தால், அந்தத் தொடரிலிருந்து இந்திய அணி விலகும் என்று அச்சுறுத்தியதாக கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜைல்ஸ் கிளார்க்கின் திட்டத்தை மற்ற நாடுகள் ஏற்கவில்லை என்றா லும், டி.ஆர்.எஸ். திட்டத்தை கட்டாயமாக்க வேண்டும் என்பதில் இந்தியாவைத் தவிர, மற்ற நாடுகளின் கிரிக்கெட் சபைகள் ஆதரவே தெரிவித்து வந்துள்ளன.

## டோனியின் முடிவால் சர்ச்சை

(சென்னை)

கார்ப்பரேட் ரொபி தொடரில் பங்கேற்பதற்காகவே, இரானி கோப்பை போட்டியிலிருந்து டோனி விலகியதாக சர்ச்சை எழுந்துள்ளது. இந்திய அணியின் கப்டன் டோனி (வயது- 31). இவர் ஐ.பி.எல். சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கப்டனாகவும் உள்ளார்.

இந்நிலையில், இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் துணைத்தலைவராக டோனி திடீரென நியமிக்கப்பட்டார். இதையடுத்து கார்ப்பரேட் ரொபி தொ-டரில் (பெப்.1-8) இந்தியா சிமெண்ட்ஸ் சார்பில் பங்கேற்பார் எனத் தெரிகிறது.

தனக்கு ஓய்வு வேண்டும் எனக் கூறி இரானி ரொபி (பெப். 6-10) தொடரில் இருந்து விலகிய டோனி, தற்போது கார்ப்பரேட் ரொபி தொடரில் மட்டும் பங்கேற்பது ஏன் என கேள்வி எழுந்துள்ளது.

இதற்கு பின்னணியில் இந்திய கிரிக்கெட் சபைத் தலைவரும் இந்தியா



சிமெண்ட்ஸ் நிறுவனத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனருமான சீனிவாசன் இருப்பதாக கூறப்படுகிறது. ஐ.பி.எல். தொடரில் இவரது சென்னை சூப்பர் கிங்ஸ் அணி ஏற்கனவே சம்பியன் பட்டம் வென்றது. இதே போல சம்பியன்ஸ் லீக் தொடரிலும் கோப்பை வென்றது. தற்போது கார்ப்பரேட் தொடரிலும் கோப்பையையும் கைப்பற்றும் நோக்கில் தான் டோனிக்கு இந்தியா சிமெண்ட்ஸ்நிறுவனத்தில் துணைத்தலைவர் பதவிஅளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஏற்கனவே பணம் கொழிக்கும் ஐ.பி.எல். தொடருக்கு நட்சத்திர வீரர்கள் முன்னுரிமை அளிப்பதாக சர்ச்சை எழுந்தது. தற்போது உள்ளூர் இரானி ரொபியை புறக்கணித்து கார்ப்பரேட் ரொபி தொடரில் டோனி விளையாட இருப்பது இந்திய கிரிக்கெட்டில் புதிய பிரச்சினையைக் கிளப்பியுள்ளது.



இங்கிலாந்து பிறிமியர் லீக் கால்பந்துத் தொடரின் செளத்தாம்டன் அணிக்கு எதிரான போட்டியில் மான்செஸ்டர் யுனைட்டட் அணி வெற்றிபெற்றது. இதில் பந்தை தன்வசப்படுத்த அந்தரத்தில் போராடிய இரு அணி வீரர்களையும் காணலாம்.

## டெய்லருக்கு அழைப்பு

இங்கிலாந்து அணிக்கெதிரான ருவென்ரி-20 மற்றும் ஒருநாள் போட்டிக்கான நியூசிலாந்து அணியில் முன்னாள் கப்டன் டெய்லர் இணைக்கப்பட்டுள்ளார். 3 ஒருநாள் போட்டிகளும், 3 ருவென்ரி-20 போட்டிகளும் இடம்பெறவுள்ளது.

ருவென்ரி-20 குழாம்: பிரென்டன் மக்கலம், ட்ரென்ட் போல்ட்ற், இயன் பட்லர், கிராண்ட்ற் எலியட், அன்ட்ரூ எலியஸ், ஜேம்ஸ் பிராங்ளின், மார்ட்டின் குப்ரில், ரொனி ஹீரா, மிற்சல் மக்லநகன், நதன் மக்கலம், கொலின் முன்ரோ, ஹேமிஸ் ரதர்போர்ட், ரொஸ் டெய்லர்

ஒருநாள் போட்டிக் குழாம்: பிரென்டன் மக்கலம், ட்ரென்ட் போல்ட்ற், கிராண்ட் எலியட், அன்ட்ரூ எலிஸ், ஜேம்ஸ் பிராங்ளின், மார்ட்டின் குப்ரில், மிற்சல் மக்லநகன், நதன் மக்கலம், கைல் மில்ஸ், கொலின் முன்ரோ, ரொஸ் டெய்லர், பிஜே. வற்லிங், வில்லியம்ஸன்.

## துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக மைக்கல் டி வெனூட்டோ



(சிட்னி)

அவுஸ்ரேலிய தேசிய கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக மைக்கல் டி வெனூட்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

1997 ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய அணிக்காக ஏழு சர்வதேச ஒருநாள் போட்டிகளில் மாத்திரம் டி வெனூட்டோ விளையாடியிருந்தார்.

அவுஸ்ரேலிய அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர் பதவியில் இருந்து ஜஸ்டின் லாங்கர் பதவி விலகியதை அடுத்து இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது. அனுபவம் மிக்க மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்களான மைக்கல் ஹசி மற்றும் ரிக்கி பொண்டிங் ஆகியோர் அண்மையில் ஓய்வு பெற்றுள்ள நிலையில், டி வெனூட்டோ பயிற்றுவிப்பாளர் பதவியை ஏற்றுள்ளார்.



## ஸ்டெயின் வேகத்தில் சுருண்டது பாகிஸ்தான்

(ஜோகனஸ்பேர்க்)

ஸ்டெயினின் வேகப்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய பாகிஸ்தான் அணி 41 ஓட்டங்களுக்குள் சுருண்டது. தென்னாபிரிக்க, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி தென்னாபிரிக்காவின் ஜோகனஸ்பேர்க்கில் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய தென்னாபிரிக்க அணி, கலிஸ், டுபிளிசர் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கலிஸ் 50, டுபி-ளிசர் 41, அம்லா 37, டிவில்லியர்ஸ் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மொகமட் ஹபீஸ் நான்கு, உமர் குல், யுனைட்கான் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய பாகிஸ்தான் அணி ஸ்டெயினின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் மதிய இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட வேளை, பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 49 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் அசார் அலி 13, கப்டன் மிஸ்பா உல் ஹக் 12 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் ஸ்டெயின் 8.1 ஓவர்கள் பந்துவீசி எட்டு ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். மற்றும் கலிஸ் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.



## நான்காவது வீரர்

(ஜோகனஸ்பேர்க்)

டெஸ்ட் அரங்கில் 13ஆயிரம் ஓட்டங்களைக் கொண்ட நான்காவது வீரர் என்ற சிறப்பை தென்னாபிரிக்காவின் கலிஸ் பெற்றுள்ளார்.

ஜொகான்னஸ்பர்கில் நேற்று முன்தினம் ஆரம்பான பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணியில் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் கலிஸ் டெஸ்ட் போட்டிகளில் 13,000 ஓட்டங்களைக் கடந்தார்.

தனது 160ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடி வரும் கலிஸின் டெஸ்ட் சராசரி 56.73. இதுவரை 44 சதங்கள், 58 அரைசதங்களை அடித்துள்ளார் கலிஸ்.

இதுவரை இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர், ராகுல் ராவிட் மற்றும் அவுஸ்ரேலியாவின் ரிக்கி பொண்டிங் ஆகியோர் 13000 ஓட்டங்களைக் கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவு பிரதேச மட்ட மென்பந்து கிரிக்கெட்; சென். அன்ரனீஸ், சென். அன்ரனீஸ் யூத் சம்பியன்


சென். அன்ரனீஸ்


சென். அன்ரனீஸ் யூத்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப்பிரதேச செயலர் பிரிவிற் குட்பட்ட அணிகளுக்கிடையிலான மென் பந்து கிரிக்கெட் போட்டியில் சென். அன்ரனீஸ் - சென். அன்ரனீஸ் யூத் அணி கள் சம்பியனாகியுள்ளன.

நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரி விற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங் களுக்கிடையிலான விளையாட்டு விழா வின் ஓர் அங்கமாக தற்போது பெரு விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இதில் ஆண், பெண்களுக் கான மென்பந்து கிரிக்கெட் தொடர் கடந்த 26ஆம் திகதி நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் நடை பெற்றது.

ஆண்கள் பிரிவில் ஐக்கிய தீபம், சென். அன்ரனீஸ், சென். அன்ரனீஸ் யூத், சென். ஜோன்ஸ் அணிகள் அரை யிறுதியில் மோதின. இதில் இறுதிப் போட்டிக்கு சென். ஜோன்ஸ் அணியும், சென். அன்ரனீஸ் அணியும் மோதின.

இதில் சென். அன்ரனீஸ் அணி வெற்றி பெற்று பிரதேச மட்ட சம்பியனாகியது.

தொடர்ந்து நடைபெற்ற பெண்களுக் கான போட்டியில் சென். ஜோன்ஸ், சென். அன்ரனீஸ், சென். அன்ரனீஸ் யூத் அணிகள் மோதின. இதில் இறுதிப் போட்டியில் சென். ஜோன்ஸ் அணியை வீழ்த்தி பிரதேச மட்ட சம்பியனாக சென். அன்ரனீஸ் யூத் அணி தெரிவா-னது. இப்போட்டி நிகழ்வில் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர், விளை யாட்டுத்துறை சார்ந்த அதிகாரிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டிகளைக் கண்டுகளித்தனர்.

(93)

# காங்கேசன்துறை ஐக்கியம் 4ஆவது முறையாகவும் அசத்தல்




(தெல்லிப்பளை)

தெல்லிப்பளைப் பிரதேச மட்ட கரப்பந்தாட்டத் தொடரில் தொடர்ந்து நான்காவது முறை யாக காங்கேசன்துறை ஐக்கிய அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றி சாதனை படைத் துள்ளது.

அத்துடன் ஆண்கள் பிரிவில் இளவாலை இளஞ்சுடர் அணி சம்பியனாகியுள்ளது.

தெல்லிப்பளை பிரதேச விளை யாட்டு விழாவின் ஓர் அங்கமாக தற்போது பெருவிளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி கடந்த 25ஆம் திகதி தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஆண்கள் பிரிவின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் அளவெட்டி மத்தி அணியும், பன்னாலை கணேசன் அணியும் மோதின. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பன்னாலை கணேசன் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் நகுலேஸ்வரம் அணியை எதிர்த்து இளவாலை இளஞ்சுடர் அணி மோதியது. இதில் சிறப்பாக ஆடிய இளவாலை இளஞ்சுடர் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் பன்னாலை கணேசன் அணி யும், இளவாலை இளஞ்சுடர் அணியும் மோதின. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இளவாலை இளஞ்சுடர் அணி 25-15, 25-13 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று பிரதேச மட்டச் சம்பியனாகியது.

தொடர்ந்து பெண்களுக்கான போட்டிகள் நடைபெற்றது.இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய அணியும், நகுலேஸ்வரம் அணியும் மோதின. இதில் காங்கேசன்துறை ஐக்கியம் அணி 25-12, 25-16 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் பன்னாலை கணேசன் அணியும், இளவாலை இளஞ்சுடர் அணியும் மோதின. இதில் பன்னாலை கணேசன் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய அணியும், பன்னாலை கணேசன் அணியும் மோதின. இதில் ஏற்கனவே கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ச்சியாக சம்பியன் பட்டத்தை தக்கவைத்துள்ள காங்கேசன்துறை ஐக்கியம் அணி இப்போட்டியின் வெற்றிபெற்று கிண்ணத்தை தக்கவைத்துக்கொள்ளும் என அதன் ஆதரவாளர்களால் எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் காங்கேசன்துறை ஐக்கியம் அணியில் தொடர் வெற்றிக்கு பன்னாலை கணேசன் அணியால் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என அதன் ஆதரவாளர்களால் நம்பப்பட்டது. இவ்வாறு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய இப்போட்டியில் ஆரம்பம் முதலே காங்கேசன்துறை ஐக்கிய வீராங்கனைகள் ஆதிக்கம் செலுத்தினர். இறுதியில் காங்கேசன்துறை ஐக்கிய அணி மிக இலகுவாக 25-20, 25-08 என்ற நேர் செட் கணக்கில் வென்று தொடர்ந்தும் நான்காவது முறையாக பிரதேச மட்ட சம்பியனானது. (93)





உயரப்புலம் மெ.மி.த.க. வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியின்போது, வினோதவுடைப் போட்டியில் பங்குகொண்ட மாணவர்களையும், பிரதம விருந் தினராகக் கலந்து கொண்ட யாழ். வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண. தயாளன் மாணவியொருவருக்கு வெற்றிக் கிண்ணம் வழங்குவதையும் காணலாம். (137)

# யதுஷன் அதிரடிச் சதம்; சென். ஜோன்ஸ் அபார வெற்றி

(யாழ்ப்பாணம்)

யதுஷனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி பெரு வெற்றி பெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக் கிடையிலான ஒரு நாள் போட்டி ஒன்று கடந்த 17ஆம் திகதி சென். ஜோன்ஸ்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி யதுஷனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 283 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய யதுஷன் 101 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், 15 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 128 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் அபி தாஸ் 45 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கலைராஜ் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 284 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி 27.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட் டுக்களையும் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றுப் படுதோல்வி அடைந்தது. இதில் தனுசன் 11, தயூஸ்ரன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கபில்ராஜ் மூன்று, ஐங்கரன், யதுஷன் தலா இரண்டு விக்கெட்டுக் களை வீழ்த்தினர். (எஸ்.பி.)

# யாழ். துரையப்பாவில் கால்பந்துப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கினால் பொங்கல் விழாவை முன்னிட்டு நடத்தப் படவிருந்த கால்பந்து போட்டி நாளை மறு தினம் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

21 வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையில் இடம்பெறவுள்ள இப்போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடை பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் யாழ். கால்பந்தாட்ட லீக்கில் அங்கத் துவம் பெற்றுள்ள அணிகள் பல மோதவுள்ள தாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரி வித்துள்ளனர். மைதான வசதியின்மை காரணமாகவே கால தாமதம் ஏற்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (எஸ்.பி.)




# மனதை அள்ளும் மலேசியா!

மலேசியா அரசும், ஏர் ஏசியா விமான நிறுவனமும் இணைந்து இந்த ஆண்டை சுற்றுலா ஆண்டாக அறிவித்துள்ளன. மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூர். இதைச் சுற்றிப் பார்க்கவே 2 நாள் பிடிக்கும். 2 கோடிப் பேர் வசிக்கும் இங்கு, வானுயர்ந்த கட்டடங்கள், கோபுரங்கள், வர்த்தக நிறுவனங்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகள், கோயில்கள், மசூதிகள் என்று திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் இரட்டைக் கோபுரம் தாக்கப்பட்ட பிறகு எல்லோராலும் நினைவில் வைத்திருக்கும் "ட்வின் டவர்" மலேசியாவில் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 451.9 மீற்றர். இதுதான் உலகத்தின் மிக உயரமான கோபுர மாகும். பகலில் பார்ப்பதை விட இரவில் மின்னொளியில் மின்னுவதை பார்ப்பதற்கே மிகவும் அழகாக இருக்கும். நகரின் மையப்பகுதியில் உலகத்திலேயே 6ஆவது உயரமான கோபுரமாக மலேசிய அரசின் தொலை தொடர்புத் துறையின் டவர் அமைந்துள்ளது. 300 மீற்றர் உயரம் கொண்ட அந்தக் கோபுரத்தின் உச்சியில் சுழலும் ஹோட்டல் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு இருந்து சாப்பிட்டு முடிப்பதற்குள் நகரை சுற்றிப் பார்க்கும் அளவுக்கு ஒரு முறை ஹோட்டல் சுற்றிவிடும். மலேசியாவில் வரி இல்லாததால், மிக குறைந்த விலையில் எலக்ட்ரோனிக் பொருட்கள் கிடைக்கின்றன. உலகின் 4ஆவது "ஷொப்பிங் சிட்டி"யாக மலேசியா விளங்குகிறது.

கோலாலம்பூருக்கு அருகிலேயே புத்ர ஜெயா என்ற புதிய நகரம் உருவாக்கப்பட்டுள்ளது. மலைகளாக காட்சியளித்த இடத்தை சுமார் 14 ஆண்டுகளுக்கு முன் திட்டமிட்டு இந்த நகரத்தை உருவாக்கியுள்ளனர். இந்த நகரில்தான் பிரதமரின் அலுவலகம் வீடு, மற்ற அமைச்சர்களின் அலுவலகங்கள், வீடுகள், நீதிபதிகளின் வீடுகள் என்று சுமார் 4 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்போது இந்த நகரில் சுமார் வெறும் 2 ஆயிரம் பேர்தான் வசிக்கின்றனர். ஆனால் 30 ஆயிரம் பேர் வசிக்கலாம் என்று திட்டமிட்டு நகர் உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு மட்டுமல்லாமல் மலேசியா முழுவதுமே சாலைகள் கண்ணாடி போல இழைக்கப்பட்டுள்ளன. இதன் அருகிலேயே "சைபர் ஜெயா" என்ற பெயரில் தகவல் தொழில் நுட்ப நகரம் உருவாக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரையும் மலேசியாவையும் ஒரு பாலம்தான் பிரிக்கிறது. மலேசியாவில் உள்ளூர் மக்கள் 60 சதவீதம் பேர் உள்ளனர். சீனர்கள் 30 சதவீதம் பேரும், இந்தியர்கள் 9 சதவீதம் பேரும் வசிக்கின்றனர்.

மலேசியாவில் குழந்தைகள் குதூகலமாக விளையாடுவதற்கு ஏற்ற பல இடங்கள் உள்ளன. லீகோ லாண்ட் என்ற பெயரில் 64 ஏக்கரில் பிரமாண்டமான முறையில் பொழுதுபோக்கு பூங்கா அமைக்கப் பட்டுள்ளது. சிங்கப் பூரை ஒட்டியுள்ள ஜோகர்பூரில் பழங்கால கட்டடங்கள் மசூதிகள், விலங்குகள் சரணாலயம் ஆகிய வையும் உள்ளன.

சுற்றுலா நோக்கோடு திட்டமிட்டு உருவாக்கப்பட்ட மலேசியா நாட்டுக்கு கடந்த ஆண்டு 24.7 மில்லியன் வெளிநாட்டு மக்கள் வந்துள்ளனர். அதனால்தான் இந்த ஆண்டை சுற்றுலா ஆண்டாக அந்நாட்டு பிரதமர் அப்துல் ரசாக் அறிவித்துள்ளார். உலகிலேயே அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வந்துள்ள நாடுகளில் 9ஆவது இடத்தில் மலேசியா உள்ளது என்று சுற்றுலாத்துறை துணை அமைச்சர் டத்தோ ஜேம்ஸ் கூறினார். மலேசியாவில் சுற்றுலாப் பயணிகள் பயமின்றி வந்து செல்லலாம். மக்கள் பழகுவதற்கு இனிமையானவர்கள். எல்லா வகையான உணவுகள், பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

கடற்கரையை ஒட்டிய நாடு மலேசியா என்பதால் சிறிய அளவிலான தீவுகள், ரிசோர்ட்கள்.

படகில் சென்று ரசிக்கும் குட்டிக் குட்டி நகரங்கள், மனித குரங்குகள் வசிக்கும் காடுகளுக்குச் சென்று வர ரோப் கார்கள் என்று ஒரு குட்டி சொர்க்க நாடாக மலேசியா விளங்குகிறது.

தென்னை மரம்போல செழிப்பான பாமாயில் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. நாட்டின் 60 சதவீத வருமானம் பாமாயில் மூலமே கிடைக்கிறது. மலேசியாவில் ஒரு லீற்றர்





பெட்ரோல் விலை இலங்கை ரூபா மதிப்பில் வெறும் 45 ரூபா தான்.

எங்கும் போக்குவரத்து நெரிசலை நாம் பார்க்க முடியாது. பொலிஸாரையும் பார்க்க முடியாது. சாலைகளை பெரும்பாலும் சி.சி.டிவி கமரா மூலம் கண்காணிக்கின்றனர்.



# கலைஞருக்கு அண்ணா வாங்கிக் கொடுத்த கணையாழி!

1959 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சித் தேர்தல். கண்ணதாசன், கலைஞர் உட்பட பல முன்னணி தி.மு.க. தலைவர்கள் திமுகவின் வெற்றிக்காக உழைத்தனர். முதன்முதல் சென்னை மாநகராட்சியைக் கைப்பற்றிய திமுக வெற்றிவிழாக் கூட்டம் ஒன்றை நடாத்தியது.







மேடையில் கலைஞர் உட்பட திமுக தலைவர்கள் பலர் இருந்தார்கள். கண்ணதாசன் கூட்டத்தின் ஒரு மூலையில் கேட்பாரற்று இருந்தார். கூட்டத்தில் அண்ணா(த்துரை) தனக்கேயுரிய பாணியில் பேசினார். "நான் எனது மனைவிக்கு நகைவாங்கிக் கொடுத்ததில்லை. ஆனால் இன்று இந்த வெயிலில் கடைகள் பல ஏறி இறங்கி இந்தக் கணையாழியை வாங்கிவந்திருக்கிறேன். இந்தக் கணையாழியை எமக்கு வெற்றிக்கனியைப் பறித்துத் தந்த தம்பி கருணாநிதிக்கு அணிவிக்கிறேன்" என்று அண்ணா விளாசித் தள்ளினார். கூட்டம் முடிந்ததும் மேடையால் இறங்கிவந்த அண்ணாவை கண்ணதாசன் சந்தித்தார். "என்ன அண்ணா! நாங்களும்தான் தேர்தலில் வேலை செய்தனாங்கள்" என்று கண்ணதாசன் அண்ணாவிடம் கொஞ்சம் மனத்தாங்கலாகக் கூறினார். இதற்கு அண்ணா சொன்னார், "அட நீ வேறை. நீயும் கணையாழி வாங்கித் தந்தால் உனக்கும் போட்டிட்டுப்போறன்".

தேவையில்லாமல் அண்ணாவைக் கோவித்துவிட்டேன் என்று கண்ணதாசனுக்கு வருத்தமாகப் போய்விட்டது.

அடுத்த சம்பவம் சுமார் 10 வருடங்களுக்கு முன் ரொறன்ரோவில் நடந்தது. புலி ஆதரவுக் கூட்டத்தில் பேசுவதற்கு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறன் ரொறன்ரோ சென்றார். நெடுமாறனை அவர் இருந்த வீட்டில் சந்தித்து ரொறன்ரோவில் இருந்த டாக்டர் ஒருவர் "செலவுக்கு வைச்சுக் கொள்ளுங்கோ" என்று 500 டொலரைக் கொடுத்துவிட்டுச் சென்றார். டாக்டர் "என்ன கூட்டம்" என்று அலுத்துக் கொண்டு கூட்டத்திற்குச் செல்லவில்லை. கூட்டத்தில் நெடுமாறன் பேசத் தொடங்கினார். "ஈழத்தில் ஏதாவது நடந்துவிட்டால் டாக்டர்... இரவுநேரங்களில் எனக்குத் தொலைபேசி எடுத்து விசாரிப்பார்" என்று ஆரம்பித்தார். இவ்வாறாக நெடுமாறன் பிரபாகரனுக்கு அடுத்து டாக்டரைப் பற்றித்தான் நிறையப் புகழ் பாடினார். ஒருசிலருக்கு முன்னால் புகழ்ந்தாலே ஆடிப்போகிற உலகத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னால் புகழ்ந்தால் எப்படி இருக்கும்? முற்றுந் துறந்த முனிவர்களையே அசைத்துவிடுமல்லவா! வானொலியில் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த டாக்டருக்கு இருப்புக்கொள்ளவில்லை. காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டார் கூட்ட மைதானத்தை நோக்கி. வழியில் சிக்னல் ஒன்றையும் டாக்டர் பார்க்கவில்லை. ஏன் பார்க்கவேண்டும்? டாக்டர்தான் றோட்டில் போகவில்லையே! அவர்தான் காரில் பறக்கிறாரே! கூட்டத்திற்குப் பதறியடித்துச் சென்ற டாக்டர் அங்கு ஏலத்திற்கு வந்த பொருட்களை வாங்கினார். நீங்கள் 501 டொலரை நெடுமாறனுக்குக் கொடுத்திருந்தால் டாக்டருக்குக் கிடைத்த புகழ் உங்களுக்குக் கிடைத்திருக்கும்!

இனி, ஈழப்பிரச்சினை எப்படி பலருக்கு வியாபாரமாகப் போய்விட்டது என்பது பற்றி பிரபல திரைப்பட இயக்குனர் பாலுமகேந்திரா கூறுவதனைப் பார்ப்போம். இவர் இலங்கையிற் பிறந்து சென்னையில் வசிப்பவர். இலங்கைத் தமிழர் பற்றி ஏன் படமெடுக்கவில்லை என்று கேட்டதற்குப் பாலுமகேந்திரா சொன்னார்,

"ஈழம் தொடர்பாக இங்கு உருவாக்கப்பட்ட படங்களோ, கதாபாத்திரங்களோ, ஈழ மக்கள் மீதான அக்கறையின் பால் உருவாக்கப்பட்டவை அல்ல; அவர்களுடைய சோகம் ஏற்படுத்திய பாதிப்பால் உருவாக்கப்பட்டவை அல்ல; அது இங்குள்ள வியாபார உத்திகளில் ஒன்று. என்னால் அப்படி நீலிக்கண்ணீர் வடிக்க முடியாது. ஈழப்பிரச்சினையைத் தொட்டு படம் எடுக்கவேண்டும் என்று எனக்கு ரொம்ப ஆசை. ஆனால் அதைத் தொட்டிருந்தால் மிகத் தீவிரமாகத் தொட்டு இருப்பேன். உண்மையை அந்தப்படம் அப்பட்டமாகப் பேசி

**- ருத்ரதாண்டவன் -**

இருக்கும். பலருக்குச் சங்கடம் கொடுக்கும் உண்மையாக அது இருந்து இருக்கும். என்னை இந்த உலக உருண்டையில் இருந்து நிரந்தரமாக நீக்கி இருக்கக்கூட அது வழிவகுத்து இருக்கும். அச்சம் தரும் இந்தச் சூழல்தான் ஈழத்தைத் தொட்டு நான் படம் எடுக்காததற்குக் காரணம்!" (25 யூலை 2012, ஆனந்தவிகடன்)

**அழுவார் அழுவார் எல்லாம்...**

# பத்தாண்டுகளின் பத்து இயக்குனர்கள்

2

சார்லஸ்

## ஃபெர்னாண்டோ மெய்ரெலஸ்



City of god என்னும் பிரேஸில் நாட்டுப் படம், நிச்சயமாக கடந்த பத்தாண்டுகளில் உலக அளவில் வெளிவந்த ஆகச் சிறந்த படங்களில் ஒன்று. வன்முறைகள் நிறைந்த சூழலில் அதைப் பார்த்துப் பயின்று வளரும் இளைஞர்களும் அதே தீயில் விழுந்து மடிவதை மிக அழுத்தமாகக் காட்டிய படம். கையில் ஏந்திய துப்பாக்கி கொடுக்கும் அளவில்லாத அதிகாரத்தின் ருசிகண்ட சிறுவர்கள், வறுமையையும் குடும்ப இழப்புகளுக்குப் பழிதீர்த்தலையும் காரணம் காட்டி, தாங்கள் வாழும் சூழலையே ஒரு நரகமாக மாற்றிவிடுவதை மிக உண்மையாகப் பதிவுசெய்த படம். மிகமிக சுவாரஸ்யமான கமரா அசைவுகளும், படத்தொகுப்பும், தொழில்முறை அல்லாதவர்களை நடிக்கவைத்த விதமும், நிறைய கதாபாத்திரங்கள் கொண்ட சுமார் இருபது ஆண்டுகள் நடக்கும் ஒரு பெருங்கதையை நேர்த்தியாக திரைக்கதைக்குள் சுருக்கியவிதமும், அந்தப் படத்தை ஒரு மறக்க முடியாத அனுபவமாக மாற்றியிருக்கின்றன. கடந்த 6 - 7 ஆண்டுகளில் தமிழ் சினிமாத்துறையினரை அதிகமும் பாதித்த படம் இதுதான் என்று தயங்காமல் சொல்லமுடியும்.

பிரேஸில் நாட்டில், ரியோ டி ஜெனிரோவின் ஒரு மூலையில், ஏழைகளும், அகதிகளும், குற்றவாளிகளும் வசிக்கும் "கடவுளின் நகரம்" என்னும் பெயர்கொண்ட குடியிருப்புப் பகுதியில், 1960கள் முதல் 80கள் வரை நடந்த உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப் பட்ட படம் இது. ஆரம்பமே அமர்க்களமானது, கோழி வெட்டுவதற்காக கத்தி தீட்டப்படுகிறது, கட்டப்பட்டிருக்கும் ஒரு கோழி தப்பித்து ஓடுகிறது, அதைப் பல சிறுவர்கள் துப்பாக்கிகளோடு துரத்திச் செல்கிறார்கள். போட்டோகிராபரான நாயகன் அங்குவர, ஒருபக்கம் துப்பாக்கிகளோடு வரும் போதை மருந்து கடத்தல் கும்பல் மறுபுறம் அவர்களைப் பிடிக்க வந்த பொலிஸ் இருக்க, நடுவில் பலியாகக் காத்திருக்கும் கோழி போல மாட்டிக்கொண்டு அவன் நிற்கிறான், அங்கிருந்து ப்ளாஷ் பேக்கில் கதை சொல்லப்படுகிறது. மிகச் சிறுவயதிலேயே கொலைகளைச் செய்ய ஆரம்பிக்கும் "ஸே" (Ze) துப்பாக்கியின் மீது சிறு வயதிலேயே மோகம்கொள்ளும் அவன் படிப்படியாக போதை மருந்து வியாபாரத்தை முழுவதும் கைப்பற்றுகிறான், அதற்காக ஏராளமானவர்களைக் கொன்று குவிக்கிறான். அந்தக் குடியிருப்பில் எல்லாராலும் அஞ்சப்படுகிற தாதாவாகிறான். மறுபக்கம் "ராக்கெட்" என்பவன் சிறுவயதிலேயே புகைப்படக் கருவியின் மீது ஆர்வம் கொள்கிறான், இறுதியில் ஒரு பிரபல பத்திரிகையில் புகைப்படக் கலைஞனாக வேலையில் சேர்கிறான்.



City of god

இரு "சுடும்" கருவிகளில் கமராவைத் தேர்ந்தெடுத்தவனே இறுதியில் பிழைக்கிறான். துப்பாக்கியை எடுத்தவன் இறுதியில் மிக அசிங்கமாக அவனைவிடச் சிறிய பொடிப்பயல்களால் கொல்லப் படுகிறான். அதுவரை எல்லாராலும் மதிக்கப்பட்ட அவன் வீழ்ந்த மறுகணமே தூக்கி எறியப்படுவது, ஆயுதத்தால் எடுத்துக்கொள்ளப்படும் அதிகாரம் எத்தனை நிலையில்லாதது என்று காட்டுகிறது. படத்தின் ஒரு முக்கியமான பகுதி, இரு போட்டிக் குழுக்களுக்குள் நடக்கும் நீண்டகால யுத்தம். ஆட்கள் சாகச் சாகப் புதிய பையன்கள் சேர்ந்தபடியே இருக்கிறார்கள். இரு குழுவுமே நகரத்தின் பல்வேறு இடங்களில் கொள்ளையடித்துப் பணமும் சேர்க்கிறார்கள், அதைக்கொண்டு மேலும் மேலும் ஆயுதங்களை வாங்கிச் சுட்டுத் தள்ளியபடியே இருக்கிறார்கள். ஆயுதப் போராட்டங்களின் இன்னொரு பெரிய அபத்தம், ஒரு குழுவுக்குள்ளேயே யார் எப்போது எதிராகத் திரும்புவார்களோ என்ற ஐயம். இறுதியில் "ஸே" கொல்லப்படுவதே அவனால் குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, அவனிடமிருந்து ஆயுதம் பெற்றவர்களால் தான்.

இயக்குனர் பெர்னாண்டோ மெய்ரெலஸ் மீது எனக்குத் தனிப்பட்ட முறையில் அதிக மதிப்பை உண்டாக்கியது உண்மையில் அவரது அடுத்த படமான The constant gardener தான்.

மேற்கத்திய மருந்துக் கம்பனிகள், ஆபிரிக்க மக்களின் வறுமையையும் நோயையும் அறியாமையையும் பயன்படுத்திக்கொண்டு, அவர்களுக்கே தெரியாமல் நடத்தும் மருந்துப் பரிசோதனைகளையும், அதைத் துப்பறிந்ததால் கொல்லப்படும் தன்னார்வ சேவகியையும், அவளுக்கு நியாயம் கிடைப்பதற்காகத் தன் உயிரைப் பணயம் வைக்கும் அவளது கணவனான பிரிட்டிஷ் தூதரக அதிகாரியையும் சுற்றிப் பின்னப்பட்ட உணர்ச்சிகரமான படம். இலவச மருத்துவ முகாம் என்ற பெயரில் நடக்கும் மருந்துப் பரிசோதனைகள், அதில் உயிரிழந்தவர்கள் பற்றிய தகவல்கள் துடைத்தழிக்கப்படுவது, ஊழல் மலிந்த ஆபிரிக்க அரசுகள் மற்றும் பன்னாட்டுத் தூதரக அதிகாரிகள், அச்சத்தில் வதங்கும் எளிய மக்கள் என்று உண்மைக்கு மிக நெருக்கமாக எழுதப்பட்ட ஜோன் லே கர்ரே-வின் நாவலுக்கு உயிர்கொடுத்து, உணர்ச்சிகரமும் சுவாரஸ்யமும் சிறிதும் குறையாத காவியமாக்கியிருக்கிறார் இயக்குனர்.



Blindness

அவருடைய இன்னொரு படமான blindness மிகுந்த குறியீட்டுத் தன்மையுள்ள படம். திடீரென்று பரவும் ஒரு வைரஸ் காரணமாகப் பலரும் குருடர்களாக மாறுகிறார்கள், நோய் மேலும் பரவாமலிருக்க பாதிக்கப்பட்டவர்கள் ஒரு தனிக் கட்டடத்தில் அடைக்கப்படுகிறார்கள். நல்ல கண் பார்வையோடு இருக்கும் ஒருத்தியும் தன் கணவனுக்கு உதவுவதற்காக அங்கு சென்று வாழ்கிறாள். இறுதியில் மொத்த நகரமும் குருடாகிவிட, தன்னலம் கருதாத தாயாகவே மாறிவிடும் அவள் மட்டுமே பார்வையோடு மிஞ்சுகிறாள்.

கண்ணுள்ள நாயகி தனியே போராடி தன்னைச் சார்ந்தவர்களை அடைபட்ட கட்டடத்திலிருந்து வெளியே கொண்டுவருகிறாள். ஆனால் அதற்குள் மொத்த மாநகரே குருடாகிவிட்டதைக் கண்டு அதிர்கிறாள். சமூக விலங்குகளான மனிதர்கள் உணவு தேடி கூட்டம் கூட்டமாக பிரம்மாண்ட நகருக்குள் அலைவது திகில் காட்சிகள். மனிதன் எத்தனை சிறியவன், அவனுடைய அகங்காரம் எத்தனை போலியானது, ஒரே ஒரு ஊனம் எப்படி மனித இனத்தையே பாதாளத்துக்குள் தள்ளிவிட முடியும் என்பதை மௌனமாக உணர்த்துகிறது படம். மேலும் "குருட்டுத்தன்மை" என்பதே, சகமனிதர்களின் மேல் அக்கறையில்லாத தன்மை, வெளியுலகப் பிரச்சினைகளில் அறியாமை போன்ற பொதுப் புத்தியையே குறியீட்டால் உணர்த்துகிறது.



The constant gardener

(தொடரும்)

# கனவுகள்! நிகழ்வுகள்!




நல்ல கனவுகளைக் கண்டால் அவை பலிக் காதா என்று ஏங்குகிறோம். கெட்ட கனவுகளைக் கண்டால் அவற்றை மறக்க முயல்கிறோம். சிலர் வாழ்க்கையில் கண்ட கனவுகள் அவர்களை உலகப் புகழடையச் செய்திருக்கிறது!

பிரபல ஆங்கில எழுத்தாளரான ஆர்.எஸ்.ஸ்டீவென்ஸன் எழுதிய பெரும்பாலான நாவல்களுக்கு உட்கருவாகக் கிடைத்த விஷயங்கள் எல்லாம் அவரது கனவுகள்தான் என்று சொல்லியுள்ளார். முக்கியமாக அவர் எழுதிய அழியாப் புகழ் பெற்ற நாவலான doctor jekyll and mister hyde என்ற கதைக் கரு உருவானது அவர் கண்ட கனவில்தானாம்.

பிரபல கவிஞரான கோல்ரிட்ஜ், கனவில் கண்ட சம்பவங்களை வைத்துதான் கவிதை எழுதுவார். செஸ்டர் டான் என்ற கவிஞர் ஒருநாள் தன் கனவில் வெள்ளைக் குதிரை ஒன்றையும் அதன் சாகசச் செயல்களையும் கண்டாராம். அதன் பலனாக எழுதப்பட்டதுதான் 'the pollard of the void horse' என்ற பிரபல கவிதை.

ஐசக் நியூட்டன் தன் கணிதப் பிரச்சினைகளுக்கு ஃபோர்முலா கண்டுபிடித்தது பெரும்பாலும் கனவுகள் மூலம்தான்.

நீரிழிவு நோயைக் குணப்படுத்த இன்சுலின் எனும் மருந்தைக் கண்டுபிடித்ததும் கனவின் பலன்தான். ஃப்ரெட்ரிக் ஜி.பொண்டிங் என்ற அறுவை சிகிச்சை நிபுணர் நீரிழிவு நோயையும், அதற்கான சிகிச்சை முறைகளைப் பற்றியும் சிந்தித்தவாறு படுத்திருந்தார். அப்படியே உறங்கிவிட்ட அவர் கனவில் பிரச்சினைக்கு முடிவு கண்டாராம். உடனே விழித்து, கனவில் கண்ட இன்சுலின் தயாரிக்கும் முறையை எழுதிக் கொண்டாராம். அத்ன் பலன் ஒரு மருந்தின் தோற்றம்.

காந்தி சத்தியாகிரகத்தை நடத்தும்படி வழிவகுத்துவிட்டது அவர் கண்ட கனவில்தான் என்று தனது சுயசரிதையில் எழுதியிருக்கிறார்.



# ஆர்வமூட்டும் இன்டர் நெட் தகவல்கள்

உலக அளவில் எத்தனை சதவிகிதம் பேர் இன்டர்நெட்டில் உலா வருகிறார்கள்? எந்த நாட்டிலிருந்து அதிகமான எண்ணிக்கையில் அதன் மக்கள் இன்டர்நெட்டில் தேடுகிறார்கள்? இன்னும் எத்தனை நாடுகளுக்கு இன்டர்நெட் வசதி கிடைக்கவில்லை? இது போன்ற தகவல்களை, இது குறித்து ஆய்வு நடத்தி வரும் அமைப்பு வெளியிட்டுள்ளது.

இணையத்தைப் பயன்படுத்துவோரில் 35.6% பேர் ஆசிய நாட்டவர்களே.

ஒவ்வொரு மாதமும் 38 கோடியே 90 இலட்சம் ஆசிய நாட்டவர்கள் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர். உலகின் மற்றக் கண்டங்கள் மற்றும் பகுதிகளோடு ஒப்பிடுகையில், ஆசிய நாடுகளில் தான் அதிகமானவர்கள் இணையத்தினைப் பயன்படுத்துகின்றனர். ஆபிரிக்காவில் 100இற்கு 3 பேரும், ஆசியாவில் 10 பேரும், ஐரோப்பாவில் 38 பேரும், மத்திய கிழக்கு நாடுகளில் 10 பேரும், அமெரிக்காவில் 70 பேரும், அவுஸ்ரேலியாவில் 53 பேரும் இணையத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். உலக மொத்த மக்கள் தொகையில், 16.6% பேர் இணையத்தினைத் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றனர்.

இன்னும் 18 நாடுகளில் இணையம் நுழையவில்லை. 5 கோடி பேரை இணையம் சென்றடைய 5 ஆண்டுகளே பிடித்தது. ஆனால், ரேடியோவிற்கு 38 ஆண்டுகள் ஆயின. தொலைக் காட்சிப் பெட்டி, இதற்கு எடுத்துக் கொண்ட ஆண்டுகள் 13. அமெரிக்காவில் இணையம் வழி வர்த்தகம் ஆண்டுக்கு 7% அதிகரித்து வருகிறது. இணையத்தில் மிக வேகமாக வளரும் பிரிவு சமுதாய வலைத் தளங்களாகும். இணையம் பயன்படுத்தும் உலக மக்களில், ஐந்தில் ஒருவர் தினந்தோறும் A ட்யூப் தளத்தினைப் பார்வையிடுகிறார்.

# Facebook Timeline இல் புதிய மாற்றங்கள் வரப்போகின்றன

தினமும் கண்ணாடி பார்த்து தலை சீவுவது போல், தினமும் Facebook பார்ப்பது நம் பலரினது வாழ்வின் ஒரு அங்கம். இது வரை இரண்டு முறை Profile பக்கம் மறு வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.




கடந்த முறை Timeline என புதிய வகைப் பக்கம் அறிமுகப் படுத்தப்பட்ட போது மக்கள் பெரும் அதிருப்தியில் இருந்தனர். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக பழகிப் போய் விட்டது.

இந்த முறை வரவிருக்கும் மாற்றங்கள்.

1.Subscribers எனும் சொல் "Followers" என மாறும்.

2. Timeline பொதுவாக வலது , இடது என இரண்டு பக்கமும் நிலைத் தகவல்கள் இருக்கும். இப்போது இடது பக்கம் மட்டும் நிலைத் தகவல்கள். வலது பக்கம் Profile Info & Added Photos இருக்கும்.

வலது பக்கம் இருக்கும் தகவல்கள் ஒரு அளவு Scroll செய்தவுடன் முடிந்து போகும். ஆனால் இடது பக்கம் உள்ள தகவல்கள் வந்து கொண்டே இருக்கும்.

3. ஒரு நண்பரின் புகைப்படங்களைப் பார்க்கும் போதும் அவரின் Profile Info மேல் ஓரத்தில் தெரிந்துகொண்டே இருக்கும்.

இந்த முறை செய்யப்படும் மாற்றங்கள் Timeline பயன்படுத்துவதை எளிமைப் படுத்தும் நோக்கில் வரவுள்ளன. விரைவில் உங்களின் facebook profile timeline இல் இந்த மாற்றங்களைக் காணலாம்.




# uTorrent மென்பொருள் புதிய பதிப்பு

நாம் இணையத்தில் இருந்து சினிமாப் படங்கள் போன்ற பெரிய கடைநகளை download செய்யும் போது அவைகளை torrent கடைநகளாக download செய்வோம். Torrent கடைநகளில் இருந்து நம் கணனியில் நேரடியாக download செய்ய முடியாது. அதற்கு பெரும்பாலானவர்கள் இந்த U Torrent மென்பொருளைப் பயன்படுத்துகிறார்கள். இந்த மென்பொருள் முற்றிலும் இலவசமான மென்பொருளாகும். இந்த மென்பொருளின் வசதிகளை மேம்படுத்தி புதிய பதிப்பாக 3.0(build 26473) இந்த நிறுவனம் வெளியிட்டு உள்ளது.

**மென்பொருளின் வசதிகள்:**

- ஏதேனும் ஒரு வீடியோ அல்லது ஓடியோ fileI download செய்து கொண்டிருக்கும் போதே அந்த file open செய்து வீடியோ சரியாக இயங்குகிறதா என பார்த்துக் கொள்ளலாம்.
- இதனால் நாம் Idownload செய்து கொண்டிருக்கும் போதே அந்த வீடியோ சரியாக இயங்கவில்லை அந்த வீடியோவின் தரம் பிடிக்கவில்லை என்றால் அப்பொழுதே அந்த downloadI நிறுத்தி விடலாம். இதனால் நம் நேரமும் internet உபயோகமும் சேமிக்கப்படும்.
- இன்னொரு வசதி நாம் download செய்யும் வீடியோவுக்கு இந்த மென்பொருளிலேயே மதிப்பெண் (Ratings) கொடுக்கலாம். இதனால் தரம் குறைந்த வீடியோக்கள் தவிர்க்கப்படும்.
- மற்றும் நாம் download செய்யும் வீடியோவை மற்றவகளுடன் பகிர்ந்து கொள்ளும் வசதி.
- இப்படி ஏராளமான வசதிகள் இந்த மென்பொருளின் புதிய பதிப்பில் வந்துள்ளது.

Install செய்யும் முறை:




- முதலில் கீழே உள்ள download button அழுத்தி மென்பொருளை download செய்து கொள்ளுங்கள்.
- பின்பு வரும் .exe பைலை இரண்டு முறை click செய்து மென்பொருளை கணனியில் நிறுவுங்கள் .
- மென்பொருளை நிறுவும் போது கீழே உள்ள படங்களின் படி tick குறியை நீக்கி விடவும்.
- இந்த இரண்டு படங்களில் உள்ள window வரும்போது மட்டுமே இதில் உள்ள மாதிரியே tick குறியை நீக்கி விடவும்.
- மற்ற winodwக்களில் Next கொடுத்துக் கொண்டு செல்லலாம்.
- முடிவில் instal என்ற button அழுத்தியவுடன் இந்த மென்பொருள் உங்கள் கணனியில் இணைந்து விடும்.
- இனி இந்த மென்பொருளை பயன்படுத்தி இணையத்தில் இருந்து கடைநகளை சுலபமாக download செய்து கொள்ளலாம்.

Download nra;a http://www.utorrent.com/downloads/complete




# பிழையில் தொடங்கிய கூகுள்!!!

உலகின் தலைசிறந்த தேடல் பொறியான (சேர்ச் இன்ஜின்) கூகுள் தனது 13 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளது.

கூகுள் (GOOGLE) சேர்ச் இஞ்சின் கொண்ட நிறுவனத்தை நிறுவிய போது, இதில் தேடப்படும் தகவல்களின் எண்ணிக்கை 1 போட்டு அதன் பின் 100 சைபர்கள் கொண்ட எண்ணாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் "Googol" என்ற சொல்லை முதலில் வைத்தனர். இந்த சொல் இலட்சம், கோடி என்பது போல, மேலே சொன்ன எண்ணைக் குறிக்குமாம். ஆனால் இந்த சொல்லை எழுதுகையில் அதில் எழுத்துப் பிழை ஏற்பட நமக்கு "Google" என்ற பெயர் கிடைத்தது. அது கூட இந்நிறுவனத்தை ஏற்படுத்தியவர்களால் ஏற்படுத்தப்படவில்லை. ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகத்தில் படித்த செர்ஜி பிரின் மற்றும் லொரி பேஜ் ஆகியோரால் தான் கூகுள் தொடங்கப்பட்டது. இவர்கள் இதனைத் தொடங்குவதற்கான ப்ரொஜெக்ட் ரிப்போர்ட்டினைத் தயாரித்து, ஒரு முதலீட்டாளரிடம் கொடுத்து நிதி உதவி கேட்டுள்ளனர். அவர் நிதி உதவி வழங்குகையில் தந்த செக்கில் "Google" எனத் தவறாக எழுதப்போய், தானம் கொடுத்த மாட்டின் பல்லைப் பிடித்துப் பார்க்க வேண்டாம் என இருவரும் நினைத்து அந்த தவறான எழுத்துப் பிழையுடனே நிறுவனத்தைத் தொடங்கி இன்று மனித இனத்தின் சிந்தனைப் போக்கினையே மாற்றிவிட்டனர்.

தற்போதைய நிலவரப்படி கூகுள் உலகின் முதல் தர தேடல் பொறியாக விளங்குகின்றது என்பது குறிப்பிடத் தக்கது. கூகுள் நிறுவனம் தொட்டதெல்லாம் தங்கமாக மாறவில்லை. அதற்குப் பின்னால் மிகவும் மோசமான தோல்விகளும் உண்டு.

# அப்பிள் கணனி வன்பொருள்கள் இனிஅமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும்

Foxxconn எனும் நிறுவனம் தான் Mac, iPhone iPad, iPod ஆகியவற்றின் வன்பொருள்களை சீனாவில் இருந்து உற்பத்தி செய்து கொடுத்து வருகிறது. அங்கே வேலைசெய்யும் ஊழியர்கள் அதிக பணிச் சுமை மற்றும் மன உளைச்சல் காரணமாக தற்கொலை செய்து வருகின்றனர். மாதந்தோறும் தற்கொலை செய்து சாகும் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இது பற்றிய செய்திகள் வரும் போதெல்லாம் அப்பிள் நிறுவனம் பெரும் தர்மசங்கடத்திற்கு ஆளாகும். தன் மீது படிந்த இந்தப் பழியைப் போக்கும் விதத்திலும் அமெரிக்கர்களுக்கு வேலைவாய்ப்பு தரும் விதத்திலும் இனி Mac கணனிகள் அமெரிக்க மண்ணில் இயங்கும் தொழிற்சாலையில் இருந்து உற்பத்தி செய்யப்படும் என அப்பிள் நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தப் பொருள்களில் எந்த விலை வித்தியாசமும் இருக்காது எனவும் அது தெரிவித்துள்ளது.

– செம்மணி – நாவற்குழி வீதியில் –

# விளக்குகள் இல்லா மின்கம்பங்கள்;

# விளைகின்றன ஆபத்துக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். செம்மணி - பிலதெல்பியா மிஷினரி சபைச்சந்தியில் இருந்து கைதடி - நாவற்குழி அரச உணவுக்களஞ்சியம் வரையான ஏ-9 வீதி இருளில் மூழ்கிக் காணப்படுவதால் இரவு வேளைகளில் பயணிப்போர் மிகுந்த அவலத்திற்குள்ளாகின்றனர்.

மக்கள் குடியிருப்பற்ற இந்த இடைவெளிப்பிரதேசத்தில் உள்ள மின்கம்பங்களில் மின்விளக்குகள் பொருத்தப்படாத நிலையில், வேகமாகப் பயணிக்கும் வாகனங்களின் அதிகூடிய வெளிச்சத்தின் நிமித்தம் துவிச்சக்கர வண்டிகளில் பயணிப்போர் தடுமாறி விழுவதற்கான சூழ்நிலை உள்ளாகின்றது.

அத்தோடு, குறிப்பிட்ட இவ்விடத்தில் பாலமும் வீதிவளைவும் இருப்பதால், இவ்விடங்களில் அண்மையில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே, பொதுமக்கள் மற்றும் பயணிகளின் நலன்கருதி இவ்வீதியில் உள்ள மின்கம்பங்களில் மின்விளக்குகளைப் பொருத்தி, அவர்களின் இரவு நேரப்பயணங்களுக்கு ஆபத்துக்கள், விபத்துக்கள் ஏற்படாத வண்ணம் செயற்பட சம்பந்தப்பட்டோர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்படுவோர் வேண்டுகின்றனர். (138)

## பாலியல் துஷ்பிரயோகம்; இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பகுதியில் 15 வயதுடைய சிறுமி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கிய 21 வயது இளைஞர் ஒருவர் அச்சுவேலிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து கடந்த 28 ஆம் திகதி அச்சுவேலிப் பொலிஸில் சிறுமியின் உறவினர்களினால் செய்து கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் இவரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவளை, அரியாலைப் பகுதியில் 15 வயதுச் சிறுமி ஒருவரை கடத்திய சம்பவம் தொடர்பாக முறைப்பாடு ஒன்று கடந்த 29 ஆம் திகதி யாழ். பொலிஸாரிடம் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், இந்தச் சம்பவம் குறித்து யாழ்.நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருப்பதாகவும், சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (பா)

## மாற்றுக்கொள்கை மையத்தினால் மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

(யாழ். நிருபர்)

மாற்றுக்கொள்கை மையத்தின் சமூகபங்களிப்பு நிகழ்ச்சித் திட்டப்பிரிவினால் மொழிஉரிமைகள் தொடர்பான தலைப்பின் கீழ் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இக்கட்டுரைப்போட்டி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் க.பொ.த. சாதாரணதரம் மற்றும் க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கிடையே 'மொழியும் மனிதநேயமும்' என்னும் தொனிப்பொருளில் நடத்தப்படும்.

இப்போட்டிக்குரிய தலைப்புக்களாக-

இலங்கையின் இனப்பிரச்சினைகளும் மொழிஉரிமைகளும், மொழி உரிமைகள் மனித உரிமைகளோ,மொழி உரிமைகளும் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வும், கலாசார பன்மைத்துவத்தின் அடிப்படையாக மொழி உரிமைகள், மொழி உரிமைகளை மதிப்போம் என்பவற்றில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து எழுதி அனுப்பவேண்டும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் வெற்றிபெற்ற ஆக்கங்களுக்கு பெறுமதியான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

## மருத்துவர் சிவசங்கர் கைது; மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

(மாங்குளம்)

மருத்துவர் சிவசங்கரின் கைது தொடர்பாக மாங்குளம் பொலிஸாரிடம் அறிக்கை பெறப்பட்ட நிலையில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி கொக்காவில் இராணுவ முகாமில் அத்துமீறி நுழைந்ததாகத் தெரிவித்து மாங்குளம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட மருத்துவர் சிவசங்கர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இராணுவத்தினரால் மருத்துவருக்கு எதிராக முன்வைக்கபட்ட குற்றச்சாட்டுக்கள் மற்றும் மருத்துவர் கைது செய்யப்பட்டமைக்கான காரணத்தினை அறிக்கை மூலம் சமர்ப்பிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்தமைக்கு ஏற்ப மாங்குளம் பொலிஸ் அத்தியட்சகரினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அநுராதபுரம் சிறைச்சாலையில் மருத்துவர் சிவசங்கரின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இரு தரப்பு வாக்குமூலங்களும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

வாக்குமூலங்களின் அடிப்படையில் மருத்துவரின் கைது குறித்து விசாரணை மேற்கொள்ளவுள்ளதாகவும், இவ்விசாரணை விரைவில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் மேலும் தெரிவித்தார். (25)

## காசோலை மோசடி; சூத்திரதாரிகள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர், பருத்தித்துறை, கொடிகாமம் பகுதியில் நான்கு காசோலைமோசடிச் சம்பவங்கள் கடந்த வாரம் இடம்பெற்றிருப்பதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜெப்ரி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ்.பெருமாள் கோவில் பகுதியில் நடைபெற்ற ஐந்து இலட்சம் ரூபா காசோலை மோசடி குறித்து கடந்த 30 ஆம் திகதி யாழ்.பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் காசோலை மோசடியில் ஈடுபட்டவர் கைது செய்யப்படவில்லையெனவும் இது குறித்து புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கொடிகாமம் பொலிஸ் பிரிவில் தவசிக்குளம் பகுதியில் நான்கு இலட்சம் ரூபா காசோலை மோசடிச் சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தின் சந்தேக நபர் கைது செய்யப்படவில்லை. அவரைக் கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

அத்துடன், பருத்தித்துறைப் பகுதியிலும் இவ்வாறு இரண்டு காசோலை மோசடிச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், ஏழு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா காசோலை மோசடிச் சம்பவத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். (பா)

## பதிவிறக்கப் பெட்டகம்

சினிமா சமூகத்தில் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது, குற்றம் செய்யவும், தவறு செய்யவும் தூண்டுகிறது என்ற கருத்தை ஒருபோதும் சினிமாகாரர்கள் ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள். ஆனால் அதன் பாதிப்பு சமூகத்தில் கடுமையாக இருக்கிறது என்பதை சமூகவியலாளர்களும் ஆசிரியர்களும் நடைமுறையில் நன்றாகவே அறிவார்கள். பெண்ணைப் பற்றி சமூகத்தில் ஏற்கனவே இருந்து வரும் மோசமான பார்வைகளை சினிமா, பத்திரிகை, தொலைக்காட்சி போன்ற மீடியாக்கள் கலைப்பதற்கு பதிலாக பலப்படுத்துகின்றன. ஆணுக்கு சேவை செய்ய பெண், பெண் ஷிட்டுக் கொடுத்தால் தான் குடும்பம் உருப்படும், ஆணின் இச்சைக்கானவள் பெண் என்ற கருத்துகளை திரும்பத் திரும்ப சொல்லிவருகிறது சினிமா. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற பழைய கருத்தை, பொறுக்கியானாலும் காதலன், ரவுடியானாலும், லவ்வர் என்று நவீனப்படுத்தியிருக்கிறது.

– ஞாநி

தமிழ்த் திரைப்படங்களை நான் பார்க்க வேண்டும், தமிழ் வாழ்வின் ஒரு முக்கியமான வெளிப்பாட்டு வழவத்துடன் தொடர்பின்றி இருக்கக் கூடாது என்று வலியுறுத்தும் நண்பர்கள் பலர் உள்ளனர். இடையில் முயன்று சில படங்களைப் பார்த்தேன். தொடரும் ஆர்வம் இல்லை. பார்ப்பதே பெரும் துன்பமாக இருக்கிறது. நம்பகத் தன்மையும் இல்லை. நேரத்தை வீணாக்கிய குற்ற உணர்ச்சியும் ஏற்படுகிறது. அதிகமும் திருட்டு, சுரண்டல், படுபிற்போக்கான மதிப்பீடுகள். சில புதுமைகளும் சுவாரசியங்களும் இல்லாமல் இல்லை. வெகுஜன இலக்கியத்தோடு ஒப்பிடுகையில் தமிழ் சினிமா தமிழ் வாழ்வின் பல தருணங்களை நுட்பமாகக் காட்சிப் படுத்துகிறது, 'வரும் ஆனா வராது' போன்ற தமிழ் வாழ்வைச் சித்தரிக்கும் இன்னொரு வரி இல்லை! இத்தகைய வரிகளைத் தமிழ் வெகுஜன இலக்கியம் எப்போதும் தந்தது இல்லை. தமிழ் வெகுஜனப் பண்பாட்டு வழவங்களாகப் பார்க்கப்படும் துப்பறியும் நாவல்கள் எல்லாம் மாபெரும் அபத்தக் களஞ்சியங்கள். வாசகனை முட்டாளாக அனுமானிக்கும் பண்பு தமிழ் வெகுஜனப் பண்பாட்டில் ஆழமாக வேரூன்றியிருக்கிறது. துப்பறியும் நாவல்களுக்கும் தமிழ்க் குற்ற வரலாறுக்கும் புலனாய்வுச் செயல்பாடுகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. தமிழ் துப்பறியும் நாவல்களில் தனியார் துப்பறிஞர்கள் வருவார்கள். உண்மையில் இந்தியச் சட்டத்தில் இதற்கு இடமில்லை. 'டிடெக்டிவ்' எனும் பதவி இந்தியாவில் இல்லை. பொலீஸ் ஆய்வாளரே கொலையை விசாரிக்கும் அதிகாரம் கொண்டவர். இதுபோன்ற எண்ணற்ற தமிழ் வாழ்வோடு தொடர்பற்ற அபத்தங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். காரணம் இவை தமிழ் வாழ்விலிருந்து அழகியலிலிருந்து பண்புகளிலிருந்து பண்பாட்டிலிருந்து கிளர்ந்து எழவில்லை. தமிழ் வெகுஜனப் பண்பாட்டின் கணிசமான பகுதி தழுவல், இன்னொரு பகுதி திருட்டு, கொஞ்சம் படைப்பூக்கம்.

– காலச்சுவடு கண்ணன்

தனது போதாமையைப் பற்றிய எண்ணத்திடம் தான் ஒரு கலைஞன் ஓயாமல் போராடிக்கொண்டிருக்கிறான்.

– Francis Ford Coppola

இயல், இசை, நாடகம் என பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் முத்தமிழ் என்று சிறப்பித்துக் கூறப்படும் தமிழில் நாடகம் இன்று எத்தகைய நிலையில் உள்ளது? ஒலிபெருக்கியின் முன்னே வந்து பொதுக் கூட்டத்தில் பேசுவது போல் நின்று ஜோக்குகளை உதிர்த்து விட்டுப் போகிறார்கள் நாடகப் பாத்திரங்கள். இதுதான் இங்கே நாடகம் என அறியப்படுகிறது.

சீரியஸ் நாடக முயற்சிகளைப் பற்றி சொல்லவே வேண்டியதில்லை. மக்களிடமிருந்து முழுமையாக அந்நியப்பட்டு செவ்வாய்க் கிரகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் வேற்றுலகவாசிகள் அவர்கள். அவ்வப்போது பூமிக்கும் இறங்கி வந்து ஒரு கோடி ரூபாய் செலவில் ஒரு நாடகத்தைப் போட்டு விட்டு தங்கள் கிரகத்துக்குச் சென்றுவிடுவார்கள். இத்தகைய ஒரு கலாசாரப் பின்னணியில்தான் தமிழ் சினிமாவையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். உலகம் முழுவதும் சினிமாவுக்கான இலக்கணம் என்னவாக இருக்கிறதோ அது சற்றும் செல்லுபடியாகாத ஒரு உலகம் இது.

– சாரு நிவேதிதா

# வடமாகாண ஆசிரியர் இடமாற்ற விபரம்

(நேற்றைய தொடர்ச்சி...)

வடமாகாணத்தில் 01.02.2013 முதல் இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

வலிகாமம் வலயத்திலிருந்து ஏனைய வலயங்களுக்கு இடமாற்றம் பெறுபோர்.

R.Sritharan - Kilinochchy
R.Parathan - Kilinochchy
K.Jeyakanthini - Thunukkai
M.Kiribakaran - Kilinochchy
P.Jothyluxmy - Kilinochchy
N.Akilini - Kilinochchy
J.Gnanakumar - Kilinochchy
S.Uthayakumar - Kilinochchy
R.Senthan - Kilinochchy
S.Ragavan - Kilinochchy
R.Nanthakumaar - Thunukkai
N.Yasotha - Kilinochchy
S.Piragatheesh - Kilinochchy
M. Anpusibogini - Kilinochchy
K.Muralimohan - Kilinochchy
M.Jeyakumar - Thunukkai
R.Kesavan - Kilinochchy
R.Anadasoruban - Mullaitivu
A.Ajanthini - Thunukkai
K.Ragavan - Kilinochchy
T.Sriharan - Kilinochchy
R.Sukendran - Kilinochchy
K.Priya - Kilinochchy
S.Adshayan - Mullaitivu
S.Thirukumaran - Thunukkai
T.Sulojini - Kilinochchy
E.Kavitha - Mullaitivu
N.Nalajini - Kilinochchy
T.Nishjanthy - Kilinochchy
K.Kalaivani - Kilinochchy
A.Mathini - Thunukkai
P.Mukunthan - Kilinochchy
B.Sutharsiny - Kilinochchy
S.Jegatheeswary - Kilinochchy
V.Rathika - Mullaitivu
S.Mythily - Mullaitivu
M.Parameswaran - Kilinochchy
S.Kirupakaran - Kilinochchy
S.Chandrakumar - Kilinochchy
A.Ananthavasan - Kilinochchy
N.Selvakumar - Thunukkai
J.Chandranipa - Mullaitivu
G.Thineshkumar - Kilinochchy
S.Menakai - Kilinochchy
J.Jeevamalar - Thunukkai
S.Rogeslan - Mullaitivu
S.Lingeswaran - Kilinochchy
N.Sujeevan - Mullaitivu
S.Subesan - Kilinochchy
T.Theviga - Kilinochchy
P.Suregini - Mullaitivu
T.Thushyanthi - Kilinochchy
N.Manchula - Kilinochchy
M.A.Murugathasan - Thunukkai
K.Pratheepan - Kilinochchy
T. Akilan - Kilinochchy
K. Krishnalingam - Kilinochchy
V.Balasubramaniyam - Kilinochchy
N.Arulvhani - Kilinochchy
K.Arulraj - Kilinochchy
N.Krishnaveni - Thunukkai
J.Amirthanirajan - Kilinochchy
S.Sasikala - Kilinochchy
T.Thurajini - Kilinochchy
S.Jeyajanany - Mullaitivu
S.Pradeepan - Thunukkai
S.Thiruniraichelvan - Kilinochchy
V. Sithrubini - Kilinochchy
A.Joe Antont verni - Kilinochchy
J.Anusdathas - Mullaitivu
B.Ramanakaran - Mullaitivu
V.Kodeeswary - Kilinochchy
N.Mathavan - Thunukkai
S.Suthakaran - Thunukkai
S.Narayani - Mullaitivu
M. Srithangarajah - Mullaitivu
G. Dominicjeeva - Mullaitivu
N. Suthajini - Kilinochchy
S. Vanimalar - Mullaitivu
I.Partheepan - Kilinochchy
A.D.Kalenthiran - Kilinochchy
C.Suthakaran - Mullaitivu
G.Sivasankarasarma - Islands
A.M.D.Uthayakumar - Kilinochchy
S.Yokesvari - Kilinochchy
P. Suganthini - Mullaitivu
T. Robert Anantharajah- Mullaitivu
V. Sathiyaruban - Mullaitivu
R. Sylvester - Kilinochchy
I. Jeyachithra - Thunukkai
S. Sivasuthan - Islands
S. Sivaharan - Mullaitivu
V. Priya - Kilinochchy
C.Jeyamanon - Kilinochchy
M.J.Calistrus - Thunukkai
V.Thushyanthan - Thunukkai
N.Ananthakumar - Mullaitivu
S.Jeyakanthan - Kilinochchy
Pathma Rajkumar - Kilinochchy
s.suhirtha - Kilinochchy
Gisitha Vigneswaran - Thunukkai
Gayathree - Kilinochchy
K.Vimalathasan - Kilinochchy
L.Kamalesweran - Kilinochchy
G.Vijayabasker - Kilinochchy
J. Karunananthan - Kilinochchy
A.Srijeyanthy - Kilinochchy
V.J.Thileepan - Madhu
J.Jeyajeevan - Madhu
V.Nagulan - Madhu
K.Hamsan - Madhu
R.Sasikumar - Madhu
J.J.V.Mariyaselvam - Madhu

யாழ்ப்பாணம் வயலத்திலிருந்து ஏனைய வலயங்களுக்கு இடமாற்றம் பெறுவோர்

A.Rameshan - Thunukkai
A.Sutharjini - Kilinochchy
S.Saseelan - Thunukkai
V.Suresh - Kilinochchy
V.Jeyaganesan - Kilinochchy
K.Suthrsiny - Kilinochchy
A.Sadacharalingam - Thunukkai
S.Vethanayakam - Mullaitivu
A.Robinson - Mullaitivu
Sinnathurai Annamalai - Mullaitivu
Gowreeswary Govinthu - Kilinochchy
Jeyavani Jeyaganmohan - Kilinochchy
A.J.Anit marida - Kilinochchy
Amuthasurami Neminathan - Kilinochchy
A.Hemaraji - Kilinochchy
P.Sumathila - Kilinochchy
Pakkiyanathan Kirishankar - Kilinochchy
Seenivasagam Ajanthan - Kilinochchy
k.Nalinthini - Kilinochchy
T.Anitha - Thunukkai
Sutharshini Sivananthan - Island
G.Vijayatharshini - Thunukkai
Suganthini Pratheepan - Island
Thanuja Thavayogarajah - Thunukkai
Pratheepan Pratheepa - Kilinochchy
Pavalamalar Theepan - Kilinochchy

தென்மராட்சி வலயத்திலிருந்து ஏனைய வலயங்களுக்கு இடமாற்றம் பெறுவோர்

Sivasubaitha Shriganeshan -Kilinochchy
Inthumathy Kajendran -Kilinochchy
Shamini Gnanathevan -Kilinochchy
Kanapathippillai Kugathasan -Mullaitivu
Sasikalathevy Vigneswaran -Kilinochchy
Suthajini logadas -Kilinochchy
Kunaneswary Sivakaran -Kilinochchy
Thangaluxmy Alexhander- Kilinochchy
Suthajini Sivathasan -Kilinochchy
R.Ahilajayam -Kilinochchy
Marimuthu Sivagumar -Kilinochchy
Rangini Narentheran -Kilinochchy
Mathivathani Senathirajah -Thunukkai
Subajini Saravananathan -Kilinochchy
Bavani Tharmalingam -Thunukkai
Tharmini Sabesan -Kilinochchy
Sinnakuddy Thavarajah -Thunukkai

மடுவலயத்திலிருந்து ஏனைய வலயங்களுக்கு இடமாற்றம் பெறுவோர்

A.Jenitta - MAN
D.J.V.Croos - MAN
N.Murukavel - VAS
S.Colastini - MAN
S.Ranjanbabu - VAL
P.Raveenthiran - VAL
H.I.Jude Punnitharj - MAN
A.Imalda - MAN
S.Sasitharan - VAL
G.Esarway - JAF
M.Susinthiran - VAD
S.Jeyamalar - MAN
Annamary Alvin Dabara- MAN
Danistan Vijayakumar - VAL

துணுக்காய் வயத்தில் இருந்து ஏனைய வலயங்களுக்கு இடமாற்றம் பெறுவோர்

M.Thevakanthan - JAF
T.Manikumar - VAD
M.Selvanayagam - VAS
M.Ayinkaran - VAS
S.Sasikaran - MUL
P.Gandeepan - ISL
S.Jeyachchandran - VAD
J.Tharmathas - VAS
K.Sasikaran - JAF
I.Vinsana - VAS
R.Kumuthini - VAD
V.Kanendran - VAL
T.Navaneethan - KIL
S.Ketheeswaranathan - KIL
P.Tharmapoopathi - JAF
S.Suthaskaran - VAS
S.Jeevagini - JAF
I.Vikeneswaraja - MUL
V.Mathyalagan. - VAL
T.Senthilnathan - VAD
Rajathurai Ramani - VAS
Thayalan.P - KIL
R.Perinpanathan - KIL
I.Rajamathan - MUL
Satkunaseelan.B - MUL
J.Jegatheeswary - MUL
Suthamathy.J - MUL
K.Mathanarajh - JAF
T.Chandralatha - MUL
Thayanithy.J - THN
Agavaneeyam.R - VAS
S.Rakulan - KIL
Sivaganesh.B - KIL
Soosainathar.A - VAD
U.Pushparani - MUL
S.Ramkumar - VAS

முல்லைத்தீவு வலயத்திலிருந்து ஏனைய வலயங்களுக்கு இடமாற்றம் பெறுவோர்

B.Tharmabalan -VAD
S.Jeyapalan -JAF
A.Vathsalan -ISL
K.Mohanaranjan -JAF
K.Subaskaran -VAL
K.Ganenthiran -VAS
P.Kesavan -JAF
P.Ketheesweran -VAD
R.Kamalaverny -VAS
K.Vijitha -VAL
S.Subasini -THN
S.Sivarooban -VAD
M.Selvakaran -THN
S.Perinpavathani -VAS
M.Sritharan -THN
B.Kamalakkannan -VAD
P.Balakrishnan -VAL
P.Muraleetharan -VAD
P.Sarmila -JAF
B.Sivasubramaniyam -VAL
M.G.D.Iruthajanathar -KIL
B.Kumaravelu -VAD
S.Vasanthakumar -VAD
N.Navaratnakumar -JAF
Y.Mugunthan -VAL

வவுனியா வடக்கு வலயத்திலிருந்து ஏனையவலயங்களுக்கு இடமாற்றம் பெறுவோர்

V.Maheshan - KIL
A.Sivanantham - VAL
S.Vinothkumar - JAF
T.Kodeeswaran - VAS
M.Murugathasan - JAF
P.Ketheswaran - JAF
K.Uthayanan - VAS
R.Peruntha - VAL
V.Sivasanthy - KIL
V.Periyasamy - VAS
T.Vasikaran - VAL
S.Theivendran - VAS
A.H.Vathanakumary- VAS
K.Suntharasarma - VAS
E.Rohini - VAS
T.Thayaliny - VAS
S.Senthuran - VAD
A.Nalajini - VAS
P.Thatparan pongaland- VAS
T.Pushpakalarani - VAS
S.Sujatheep - VAL
J.Senthilbalan - VAS
M.Selvarasa - VAS
A.Thileepan - VAS
P.Subananthiny - THEN
G.Colestina - JAF
S.Yokeswary - VAS
K.Sunmugaratnam - VAS
N.Thavarupan - KIL
K.Santhyrakumar - VAD
S.Thillaivasan - VAD
J.Kavitha - JAF
K.Vani - VAD
S.Sivaneswary - VAD
N.Kamalanayaki - VAS
S.Surapaskaran - VAL
B.Kathyrvanan - VAS
P.Selvarajane - VAS
E.Navarathnamalar- VAS
V.Sujatha - VAS
M.Sasikala - VAD
B.Ragunathan - VAD
K.Silogini - VAS
V.Swarna - VAD
R.Pakeerathan - THEN
S.Palanikethan - VAL
M.Thavarupan - VAL
V.Bavananthasarma- VAL
K.Kuhatheepan - VAL
Nithiyananthakurukkal
Bavananthasarma - VAL

வவுனியா வலயத்திலிருந்து ஏனைய வலயங்களுக்கு இடமாற்றம்பெறுவோர்

Mrs.J.Dayanithy -Vavuniya North
Mrs.R.Jude Nesarajah -Vavuniya North
Mrs.Gowry nalini
Thejagarajah -Vavuniya North
Mrs.V.Rajalingam -Vavuniya North
Mrs.P.Sutharshan -Vavuniya North
Mrs.K.Rajendran -Vavuniya North
Mrs.R.Sivakumaran -Vavuniya North
Mrs.V.Murugananthan -Vavuniya North
Mrs.T.Parameswary -Vavuniya North
Mrs.A.Nanthakumar -Vavuniya North
Mrs.U.Vilvanantha -Vavuniya North
Mrs.G.Arulingam -Vavuniya North
Mr.T.Janananthasivam -Vavuniya North
Mrs.V.Navaratnarajah -Vavuniya North

(முற்றும்)

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான விஞ்ஞானபாட விஷேட செயற்றிட்டம்

ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (Bsc)

முதலாம் வினா உட்பட எட்டு வினாக்களுக்கு விடை தருக

01) தையல் இயந்திரம் பல எளிய பொறிகளைக் கொண்ட ஓர் சிக்கலான பொறியாகும்.



1. எளிய பொறி என்பதால் நீர் விளங்குவது யாது?
2. தரப்பட்ட இயந்திரத்தில் காணப்படுகின்ற பொறிவகைகளை பட்டியல் படுத்துக.
3. இவ்வமைப்பில் சக்தி ஊடுகடத்தும் முறை யாது?
4. சில்லின் வேகத்தை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கை யாது?
5. சுழற்சியின்போது சில்லுகளின் சுழற்சி திசை பற்றி யாது கூறுவீர்?
6. இங்கு சக்தி வீண் விரையமாவதை தடுக்க யாது செய்வீர்?
7. மின்னைப் பயன்படுத்தி தையல் இயந்திரத்தை இயக்க பயன்படுத்த வேண்டிய அமைப்பு யாது?
8. வினா 7 இல் நீர் குறிப்பிட்ட அமைப்பில்
   a) நடைபெறும் சக்தி மாற்றம் யாது?
   b) காணப்படும் கூறுகள் எவை?
   c) எவ்விதிக்கமைய இது தொழிற்படுகின்றது?

02) A




1. தரப்பட்ட அமைப்பு பூவின் எப்பகுதி யாகும்?
2. A-D வரையான பகுதிகளைப் பெயரிடுக.
3. பகுதி A மகரந்தமணியைப் பெறும் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?
4. பகுதி A ஐ மகரந்தமணி சென்றடைய உதவும் காரணிகளை குறிப்பிடுக.
5. பகுதி A வேறோர் பூவிலிருந்து மகரந்த மணியைப் பெற்று விருத்தியடையும் போது ஏற்படும் அனுகூலங்கள் யாவை?
6. கருக்கட்டலின் பின் C, D யில் ஏற்படும் மாற்றங்கள் எவை?
7. பூக்கள் உருவாக்கத்தினால் ஏற்படும் இனப்பெருக்கம் எவ்வாறு அழைக்கப்படும்?

**B.** தாவரங்களின் தொடர்ச்சியான நிலவுகைக்கு வித்துக்கள் பரவப்படல் அவசியமானதாகும்.

1. வித்து முளைத்தலுக்குத் தேவையான காரணிகள் எவை?
2. பதர் வித்துக்கள் என்றால் என்ன?
3. விவசாயிகள் பதர் வித்துக்களை எவ்வாறு வேறாக்குவர்?
4. செயற்கையாக இனம்பெருகும் முறைகள் இரண்டு தருக.

**03) A. 800g திணிவுடைய இயங்கும் பொருளொன்றின் வேகம் தூரத்துடன் மாறுபடும் வீதம் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.**

| நேரம் (se) | 0 | 10 | 20 | 30 | 40 | 50 | 60 | 70 | 80 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வேகம் $ms^{-1}$ | 0 | 5 | 10 | 15 | 20 | 20 | 20 | 10 | 0 |

1) தரப்பட்ட தரவைப் பயன்படுத்தி வேக நேர வரைபு வரைக.
2) இயக்கத்திற்கான ஆர்முடுகலை காண்க.
3) மாறா வேகத்தில் சென்ற நேரம் யாது?
4) மாறா வேகத்தை $kmh^{-1}$ இல் தருக.
5) பொருள் இயங்கிய மொத்தத் தூரம் யாது?
6) இயக்கத்திற்கான சராசரிக் கதியை காண்க.
7) அமர்முடுகலின்போது இயங்கும் பொருளில் தொழிற்பட்ட விசையின் பருமன் யாது?

8) மேற் குறிப்பிட்ட வினாவில் பயன்படுத்திய விதி யாது?

B. படத்தில் காட்டியவாறு மரக்குற்றி நீரில் வைத்து நிறுக்கப்பட்டுள்ளது.



1. மரக்குற்றியை படிப்படியாக நீரில் அமிழ்த்தும்போது விற்றராசின் வாசிப்பிற்கு யாது நிகழும்?
2. உமது விடைக்கான காரணம் யாது?
3. மரக்குற்றி நீரில் முற்றாக அமிழும்போது வெளியேறும் திரவத்தின் கனவளவு தொடர்பாக யாது கூறுவீர்?
4. வினா (3) இல் பயன்படுத்தப்படும் விதி யாது?

04) **A.** நியூரோனின் அமைப்பு படத்தில் தரப்பட்டுள்ளது.




1. A-E வரையான பகுதிகளைப் பெயரிடுக.
2. இது எவ்வகையான நரம்புக்கலமாகும்?
3. அமைப்பு A, E இற்கிடையிலான வேறுபாடுகள் எவை?
4. நரம்பிணைப்பு எனப்படுவது யாது?

B. இலங்கையில் பரவலாக கழுத்தில் உள்ள சுரப்பிகளினால் தொண்டையில் வீக்கம் காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

1. இச் சுரப்பியினால் சுரக்கப்படும் ஓமோன் யாது?
2. இது எந்நோய்க்குரிய அறிகுறியாகும்?
3. இதை எவ்வாறு நிவர்த்திக்கலாம்?
4. இவ் ஓமோன் மிகையாக சுரப்பதால் ஏற்படும் விளைவு யாது?

**C.** மாம்பழத்தைக் கண்டதும் வாயில் உமிழ்நீர் சுரக்கின்றது.

1. இச் செயற்பாட்டில் தூண்டல், துலங்கல், வாங்கி, விளைவுகாட்டி என்பவற்றைக் குறிப்பிடுக.
2. இச் செயற்பாட்டில் கணத்தாக்கம் கடத்தப்படும் பாதையை எழுதுக.

**05)** மனிதனின் குருதிச் சுற்றோட்டத் தொகுதியின் மாதிரியமைப்பு தரப்பட்டுள்ளது.




A. 1. X,Y,Z என்பவற்றைப் பெயரிடுக.

2. இரட்டைக் குருதிச் சுற்றோட்டம் என்பதனால் நீர் அறிந்துகொள்வது

3. **a** இல் உள்ள குருதிக்கும் b யில் உள்ள குருதிக்கும் உள்ள வேறுபாடு யாது?

4. **b.** இதயத்தின் அறைகளில் தடித்த சுவரையுடைய அறை யாது? காரணம் தருக.

5. நாடி, நாளத்திற்கிடையேயான கட்டமைப்பு ரீதியான வேறுபாடுகள் 2 தருக.

6. இதயமுடுக்கியின் அமைவிடம் யாது? அதன் தொழில் யாது?

B. குருதிச் சுற்றோட்டம் தொடர்பான நோய்களை இனம் காண்பதற்கு பல பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. ECG பரிசோதனை மூலம் இதயம் தொடர்பாக எவ்விபரங்கள் அறிந்து கொள்ளப்படுகின்றன?

2. மேற்குறிப்பிட்ட சோதனை மூலம் அறிந்துகொள்ளக்கூடிய நோய் யாது?

3. குருதி மாற்றீடின்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் இரண்டு தருக.

4. நிணநீருக்கும் குருதிக்குமிடையிலான வேறுபாடு 2 தருக.

5. நிணநீர் கானினூடாக நிணநீர் எச்செயற்பாட்டினூடாக கடத்தப்படுகிறது.

**06) ஆய்வுகூடத்தில் காணப்பட்ட மக்னீசிய நாடாத்துண்டை எடுத்து அதனைச் சிறிதளவு நேரம் வெப்பமேற்றிய மாணவன் மக்னீசியம் வளியில் எரியாது என்ற கூற்றை முன்வைத்தான்.**

1. உலோகங்களை இனம்காண உதவும் இயல்புகள் 4 தருக.

2. மக்னீசியம் எரியாமைக்கு காரணம் யாது?

3. மக்னீசியத்தை எரியச் செய்வதற்கு யாது செய்வீர்?

4. மக்னீசியம் எரியும்போது
   1) உமது அவதானங்கள் எவை?
   2) இத்தாக்கத்திற்கான தாக்க சமன்பாட்டைத் தருக.
   3) உருவாகும் விளைவின் இரசாயனப் பெயர் யாது?

5.
1) 6 g மக்னீசியத்தை முற்றாக எரிக்கத் தேவையான ஒட்சிசனின் அளவு யாது?
2) உருவாகும் விளைவின் திணிவு யாது?
3) விளைவில் மக்னீசியத்தின் சதவீதத்தை காண்க. (Mg-24, O-16)

**7. A மின்சுற்று ஒன்றின் வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது.**




1. ஆளியை மூடும்போது உமது அவதானம் யாது?

2. இந்நிலையில் மின்குமிழின் தடை யாது?

3. மின்குமிழ் இழை ஆக்கப்பட்ட உலோகம் யாது?

4. இவ் உலோகம் கொண்டுள்ள இயல்புகள் யாவை?

5. 10 நிமிடங்கள் மின் வழங்கப்பட்டதாயின் மின்குமிழ் பயன்படுத்திய மின்சக்தியின் அளவைக் கணக்கிடுக.

6. மின்குமிழினுள் அடைக்கப்பட்ட வாயு யாது?
மேற்குறிப்பிட்ட வாயு அடைக்கப்பட்டதற்கான காரணம் யாது?

7. மின்சக்தியினால் வெப்பத்தைப் பிறப்பிக்கும் சாதனங்களில் பயன்படுத்தப்படும் இழை ஆக்கப்பட்டுள்ள உலோகம் யாது?

8. வினா (3), வினா (7) ஆகியவற்றில் நீர் குறிப்பிட்ட இரு உலோகங்களிற்கும் இடையிலான வேறுபாட்டினைக் குறிப்பிடுக.

**B. உலோகத் தாதுக்களிலிருந்து, உலோகப் பிரித்தெடுப்பு முறைகளாக மின்பகுப்பும், இரசாயனத் தாழ்த்தலும் பயன்படுத்தப் படுகின்றன.**

1. மின்பகுப்பின் அனுகூலம் ஒன்று மின்முலாமிடலாகும்.
   a) மின்முலாமிடலின் அவசியம் யாது?
   b) மின் முலாமிடப்படும்போது கவனத்திற்கொள்ள வேண்டியவை எவை?

2. உலோகத் தாது என்றால் என்ன?

3. உமக்குத் தெரிந்த 2 உலோகத்தாதுக்களின் பெயர்களைத் தருக.

**8. பார்ப்பதற்கு உதவும் கட்புலனாகும் ஒளி அலைகளின் வீச்சு கட்புலனாகும் திருசியம் எனப்படும். இவ்வாறான திருசியம் படத்தில் காட்டப்பட்டுள்ளது.**




A. 1. கட்புலனாகும் திருசியம் தோன்றும் இயற்கை நிகழ்வு ஒன்று தருக.

2. இதில் A,b என குறிப்பிடப்பட்ட நிறங்களைப் பெயரிடுக.

3. சூரியஒளி இவ்வாறு நிற ஒளிகளாகப் பிரிகை அடைவதற்கான காரணத்தைத் தருக.




4. மேற்தரப்பட்ட அமைப்புக்களில் எப்பொழுதும் பொருளின் மாய விம்பத்தை தரும் அமைப்புக்கள் எவை?

5. உமக்கு அமைப்பு A தரப்பட்டு நீர் அதனைப் பயன்படுத்தி எரியும் மெழுகுதிரிச் சுவாலையின் உருப்பெருத்த விம்பத்தை திரையில் பெற்றால்

a) மெழுகுதிரி எங்கு வைக்கப்படல் வேண்டும்?

b) தோன்றிய விம்பத்தின் இயல்புகளைத் தருக.

**B. நரம்புக்கருவிகளில் வேறுபட்ட சுருதியை ஆக்க இழைகள் காணப்படுகின்றன.**

1. வெவ்வேறு சுருதியை உருவாக்க அவ் இழைகளில் காணப்படும் இயல்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.

2. கருவியை இசைக்கும்போது இழையில் தோன்றும் அலையியக்கம் எவ்வாறு அழைக்கப்படும்?

3. இசை எமது காதை வந்தடையும்போது எவ் அலையியக்கத்தில் வந்தடைகின்றது?

4. இழையின் அலையியக்கத்திற்கும் காதை ஒலி அலை அடையும் அலையியக்கத்திற்கும் இடையே காணப்படும் வேறுபாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

**9. எவையேனும் ஐந்தினை விஞ்ஞான ரீதியாக விளக்குக.**

1. தொலைத்தொடர்புக் கோபுரங்கள் அமைக்கப்படும்போது கூம்பு வடிவத்தில் அமைக்கப்படுகின்றது.

2. பூமத்தியரேகையை அண்டிய பகுதியில் காணப்படும் தாவரங்கள் படை கொண்டதாகவும் துருவத்தை நோக்கிச் செல்லும்போது கூம்புருவாக கிளை கொண்டதாகவும் காணப்படுகிறன.

3. செப்பு சல்பேற்றுக் கரைசலினுள் மக்னீசிய நாடாத் துண்டுகளை இட்டபோது நீலநிறம் படிப்படியாகக் குறைவடைந்து சென்றது. ஆனால் வெள்ளித்துண்டுகளை இடும்போது மாற்றம் ஏதும் அவதானிக்கப்பட வில்லை.

4. கப்பியைப் பயன்படுத்தி கிணற்றிலிருந்து நீரை அள்ளும்போது பொதுவாக சுமையைவிட கூடிய எத்தனம் பிரயோகிக்கப்படுகின்றது.

5. தூயநீர் மின்னைக் கடத்துவதில்லை. ஆனால் தூயநீரில் கறியுப்பைக் கரைத்தபோது மின்னைக் கடத்துகின்றது.

6. நவீன விவசாய தொழில்நுட்பத்தில் அதிகளவில் இழையவளர்ப்பு முறையே விரும்பப்படுகிறது.

10. இலங்கையின் பிரதான உணவாக நெல் அரிசிச்சோறு பயன்படுத்தப் படுகிறது.

1.
a) அரிசியில் காணப்படும் பிரதான போசணைக்கூறு யாது?
b) இதனை இனம்காண உதவும் சோதனைப்பொருள் யாது?

2.
a) இத்தாவரத்தில் இப்போசணைக்கூறு உருவாக்கப்படும் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?
b) இச்செயற்பாட்டிற்கான சமன்செய்த தாக்க சமன்பாட்டைத் தருக.
c) இதன்போது ஏற்படும் சக்தி மாற்றம் யாது?
d) தாவர இலைகளில் இச்செயற்பாடு நடைபெற்றுள்ளதை அறிவதற்காக மேற்கொள்ளப்படும் பரிசோதனையைப் படிமுறையாகத் தருக.

3.
a) இலையில் தயாரிக்கப்பட்ட உணவுத் தாவரத்தின் ஏனைய பகுதி களுக்கு கொண்டு செல்லும் இழையம் எது?
b) ஆணிவேரில் உணவு சேமிக்கும் தாவரங்கள் 2 தருக.

4.
a) ஆவியுயிர்ப்பு என்றால் என்ன?
b) ஆவியுயிர்ப்பில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் எவை?
c) நாகதாளியில் ஆவியுயிர்ப்பைக் கட்டுப்படுத்த காணப்படும் இசைவாக்கங்கள் 2 தருக.

1. தூய்மையற்ற பதார்த்தங்களிலிருந்து தூய பதார்த்தங்களை வேறாக்கும் முறைகள் எவை?
2. தூய பதார்த்தத்திற்கும் தூய்மையற்ற பதார்த்தத்திற்குமிடையில் உள்ள வேறுபாடுகள்

| | தூய பதார்த்தம் | தூய்மையற்ற பதார்த்தம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4 | | |

# தண்டனையை அதிகரிக்க அவசரசட்டம் மத்திய அமைச்சரவையில் முடிவு



பெண்களுக்கு எதிரான குற்றச் செயல களில் ஈடுபடுவோருக்கு தண்டனையை அதிகரிக்க அவசர சட்டம் கொண்டு வர மத்திய அமைச்சரவை நேற்றுமுன்தினம் இரவு முடிவு செய்தது.

இதன்படி, பாலியல் பலாத்கார குற்றச் செயலில் ஈடுபடுவோருக்கு குறைந்தபட்சமாக 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படும். கும்பலாக பலாத்காரத்தில் ஈடுபடுவோர் சாகும் வரை சிறையில் ஆயுள் தண்டனை அனு பவிக்க வேண்டும். கொடுமையான பாலி யல் குற்றங்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்படும்.

டில்லியில் ஓடும் பஸ்ஸில் 6 பேர் கும்பலால் மருத்துவ மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து நாடு முழுவதும் கொந்த ளிப்பு ஏற்பட்டது.

இதுபோன்ற கொடூர குற்றங்களில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்று கோரி போராட் டங்கள் நடந்தது. இதைத் தொடர்ந்து பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க தண்டனையை கடுமையாக்குவது, துரிதமாக வழக்கு விசாரணையை முடித்து தீர்ப்பளிப்பது பற்றி பரிந்து ரைக்க உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஜே.எஸ்.வர்மா தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இதில், முன்னாள் நீதிபதி லைலா சேத், முன்னாள் சொலிசிட்டர் ஜெனரல் கோபால் சுப்பிரமணியம் ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்றிருந்தனர். இந்த குழு தனது அறிக்கையை கடந்த 23 ஆம் திகதி மத்திய அரசிடம் தாக்கல் செய்தது. அதில், பாலியல் பலாத்காரம் செய்பவர்களுக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனையும், கும்பலாக பாலியல் பலாத்காரத்தில் ஈடுபடுபவர்களுக்கு ஆயுள் தண்டனையும் வழங்கும்படி பரிந் துரை செய்யப்பட்டிருந்தது. ஆனால், மரண தண்டனை விதிக்க வர்மாகுழு பரிந்துரை செய்யவில்லை.

இந்த நிலையில், வர்மாகுழுவின் அறிக்கையை பரிசீலிக்க மத்திய அமைச் சரவையின் சிறப்புக் கூட்டம் டெல்லியில் நேற்றுமுன்தினம் மாலை நடந்தது. கூட்டத்துக்கு பிரதமர் மன்மோகன் சிங் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில், பெண்களுக்கு எதிரான வன்முறையில் ஈடுபடுவோருக்கு கடுமை யான தண்டனை விதிப்பது குறித்து விவாதிக்கப்பட்டது. பெண்களுக்கு எதி ரான வன்முறையில் ஈடுபடுவோரை கடுமை யாக தண்டிக்க அவசர சட்டம் கொண்டு வர முடிவு செய்யப்பட்டது.

## 110 ஆவது பிறந்த நாள் கொண்டாடிய மூதாட்டி



தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டம் புதுமந்து பகுதியைச் சேர்ந்த 110 வயது மூதாட்டி தனது பிறந்த நாளை நேற்றுக் கொண்டாடினார்.

நீலகிரி மாவட்டம் ஊட்டியை அடுத்த புதுமந்து பகுதியைச் சேர்ந்தவர் ருஜ்ஜம்மாள். இவருக்கு கடந்த ஜனவரி 25 ஆம் திகதியுடன் 110 வயது நிறை வடைந்துள்ளது.

ஆனால் அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் மரணமடைந்ததை யடுத்து, அவரது பிறந்த நாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது.

உறவினர்கள் புடைசூழ கேக் வெட்டி பிறந்த நாளை ருஜ்ஜம்மாள் சிறப்பாக கொண்டாடினார்.

தொடர்ந்து பால், தயிர் மற்றும் நெய் சாப்பிட்டதே தான் உடல் நலத்துடன் இருப்பதற்கு காரணம் என்றும், ஒரு போதும் தான் வேலை பார்க்காமல் ஒரே இடத்தில் உட்கார்ந்ததில்லை எனவும் அந்த மூதாட்டி தெரிவித்தார்.

ருஜ்ஜம்மாளுக்கு 10 மகள்களும், 5 மகன்களும் பிறந்ததில் தற்போது 5 மகள்கள் உயிரோடு இருக்கின்றனர்.

மூத்த மகளுக்கு 78 வயதும், இளைய மகளுக்கு 56 வயதும் ஆகிறது. இவருக்கு 125 கொள்ளுபேரன், பேத்திகள் உள்ள னர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சட்டீஸ்கர் மாநிலத்தில் [illegible]00 ஜோடிகளுக்கு திருமணம்



சட்டீஸ்கர் மாநிலம், ராய்ப்பூ ரில் ஒரே நேரத்தில் 2100 ஜோடி களுக்கு திருமணம் நடை பெற்றது.

முதலமைச்சர் ராமன்சிங் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மணமக்கள் அனை வருக்கும் அவரவர் பாரம்பரிய முறைப்படி திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

இதற்கான மொத்த செலவை யும் சட்டீஸ்கர் அரசே ஏற்றுக் கொண்டது. ஏழ்மையினாலும், வரதட்சனைப் பிரச்சினை காரண மாகவும் பாதிக்கப்படுபவர் களுக்கு உதவும் வகையிலேயே இத்தகைய திருமண நிகழ்ச்சி நடத்தப்படுவதாக ராமன் சிங் தெரிவித்தார்.

பல்வேறு இனத்தைச் சேர்ந்த மணமக்களின் உறவினர்களும் இந்த பிரமாண்டமான திருமண விழாவில் கலந்து கொண்ட னர்.

## பொட்டு சுரேஷ் கொலை வழக்கில் சந்தேக நபர்கள் 9 பேர் சரண்

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மகன் அழகிரியின் விசுவாசி, பொட்டு சுரேஷ் வெட்டி படுகொலை செய்யப் பட்டார். இந்நிலையில் இந்த வழக்கில், 7 பேர் நத்தம் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளனர்.

மேலும் மேலூர் நீதிமன்றத்தில் இருவர் சரணடைந்த தாகவும் கூறப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டம், நத்தத்தில் சபாரத்தினம், சந்தானம், ராஜு, லிங்கம், செந்தில், சேகர், கார்த்திக், என்கிற 7 பேர் சரணடைந்துள்ளனர்.

சரணடைந்துள்ள 7 பேரும் மதுரை கீரைத்துறையைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

# விஸ்வரூபம் தொடர்பாக முத்தரப்பு பேச்சுவார்த்தை

நடிகர் கமலஹாசனின் 'விஸ் வருபம்' பட விவகாரத்தில் பிரச் சினையை முடிவுக்கு கொண்டு வருவதற்காக, கமல் தரப்பும், இஸ்லாமிய அமைப்புகளும் நேற்று பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டிருந்தன.

ஆனால், கமலஹாசன் நேரில் வர வேண்டும் என இஸ்லாமிய அமைப்புகள் நிபந்தனை விதித் ததையடுத்து பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டது.



இந்த நிலை யில் படத்தை திரையிட நட வடிக்கை எடுக் கக் கோரி திண் டுக் கல்லில் ரசி கர்கள் சார்பில் மாவட்ட ஆட்சி யரிடம் மனு கொடுக்கப்பட்டது.

இதற்கிடையே தலைநகர் புது டில்லி உள்ளிட்ட வட மாநிலங்களில் 'விஸ்வ ரூபம்' நேற்று வெளியானது.

மும்பை நகரில் மட்டும் 70 திரையரங்குகளில் படம் திரை யிடப்பட்டது.

நேற்று முன்தினம் காலை யில் படம் வெளியான திரைய ரங்குகளில் இரசிகர்கள் கூட்டம் அலைமோதியது.

படத்துக்கு நல்ல வரவேற்பு இருந்ததாக திரையரங்கு உரிமையாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

அதேநேரத்தில், இந்த படத் தில் யார் மனதையும் புண் படுத்தும் வகையிலான காட்சி கள் இல்லை என படம் பார்த்த இரசிகர்கள் கூறினர்.

இதனிடையே, நேற்றுமுன் தினம் மும்பையில் முகாமிட்டி ருந்த நடிகர் கமலஹாசன் நேற்று சென்னை திரும்பினார்.

இதனைத் தொடர்ந்து, சென்னை தலைமைச் செயலகத் தில், 'விஸ்வரூபம்' படத்தை திரையிடுவது தொடர்பாக முத் தரப்புப் பேச்சுவார்த்தை நடை பெறும் என எதிர்பார்க்கப்படுகி றது.

## கார்கில் ஊடுருவலுக்கு திட்டம் முஷாரப் தான் தீட்டியது

இமயமலையில் அமைந் துள்ள கார்கில் பனிச் சிகரத்தை ஆக்கிரமிக்க பாக்.முன்னாள் அதிபரும், அப்போதைய இரா ணுவத் தளபதியுமான பர்வேஷ் முஷாரப் மற்றும் 4 தளபதிகளே திட்டம் தீட்டினர் என பாகிஸ் தான் இராணுவ ஓய்வுபெற்ற லெப்டினனட் ஜெனரல் சாகித் அசீஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த 1999 ஆம் ஆண்டு, இந்திய- பாகிஸ்தான் எல்லைக் கட்டுப்பாடுக் கோட்டுப் பகுதி யில், இமயமலையில் அமைந் துள்ள கார்கில் பனிச் சிகரத்தை ஆக்கிரமிக்கும் நோக்குடன் பாகிஸ்தான் போர் தொடுத்தது.

ஆனால், இந்திய இராணு வத்தின் அதிரடி நடவடிக்கை யால் பாகிஸ்தானின் முயற்சி தோல்வியடைந்தது. இந்நிலை யில், கார்கில் ஊடுருவலுக்கு முன்பாக பாகிஸ்தான் முன்னாள் அதிபரும், அப்போதைய இரா ணுவ தளபதியுமான பர்வேஷ் முஷாரப் இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைந்துள்ளது தெரிய வந்துள்ளது.

## காங்கிரஸுக்கு எதிராக டி.ராஜேந்தர் போட்டி



வருகிற நாடாளுமன்றத் தேர்த லில் காங்கிரஸ் கட்சிக்கெதிரான அணியில் லட்சிய தி.மு.க. செயல்படும் என்று அதன் தலைவர் விஜய டி.ராஜேந்தர் கூறினார்.

கடந்த நாடாளுமன்ற தேர்த லின்போது கள்ளக்குறிச்சி தொகுதியில் லட்சிய தி.மு.க. சார்பில் அதன் தலைவர் விஜய டி.ராஜேந்தர் போட்டியிட்டார்.

கள்ளக்குறிச்சியில் தங்கி யிருந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட அவர், 24.4.2009 அன்று இரவு தனது மனைவி உஷாவை சென்னைக்கு இரயில் ஏற்றிவிட சின்னசேலம் இரயில் நிலை யத்தில் இரவு 10 மணியளவில் நின்றார்.

அப்போது தே.மு.தி.க. ஒன்றிய செயலாளர் சின்னசாமி தலைமையில் 6 பேர் கொண்ட கும்பல் விஜய டி.ராஜேந்த்ரை, வேட்பு மனுவை வாபஸ் பெறு மாறு மிரட்டியதாகக் கூறப்படு கிறது.

இது தொடர்பாக சின்ன சேலம் பொலிஸ் நிலையத்தில் விஜய டி.ராஜேந்தர் கொடுத்த புகாரின்பேரில் ஒன்றியச் செய லாளர் சின்னசாமி, குமார், கோபி என்கிற கோபிநாத், சூர்யா, தாமோதரன், அறிவு என்கிற அறிவழகன் ஆகியோர் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட் டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறா ரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# இந்தியா வலுப்பெற அமெரிக்கா உதவுகிறது

## விடைபெறமுன் ஹிலாரி பெருமிதம்



ஆசிய பசிபிக் பகுதியில் இந்தியா வலுப்பெற அமெரிக்கா உதவி வருகிறது என்று அந் நாட்டு வெளியுறவு அமைச்சர் பொறுப்பில் இருந்து விடைபெற்றுள்ள ஹிலாரி கிளிண்டன் தெரிவித்துள்ளார். கடந்தவியாழக்கிழமை அமெரிக்க வெளியுறவு அமைச்சராக தனது கடைசி உரையை அவர் நிகழ்த்தினார். அதில்,

இந்தியாவின் நவீன பொருளாதாரக் கொள்கைகளுக்கு அமெரிக்கா எப்போது ஆதரவாக இருக்கும். ஆசிய பசிபிக் பகுதியில் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா வலுவடைய அமெரிக்கா தொடர்ந்து உதவி வருகிறது. வரும் காலங்களிலும் ஆயுதப் பரவலைத் தடுப்பது அமெரிக்காவின் முக்கியக் கொள்கையாக இருக்கும். முக்கியமாக ஈரான், வடகொரியாவில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆசியா, லத்தீன் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கான பொருளாதாரக் கொள்கைகளிலும் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

தங்கள் பகுதியில் சீனா சிறப்பான வளர்ச்சி பெற்று வருவதை அமெரிக்கா வரவேற்கிறது. ஏற்கெனவே சக்தி வாய்ந்த நாடுகளாக நிலைநிறுத்திக் கொண்டுள்ள அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கும் இப்போது புதிதாக சக்தி வாய்ந்த நாடாக உருவாகி வரும் சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கும் இடையிலான உறவு எந்தவகையில் இருக்கும் என்பது தொடர்பான பல ஆண்டுக் கேள்விக்கு புதிய பதிலை எழுத அமெரிக்கா தயாராகி வருகிறது.

அமெரிக்கா எப்போதும் உலகில் அதிகம் மதிக்கப்படும் நாடாகவும், உள்நாட்டில் வலுவாகவும் உள்ளது. நாட்டின் இராணுவ பலமும், பொருளாதார பலமும் சர்வதேச அளவில் தலைமை வகிப்பதற்கு அடித்தளம் அமைத்துள்ளது. அதிபர் ஒபாமாவின் தலைமையில் ஈராகில் போரை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளோம். ஆப்கானிஸ்தானில் நிலையான மாற்று அரசை ஏற்படுத்தியுள்ளோம். பயங்கரவாதி ஒசாமா பின்லேடனுக்கு உரிய தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. அமெரிக்காவில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

# பட்டாசு லொறி வெடிப்பு; சீனாவில் 26 பேர் பலி



சீனாவில் மத்திய பகுதியில் லியான்யங்காங் மற்றும் கோர்காஸ் நகரங்களை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை அமைந்துள்ளது.

இந்தச் சாலை வழியாக பட்டாசுகளை ஏற்றிக்கொண்டு ஒரு லொறி சென்றது.

மியான்ஷி என்ற இடத்திலுள்ள பாலத்தின் மீது குறித்த லொறி செல்லும் போது திடீரென்று பட்டாசுகள் பயங்கரமாக வெடித்து சிதறியதில் பாலம் சுமார் 80 மீற்றர் நீளத்திற்கு உடைந்து விழுந்தது. அதில் சென்ற 6 வாகனங்கள் தூக்கி வீசப்பட்டு நொறுங்கின.

இந்தக் கோர விபத்து நேற்று முன்தினம் காலை 8.52 மணி அளவில் நடைபெற்றதாகவும் இதில் 26 பேர் பலியானதாகவும் சீனத் தேசிய வானொலி அறிவித்தது.

தகவல் கிடைத்ததும் அதிகாரிகளும், தீயணைப்புப் படையினரும் விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர். படுகாயம் அடைந்த பலரை காப்பாற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்தின் காரணமாக அந்த சாலையில் வாகனப் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

# பதவி விலகினார் ஹிலாரி
## ஜான் கெர்ரி பதவியேற்பு



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அரசில் வெளியுறவுத்துறை அமைச்சராக ஹிலாரி கிளிண்டன் இருந்து வந்தார். 4 ஆண்டுகள் இப்பதவி வகித்த அவர் ஒபாமா 2ஆவது முறை ஜனாதிபதியான பின்பு இப்பதவியில் தொடர விரும்பவில்லை. எனவே 65 வயதான அவர் வெளியுறவுத்துறை அமைச்சர் பதவியில் இருந்து நேற்று விலகினார். இதையொட்டி அவருக்கு பிரிவுபசார விழா நடந்தது. ஹிலாரி கிளிண்டன் பதவி விலகியதை தொடர்ந்து புதிய வெளியுறவுத்துறை அமைச்சராக 69 வயதான ஜான்கெர்ரி நியமனம் செய்யப்பட்டார்.

# சாலமோன் தீவுகளில் நிலநடுக்கம்

சாலமோன் தீவுக்கடற்கரை பகுதிகளில் நேற்றுக் காலை மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 6.7 ஆக பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் அமைப்பு வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்படுகிறது. மேலும், இந்நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# மாலியின் கடைசி நகரத்தையும் கைப்பற்றியது பிரெஞ்சுப் படை



ஆபிரிக்க நாடான மாலியில் ஒரு பகுதியைத் தீவிரவாதிகள் பிடித்து வைத்துள்ளனர்.

காவோ, திம்க்டு, கிடால் ஆகிய முக்கிய நகரங்கள் அவர்கள் பிடியில் இருந்தன. மாலி நாடு முன்பு பிரெஞ்சு நாட்டின் காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்தது.

எனவே பிரான்சின் உதவியை மாலி நாடியது. இதனால் பிரெஞ்சுப் படைகள் மாலிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தீவிரவாதிகளுக்கெதிராக பிரெஞ்சு இராணுவம் போரில் ஈடுபட்டது. அவர்கள் தீவிரத் தாக்குதல் நடத்தி காவோ, திம்க்டு இரு நகரையும் கைப்பற்றினார்கள். கடைசியாக கிடால் நகரம் மட்டும் தீவிரவாதிகளின் பிடியில் இருந்தது.

நேற்றுமுன்தினம் இந்த நகருக்குள் பிரெஞ்சுப்படைகள் புகுந்தன. இராணுவ ஹெலிகொப்டர்கள் உதவியுடன் 4 விமானங்களில் வீரர்கள் கிடால் விமானத் தளத்தில் இறங்கினார்கள். பின்னர் ஆயுதங்களுடன் நகருக்குள் சென்றனர்.

பிரெஞ்சு படையினரை எதிர்த்து ஆரம்பத்தில் தீவிரவாதிகள் சிறிய அளவில் தாக்குதல் நடத்தினார்கள். ஆனால் பிரெஞ்சுப் படைக்கு தாக்குபிடிக்க முடியாது என்று கருதிய அவர்கள் ஊரை விட்டு வெளியேறினார்கள்.

எனவே கிடால் நகரை பிரெஞ்சுப் படைகள் கைப்பற்றிக்கொண்டனர். தற்போது தீவிரவாதிகள் கிராமப் பகுதிகளுக்குள் சென்று விட்டனர். தொடர்ந்து அவர்கள் மீது தாக்குதல் நடத்த பிரெஞ்சுப் படை தயாராகி வருகிறது.

கனவே நைஜர், ஜாட் ஆகிய நாடுகளின் படைகளும் மாலிக்கு உதவுவதற்காக அங்கு முகாமிட்டுள்ளன. அனைத்து படைகளும் சேர்ந்து தீவிரவாதிகள் மீது கூட்டுத்தாக்குதல் நடத்துவதற்கு தயாராகி வருகின்றன.

# அமெரிக்கத் தூதரகம் மீது துருக்கியில் குண்டுத்தாக்குதல்

துருக்கி தலைநகர் அங்காராவில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் வெள்ளிக்கிழமை நிகழ்ந்த தற்கொலைப்படை வெடிகுண்டுத் தாக்குதலில் இருவர் உயிரிழந்தனர். தூதரகத்தின் நுழைவு வாயிலில் இருந்து பாதுகாப்புச் சோதனைப் பகுதியில் இத்தாக்குதல் நிகழ்ந்துள்ளது. இதில் பாதுகாப்புப் பணியில் இருந்த வீரர்களில் ஒருவரும், வெடிகுண்டுடன் வந்த பயங்கரவாதியும் உயிரிழந்துவிட்டதாக முதல்க் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. தூதரகத்துக்கு எதிரே இரு உடல்கள் கிடந்ததாக அப்பகுதியில் உள்ள சிலர் தெரிவித்துள்ளனர்.

குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். எத்தனை பேர் காயமடைந்தார்கள் என்பது குறித்து விவரங்கள் தெரியவரவில்லை. சம்பவம் தொடர்பாக கூடுதல் தகவல்களைப் பெற தூதரகத்தைத் தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்ள செய்தி நிறுவனங்கள் முயற்சி மேற்கொண்டன. ஆனால் தொலைபேசி அழைப்புக்கு எவரும் பதிலளிக்கவில்லை.

தற்கொலைப்படை பயங்கரவாதி தூதரகத்திற்குள் நுழைந்து தாக்குதல் நிகழ்த்தும் நோக்குடன் வந்துள்ளார். ஆனால் பாதுகாப்புச் சோதனையின் போது பிடிபட வாய்ப்பு இருந்ததால் அங்கேயே வெடிகுண்டை வெடிக்கச் செய்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலால் தூதரகத்தில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. அங்கிருந்த அதிகாரிகள், ஊழியர்கள் அனைவரும் உடனடியாக பாதுகாப்பு அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டுவிட்டனர். ஜேர்மனி, பிரான்ஸ் தூதரகங்களும் சம்பவம் நிகழ்ந்த இடத்துக்கு அருகில்தான் உள்ளன. குண்டு வெடிப்பை அடுத்து அப்பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.



# வெடித்துச் சிதறிய ரஷ்ய ரொக்கட்

அமெரிக்காவின் தொலைத்தொடர்புச் செயற்கைக்கோளை தாங்கிச் சென்ற ரஷ்ய ரொக்கட் நேற்று காலை பசுபிக் கடலில் விழுந்து நொறுங்கியது. ஹவாய்த் தீவுக்கு அப்பால் மிதக்கும் ரொக்கட் ஏவுதளத்திலிருந்து ஏவப்பட்ட இந்த ரொக்கட், புறப்பட்ட 40 விநாடிகளில் வெடித்துச் சிதறி கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது. எனினும் இந்த விபத்தினால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

# உள்நாட்டு அரசியல் சூழ்நிலையை விளங்கிக் கொள்ளாத பிரபாகரன்

## தனபால கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல்

உள்நாட்டு அரசியல் சூழ்நிலைகளை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் விளங்கிக் கொள்ளவில்லை என முன்னாள் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபாகரனுக்கு காணப்படும் ஏகபோக அதிகாரங்கள் ஏனையோருக்கும் இருக்கும் என அவர் எதிர்பார்க்கின்றார். ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க எதிர்நோக்கிய அரசியல் நெருக்கடி நிலைமைகளை பிரபாகரன் புரிந்துகொள்ளவில்லை. என தனபால தெரிவித்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி, அப்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோருடன் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் நடத்திய சந்திப்பின் அடிப்படையில் இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அப்போதைய அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்டட் இந்தக் குறிப்பினை அனுப்பி வைத்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் வன்முறைகளை கண்டித்து ஓகஸ்ட் 19 ஆம் திகதி அமெரிக்க அரசாங்கம் வெளியிட்ட கருத்துக்கு நன்றி தெரிவிப்பதாக தனபால தெரிவித்துள்ளார். சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதி சந்திரிகாவின் தனிப்பட்ட விருப்பமாக அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமாதானம் நோக்கி மக்களை நகர்த்தும் பணி அரசியல் பொறிமுறைமையின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டுமென தனபால தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் துரிதகதியில் சமாதான பேச்சுவார்த்தைக்கு திரும்பாவிட்டால், அதனை ஜே.வி.பி. பயன்படுத்திக் கொள்ளும் என அவர் குறிப்பிட்டுள்ளார். கிழக்கில் முஸ்லிம் மக்களை ஜே.வி.பி.யினர் பயன்படுத்தி குழப்பங்களை ஏற்படுத்தக் கூடும் என ஜயந்த தனபால குறிப்பிட்டுள்ளார். சமாதான பேச்சுக்களைத் தொடர முடியும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.



யாழ். இந்து அமைப்புக்களின் ஒன்றியம் மற்றும் யாழ்.வணிகர் கழகத்தின் அனுசரணையுடன் பெண்களை குடும்பத்தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு 12 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிக்கூடு, கோழித்தீவனம் மற்றும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 30 கோழிக்குஞ்சுகள் என்பன கடந்த வியாழக்கிழமை காரைநகர் பிரதேச செயலகத்தில் திட்ட இணைப்பாளர் செல்வி ஆர். இரட்ணேஸ்வரி தலைமையில் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.
பயனாளி ஒருவருக்கு காரைநகர் பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் காரைநகர் அமைப்பாளருமான வி.கண்ணன் கோழிக்கூடு வழங்குவதையும் அருகில் வணிகர் கழக தலைவர் நிற்பதையும் காணலாம்.

### ஜெனிவா...

இந்நிலையில், இலங்கை தொடர்பான மற்றொரு தீர்மானத்தை அடுத்த மாதம் நடைபெறவுள்ள மனித உரிமை மாநாட்டில் அமெரிக்கா கொண்டுவரவுள்ளது. முக்கியமாக இலங்கைக்கு எதிரான புலிகளின் சார்பு சக்திகளின் பிரசாரத்தை முறியடிப்பதற்கான உத்தியோக பூர்வ மட்ட தூதுக்குழுவுக்கு ஜெனிவாவிலுள்ள இலங்கை யின் நிரந்தர பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தலைமை தாங்குவார் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜெனிவாவில் கடந்தவருடம் இலங்கைக்கு ஆதரவு திரட்டுவதற்காக பல அமைச்சர்கள் தங்கியிருந்தனர். இம்முறை இராஜதந்திர அலுவலர்களே முக்கிய பாத்திரம் வகிப்பர் என இந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மாநாட்டில் இலங்கைக்கு ஆதரவான சீனா, ரஷ்யா, கியூபா போன்ற நாடுகள் மனித உரிமை மாநாட்டில் அங்கம் வகிக்காது. மாறாக ஐரோப்பிய நாடுகளின் அங்கத்துவமே அதிகரித்திருக்கும் நிலையும் காணப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### இலங்கைக்கு...

ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் அபிவிருத்திக்கு பூரணமான ஒத்துழைப்பு தொடர்ச்சியாக வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என்ற போதிலும், நாட்டு மக்களின் சிவில் மற்றும் அரசியல் சுதந்திரத்தை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் முன்மாதிரியாக செயற்படவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

### உயர்தரத்தில்....

அழிவுப் போக்குகளுக்கு இடம் கொடுக்காது, கல்வியில் கவனம் செலுத்தி எதிர்கால அபிவிருத்திக்குத் துணையாக வர வேண்டும். அண்மையில் கூட தவறான வழிநடத்தலினால் சில மாணவர்கள் பிரச்சினைகளில் சிக்கியுள்ளனர். இவர்களின் விடுதலையும் விரைவில் ஏற்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்நிகழ்வில் உரைநிகழ்த்தும் போது தெரிவித்தார்.

தற்போதைய கல்வி வளர்ச்சி கண்டு மகிழ்வதாகவும், இவ்வாறான கல்வி வளர்ச்சி வீதத்தில் நோக்குமிடத்து போதாது எனவும் எதிர்காலத்தில் மாணவர்கள் கல்வி வளர்ச்சி ஊக்கப்படுத்த வேண்டும் என வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பேசுகையில் தெரிவித்தார். (இ)

### பரிந்துரைகள்....

பரிந்துரைகளை காத்திரமாக அமுல்படுத்த வேண்டுமென அரசாங்கம் விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உலக நாடுகள் இலங்கையுடன் கபடமற்ற உறவைப் பேணினால், சகல துறைகளிலும் வெளிப்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

மனித உரிமைகள் அல்லது வேறும் விடயங்கள் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்கள் உலகின் அனைத்து நாடுகளுக்கும் ஒரே விதமாக அமைய வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நம்பகத்தன்மையுடன் சம நிலையான வகையில் இந்தப் பிரச்சினைகள் அணுகப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

## மாவட்ட ரீதியாக அமைச்சுப் பதவி?

(கொழும்பு)

இறுதியாக இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மாவட்ட ரீதியில் அதிக வாக்குகளை பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படலாம் என அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மாவட்ட அமைச்சர் என்ற ரீதியில் இப்பதவிகள் வழங்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இந்நியமனங்கள் இடம்பெறுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இதன்போது நாமல் ராஜபக்ஷ, லக்ஷ்மன் வசந்த பெரேரா, நிஷாந்த முத்துஹெடிகம உட்பட சிலருக்கு அமைச்சுப்பதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### சர்வதேச...

ளுக்கும் ஜனவரி மாதம் 30 ஆம் திகதிகளில் வீசா அனுமதி நிராகரிக்கப்பட்டுள்ளதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை குறித்து லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் மீது கடும் ஆட்சேபனை வெளியிட்டுள்ளதாக தெரிவித்துள்ள சர்வதேச சட்டவல்லுனர்கள் சங்கத்தின் மனித உரிமைகளுக்கான அமைப்பு, இந்த நிலை குறித்து சிறந்த முடிவை எடுப்பதற்காக அதிகாரிகளுடன் கலந்துரையாட தயாராக இருப்பதாக அறிவித்துள்ளதாக பி.பி.சி. உலக சேவை சுட்டிக்காட்டியுள்ளது.

### மக்கள்....

யும் நடத்துவதற்கே அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறான திட்டத்தின் அடிப்படையிலேயே அமைச் சரவையில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டதாக தெரி விக்கப்படுகின்றது.

## இந்திய முன்னாள் பிரதம நீதியரசரின் இலங்கைக்கான விஜயம் இரத்து

(கொழும்பு)

இலங்கைக்கு வருகைதரவிருந்த இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசர் ஜே.எஸ். வர்மா தனது பயணத்தை இரத்துச் செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க விவகாரம் தொடர்பாக ஆராயும் வகையில் அவர் நேற்று முன்தினம் இலங்கையை வந்தடைவார் என எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவர் தனது பயணத்தினை இரத்துச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வர்மாவின் இலங்கைக்கான விசா இரத்துச் செய்யப்பட்டமையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அவர் அதனை மறுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசர் ஜே.எஸ். வர்மா தலைமையிலான குழு, கலாநிதி ஷிராணி பண்டார நாயக்க பதவி நீக்கம் செய்யப்பட்டமை தொடர்பில் ஆராய்வதற்காக சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தினாலேயே நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வீடுக் கிணற்றிலிருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், நீராவியடியைச் சேர்ந்த குடும்பஸ்தரின் சடலம் வீட்டுக் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. நீராவிடியைச் சேர்ந்த அபூர்வசிங்கம் சிறிகாந்தன் (வயது-54) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் 10 வருடங்கள் ஜேர்மனியில் வசிந்துவந்ததாகவும் அங்கிருந்து நாட்டுக்கு திருப்பியனுப்பப்பட்ட நிலையில் அவர் வீட்டில் தனியாக வசித்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவருடைய மூன்று பிள்ளைகளும் ஜேர்மனியில் வசிப்பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. பக்கத்து வீட்டுத்தோட்டத்திலிருந்து ஒருவகையான துர்நாற்றம் வீசியது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்தே பொலிஸார் அவரது வீட்டுக் கிணற்றிலிருந்து சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலம் தொடர்பில் யாழ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜோன் கெரிக்கு வாழ்த்து

புதிதாக நியமிக்கப்பட்ட அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரிக்கு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் வாழ்த்துக்களை அனுப்பி வைத்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் அமெரிக்காவுடன் முழு ஒத்துழைப்புடன் செயலாற்றுவதற்கு தனது விருப்பத்தையும் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தனது வாழ்த்துக்கள் அடங்கிய கடிதத்தினை பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

### யாழ்.வருகிறார்...

ந்து வைக்கும் ஜனாதிபதி 24 மணிநேர மின் விநியோக நடவடிக்கைகளை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளார். வடமாகாணத்தில் உயர்தரப் பரீட்சையில் அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைச் சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

### பயணத்திற்கான...

நால்வர் இணையத்தளம் மூலம் பெற்றுக்கொண்டிருந்தது முழுமையான விசா அனுமதி இல்லை என்றும் விமான நிலையத்தில் இறங்கிய பின் வீசா பெறுவதற்கான முன்-அனுமதியே அது என்றும் அதனை இரத்துசெய்வதற்கு தமக்கு அதிகாரம் உள்ளது என்றும் அவர் கூறினார்.

நாட்டின் நன்மை கருதி பல காரணங்களுக்காக நாட்டுக்குள் நுழைவதற்கான வீசா அனுமதியை ரத்துசெய்வதற்கு தமக்கு அதிகாரம் உள்ளது என்றும் சூலானந்த பெரேரா சுட்டிக்காட்டினார்.

# சிவப்பு மழைக்கான காரணம் பூமிக்கு வெளியில் உயிரினங்கள்

## – நாசா விஞ்ஞானிகள் கண்டறிவு

(கொழும்பு)

பொலநறுவை - அரலகங்கவில பிரதேசத்தில் அண்மையில் கிடைக்கப்பெற்ற விண்கல்லின் பகுதிகள் மற்றும் நாட்டின் பல பகுதிகளில் பெய்த சிவப்பு மழையிலும் பூமிக்கு வெளியில் உயிரினங்கள் வாழ்வதற்கான உறுதிப்பாடுகள் தென்படுவதாக நாசா நிபுணர் தெரிவித்துள்ளார்.

சிவப்பு மழை மற்றும் விண்கல் பகுதிகள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக இலங்கை வந்துள்ள நாசா நிறுவனத்தின் நிபுணர் பேராசிரியர் சந்ரா விக்கிரமசிங்க இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

நவீன தொழிநுட்ப உபகரணங்களை பயன்படுத்தி சோபோன் மற்றும் காடிஸ் பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசோதனைகளுக்கு அமைய குறித்த விண்கல் மாதிரிகளில் உள்ள நுண்ணுயிர்கள் பல மில்லியன் வருடங்களுக்கு முன்னர் அழிந்து போன உயிரினங்கள் எனத் தெரியவந்துள்ளது.

இது பூமிக்கு வெளியில் அண்டவெளியில் உயிரினங்கள் வாழ்கின்றன என்று புகழ்பெற்ற நட்சத்திர ஆய்வாளரான ஸ்ரீமத் பெ.'.ட் ஹொயில் முன்வைத்துள்ள பென்ஸ்பர்மியா அடிப்படை கொள்கை இதனூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை வந்துள்ள நாசா நிபுணர்கள் இருவரும் தெரிவித்துள்ளனர்.

வரலாற்றில் கடந்த 500 வருடங்களுக்குள் பூமிக்கு வெளியில் உயிரினங்கள் வாழ்கின்றன என்ற கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் விண்கல் பகுதிகள் வீழ்த்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆனால் பொலநறுவை அரலகங்வில பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற விண்கல் பாசானத்தில் வேற்று கிரக உயிரினங்கள் இருப்பதை கண்டறிய முடியவில்லை என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் அத்துல சேனாரத்ன அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொலநறுவை சிவன் ஆலயத்தில்

# கல்சிலேட்டு அகற்றப்பட்டு அகழப்பட்டது புதையல்



மகா பராக்கிரமபாகு மன்னன் யுகத்தில் கட்டப்பட்டதாக வரலாறு கூறும் பொலநறுவை சிவன் ஆலயத்தின் சிவலிங்கம் இருக்கும் இடத்தில் காணப்படும் கல் சிலேட்டு அகற்றப்பட்டு அங்கு மூன்று அடி குழி பறித்து இனந்தெரியாத சிலர் புதையல் அகழ்ந்துள்ளனர்.

சம்பவம் குறித்து தகவல் அறிந்த பொலன்னறுவை பொலிஸ் நிலைய விசேட குழு நேற்றுக்காலை அவ்விடத்திற்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இந்த புதையல் அகழ்வு இடம்பெற்றுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது. சிவன் கோயிலுக்கு அருகில் கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் புதையல் அகழ்வு இடம்பெற்றது.

வரலாற்று சிறப்பு மிக்க குறித்த சிவன்கோயில் பகுதிக்கு இரவில் காவலாளி இல்லாததால் இவ்வாறு புதையல் அகழ்வு இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# இலஞ்ச ஊழலை ஒழிக்க சிறந்த நிர்வாகம் அவசியம்

## கூறுகிறார் அமைச்சர் குமார வெல்கம

(கொழும்பு)

சிறப்பு திறமைவாய்ந்த நிர்வாகி இல்லாது இலங்கை போக்குவரத்து சபையில் இலஞ்ச, ஊழல் மோசடிகளை தடுக்க முடியாதென போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

பாணந்துறை டிப்போவில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் காரணமாக இலங்கை போக்குவரத்து சபைக்கு நாளாந்தம் 10 சதவீதம் நட்டம் ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலஞ்ச, ஊழலை ஒழிப்பதற்கு இலங்கை போக்குவரத்து சபையில் ஓய்வு பெற்ற சிறந்த திறமைவாய்ந்த அதிகாரிகளிடம் ஆலோசனை பெறவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது இலங்கை போக்குவரத்து சபையின் எதிர்காலத்திற்கு வெளிச்சத்தை கொடுக்கும் என அவர் கூறியுள்ளார்.

# அதிகளவு புகையை கக்கும் வாகனங்கள் மீது பரிசோதனை

அதிகளவில் புகையை வெளியேற்றும் வாகனங்களை சுற்றிவளைப்பதற்காக வீதிப் புகைப் பரிசோதனை நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக மோட்டார் வாகனப்போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெற்றோல் மற்றும் டீசல் வாகனங்களை பரிசோதிப்பதற்காக 45 இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் எஸ்.எச்.ஹரிச்சந்திர தெரிவித்தார்.

அதிகளவில் புகையை வெளியேற்றும் வாகனங்கள் தொடர்பில் நாளாந்தம் பல முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும் அதுகுறித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்

இவ்வகையான வாகனங்கள் உரிய முறையில் திருத்துவதற்கு வாகன உரிமையாளர்களுக்கு காலஅவகாசம் வழங்கப்படடுள்ளது. உரிய காலப் பகுதிக்குள் வாகனங்களை திருத்திக்கொள்ளாத பட்சத்தில் அந்த வாகனங்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுப்பதாகவும்.

அதன் பின்னர் அத்தகைய வாகனங்களை மற்றுமொருவருக்கு கைமாற்றுவதற்கோ அல்லது அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளவோ முடியாத நிலை ஏற்படும்.

இலங்கை போக்குவரத்து சபை, முப்படைகள் மற்றும் பொலிஸாருக்கு சொந்தமான வாகனங்களுக்கும் 1975 ஆம் ஆண்டிற்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கும் புகைப் பரிசோதனை தேவைப்படமாட்டாது எனவும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# சுயதொழில் கொடுப்பனவு

(ஆனைக்கோட்டை)

ஐ.ஓ.எம் நிறுவனத்தின் அனுசரணையுடன் மாதகல் பகுதியில் உள்ள விசேட தேவையுடடையவர்களில் தெரிவு செய்யப்பட்ட 20 பேருக்கு சுயதொழில் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதற்காக 40 ஆயிரம் ரூபா வினை சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஊடாக வழங்கப்படவுள்ளதாக சமுர்த்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

(104)

# மண்டையோடுகள் அதிகரிப்பு

(மாத்தளை)

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் இருந்து இதுவரையில் 136 மனித மண்டையோட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் குறித்த இடத்தில் இருந்து 142 மனித எலும்புக் கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் குறித்து விசாரணை நடாத்த மேலதிக குழுவொன்றும் அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதுவரை நடாத்தப்பட்ட விசாரணைகளில் மண்டையோடு மற்றும் எலும்புக்கூடுகள் குறித்த முழுமையான தகவல் வெளியிடப்படவில்லை.

# படகுப் பயணிகள் தொடர்பாக புதிய திட்டம் தயாரிக்கும் அஸி.

(கொழும்பு)

படகுப் பயணிகள் தொடர்பில் புதிய திட்டமொன்று அமுல்படுத்தப்படும் என அவுஸ்ரேலியா அறிவித்துள்ளது.

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் அவுஸ்ரேலியா நோக்கி படகு மூலம் செல்வதனை தடுக்க கடுமையான கொள்கைகள் பின்பற்றப்பட உள்ளதாக அந்நாட்டு குடிவரவுப் பேச்சாளர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரும், விமானப்படையினரும் புகலிடக் கோரிக்கையாளர்களின் படகுகள் தொடர்பாக கண்காணிக்க உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். அவுஸ்ரேலியாவை சென்றடையும் வரையில் காத்திருக்காது இடைநடுவில் படகுகளை மடக்கிப் பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

புகலிடம் கோரிவரும் இலங்கையர்கள் அவுஸ்ரேலியாவில் தங்க வைக்கப்படமாட்டார்கள் எனவும் வேறும முகாம்களில் தங்கவைக்கப்படுவார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். புகலிடக் கோரிக்கையாளர்களை தடுத்து நிறுத்துவதற்கு சகல வழிகளிலும் முயற்சி எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# மனித எலும்புக்கூட்டு எச்சம் பெட்டகத்துடன் கண்டெடுப்பு

பொலநறுவை - பெதிவெவ சீத்த மாளிகை பகுதியில் புராதன பெட்டகம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மத்திய மாகாண தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் இந்தப் பெட்டகத்தை கண்டெடுத்துள்ளதாக தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த பெட்டகத்தை பரிசோதனை செய்து பார்த்தபோது அதில் மனித எலும்புக்கூட்டு எச்சம் காணப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

எனினும் இது குறித்து மேலும் பரிசோதனை நடாத்தவுள்ளதாக அவர் கூறினார்.

# பல்கலை மானியங்கள் ஆணைக்குழுவிற்கு புதிய தலைவர் நியமனம்



(கொழும்பு)

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புதிய தலைவராக பேராசிரியர் ஷனிகா ஹிரிபுரேகம கடந்த முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவின் 8 ஆவது தலைவராக நியமிக்கப்பட்டுள்ள இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக ஆறு வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றியவராவார்.

இவருக்கு நேற்று முன்தினம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் சிறப்பு வரவேற்பளிக்கப்பட்டது.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராயர் கலாநிதி அதி வணக்கத்துக்குரிய ஒஸ் வேல்ட் கோமிஸ் அவர்களும், ஆணைக்குழுவின் உபதலைவர் உட்பட பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 பெப்ரவரி 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.